# தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022–2023

### மானியக் கோரிக்கை எண். 32

**திரு. சி.வி. கணேசன்**
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| **1. தொழிலாளர் துறை** | | | |
| 1.1. | செயல்பாடுகள் | | 07 |
| | 1.1.1. | முறைப்படுத்தும் பணிகள் | 07 |
| | 1.1.2. | நலத்திட்ட பணிகள் | 09 |
| 1.2. | நிர்வாக அமைப்பு | | 10 |
| 1.3. | தொழிலாளர் துறையில் அமலாக்கப்படும் சட்டங்கள் | | 11 |
| | 1.3.1. | தொழில் உறவுகள் தொடர்புடைய சட்டங்கள் | 12 |
| | 1.3.2. | ஊதியம் வழங்குவது சம்பந்தமான சட்டங்கள் | 25 |
| | 1.3.3. | சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள் | 35 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | 1.3.4. | வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல் தொடர்பான சட்டங்கள் | 43 |
| | 1.3.5. | நுகர்வோர் பாதுகாப்பு சார்ந்த சட்டங்கள் | 66 |
| 1.4. | நல வாரியங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்கள் | | 71 |
| | 1.4.1. | தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் | 71 |
| | 1.4.2. | அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் | 76 |
| 1.5. | தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் | | 94 |
| 1.6. | தமிழ்நாடு கட்டுமானக் கழகம் | | 96 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1.7. | மாநிலங்களுக்கு இடையேயான புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் | 98 |
| 1.8. | நீடித்த வளர்ச்சி இலக்குகள் | 100 |
| 1.9. | தொழில் நடத்துவதில் எளிய நடைமுறை | 102 |
| 1.10. | சட்டமுறை எடையளவுச் சட்டத்தின் கீழ் இணையதளம் மூலமாக முத்திரையிடும் பணி | 105 |
| 1.11. | தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் அறிமுகம் | 106 |
| 1.12. | சிறப்பு சாதனைகள் | 108 |
| 1.13. | மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம் | 115 |
| 1.14. | தோட்டத் தொழிலாளர் ஆலோசனை குழு | 116 |
| 1.15. | குறைந்தபட்ச ஊதிய (மாநில) ஆலோசனை வாரியம் | 117 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| 1.16. | இஷ்ரம் | | 118 |
| 2. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் | | | |
| 2.1. | நிர்வாக அமைப்பு | | 123 |
| 2.2. | தொழிற்சாலைகள் சட்ட அமலாக்கப் பிரிவு | | 124 |
| 2.3. | கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு | | 124 |
| | 2.3.1. | தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களை தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்தல் | 126 |
| | 2.3.2. | தொழிற்சாலைகளில் எளிதாகத் தொழில் தொடங்கும் நடைமுறைகளை ஊக்குவித்தல் | 127 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | 2.3.3, | ஆய்வு முறை | 130 |
| | 2.3.4. | சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம் | 135 |
| | 2.3.5. | நீடித்த வளர்ச்சிக்கான நிலையான இலக்கிற்கான குறியீடுகளை மேம்படுத்த இவ்வியக்ககம் சார்ந்த முயற்சிகள் | 137 |
| | 2.3.6. | பட்டாசுத் தொழிற்சாலை ஆய்வுகள் | 141 |
| | 2.3.7. | தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் | 144 |
| | 2.3.8. | இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகள் | 145 |
| | 2.3.9. | பெரும்விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள் | 146 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | 2.3.10. | மனை மதிப்பீட்டுக் குழு | 147 |
| 2.4. | தொழிற்சாலைகளில் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேம்பாடு குறித்த செயல்பாடுகள் | | 149 |
| | 2.4.1. | உடல்நல மேம்பாட்டு செயல்பாடுகள் | 149 |
| | 2.4.2. | இரைச்சலின் அளவினைக் கண்காணித்தல் | 150 |
| | 2.4.3. | பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு | 151 |
| | 2.4.4. | பாதுகாப்புப் பயிற்சி | 153 |
| | 2.4.5. | அழுத்தக்கலன் பாதுகாப்பினை உறுதி செய்தல் | 154 |
| | 2.4.6. | தொகுப்பு தனிநபர் விபத்துக் காப்பீட்டுத் திட்டம் | 155 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | 2.4.7. | பாதுகாப்பு விருதுகள் வழங்கும் திட்டம் | 157 |
| 2.5. | கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு விதிகள், 2006 மற்றும் அதனைச் சார்ந்த தொழிலாளர் நலச் சட்டங்களை கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் அமலாக்கம் செய்தல் | | 158 |
| | 2.5.1. | கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் எளிமையாக்கப்பட்ட தொழில் தொடங்கும் நடைமுறைகளை ஊக்குவித்தல் | 160 |
| | 2.5.2. | ஆய்வு முறை | 163 |
| | 2.5.3. | சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம் | 166 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | 2.5.4. | கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு | 167 |
| | 2.5.5. | சிறப்பு முயற்சிகள் | 169 |
| | 2.5.6. | பட்டாசுத் தொழிற்சாலைகளில் நிகழும் விபத்துகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் | 174 |
| **3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை வேலைவாய்ப்புப் பிரிவு** | | | |
| 3.1. | வேலைவாய்ப்புப் பிரிவின் நிர்வாக கட்டமைப்பு | | 181 |
| 3.2. | வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களின் செயல்பாடுகள் | | 184 |
| 3.3. | வேலைவாய்ப்பு இணையதளம் | | 187 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 3.4. | சிறப்பு புதுப்பித்தல் சலுகை | 189 |
| 3.5. | தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் | 190 |
| 3.6. | தன்னார்வ பயிலும் வட்டங்கள் | 191 |
| 3.7. | கல்லூரிகளில் இலவசப் பயிற்சி வகுப்புகள் | 193 |
| 3.8. | மெய்நிகர் கற்றல் இணையதளம் | 194 |
| 3.9. | தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரம் | 195 |
| 3.10. | திறன் தமிழகம் இதழ் மற்றும் வெளியீடுகள் | 196 |
| 3.11. | மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புப் பிரிவுகள் | 198 |
| 3.12. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள் | 199 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 3.13. | பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் | 201 |
| 3.14. | மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம் | 201 |
| 3.15. | வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகைத் திட்டம் | 202 |
| 3.16. | அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கான வேலை வாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டம் | 204 |
| 3.17. | மாதிரித் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் | 205 |
| 3.18. | தனியார் துறை பணியமர்த்தல் | 206 |
| 3.19. | தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம் | 209 |
| 3.20. | ஏர்மேன் தேர்விற்கான சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | 212 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 3.21. | தொலைக்காட்சி வாயிலாக போட்டித் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் | 213 |
| 3.22. | புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் அமைத்தல் | 215 |
| 3.23. | 'முதல்வரின் முகவரி' துறையில் இருந்து பெறப்பட்ட மனுக்கள் மீதான நடவடிக்கைகள் | 216 |
| 3.24. | நீடித்த வளர்ச்சி இலக்குகள் | 217 |
| | **பயிற்சிப் பிரிவு** | |
| 3.25. | நிர்வாக அமைப்பு | 220 |
| 3.26. | நீண்ட காலத் திறன் பயிற்சி திட்டங்கள் | 223 |
| 3.27. | கைவினைஞர் பயிற்சித் திட்டம் | 223 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | 3.27.1. | அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் | 225 |
| | 3.27.2. | பாதிக்கப்படக்கூடிய பிரிவினரை மேம்படுத்துதல் | 226 |
| | 3.27.3. | திறன் பயிற்சி மூலம் மாற்றுத்திறனாளி மாணவர்களை முன்னேறச் செய்தல் | 231 |
| | 3.27.4. | திறன் பயிற்சி மூலம் மகளிரை முன்னேறச் செய்தல் | 232 |
| | 3.27.5. | சிறைவாசிகளுக்கு திறன் பயிற்சி வழங்குதல் | 234 |
| | 3.27.6. | உயர்ரக தொழிற்பிரிவுகள் | 234 |
| 3.28. | மாணவர்களுக்கான கூடுதல் உதவிகள் | | 236 |
| 3.29. | தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் | | 237 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| 3.30. | தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு உதவி வழங்குதல் | | 238 |
| 3.31. | அகில இந்திய தொழிற்தேர்வு மற்றும் தேசிய அளவிலான சான்றிதழ் | | 239 |
| 3.32. | பயிற்சியாளர்களுக்கு வேலைவாய்ப்பு | | 240 |
| 3.33. | பொது மற்றும் தனியார் கூட்டமைப்பின் வழியாக அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல் | | 241 |
| 3.34. | தொழில் மதிப்பு விரிவாக்கத்திற்கான திறன்களை வலுப்படுத்துதல் (STRIVE) | | 245 |
| 3.35. | அரசு தொழிற்பயிற்சி நிலையத்தினை மாதிரி தொழிற்பயிற்சி நிலையமாக மேம்படுத்துதல் | | 252 |
| 3.36. | தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம் (ATS) | | 254 |
| | 3.36.1. | தொழிற்பழகுநர் பயிற்சி | 254 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| | 3.36.2. | தேசிய தொழிற்பழகுநர் ஊக்குவிப்புத் திட்டம் | 256 |
| | 3.36.3. | பயிற்சி பெறாதவர்களை (Freshers) நிறுவனங்களில் தொழிற்பழகுநர்களாக சேர்த்தல் | 258 |
| | 3.36.4. | மாநில தொழிற்பழகுநர் கண்காணிப்புக் குழுமம் | 259 |
| 3.37. | தொழிற்பள்ளிகள் வாயிலாக திறன் பயிற்சி வழங்குதல் | | 260 |
| 3.38. | சிறந்த பயிற்றுநருக்கான விருது | | 262 |
| 3.39. | பணியாளர்கள் பயிற்சி | | 262 |
| 3.40. | டிஜிட்டல் வழிக் கற்றல் முறை | | 264 |
| 3.41. | தொழிற்சாலை – தொழிற்பயிற்சி நிலையம் இணைப்பு | | 266 |
| 3.42. | புதிய முன்முயற்சிகள் | | 267 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| | **4. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்** | |
| 4.1. | தேசிய திறன் தகுதி கட்டமைப்பு (NSQF) - யை செயல்படுத்துதல் | 278 |
| 4.2. | பயிற்சித் திட்டங்களின் மதிப்பீடு மற்றும் சான்றளித்தல் | 280 |
| 4.3. | பயிற்சி நிறுவனங்களுக்கான அங்கீகாரம் அளித்தல் | 280 |
| 4.4. | 2021– 2022– ஆம் ஆண்டு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்கள் பற்றிய விவரங்கள் (மார்ச் 2022 வரை) | 282 |
| 4.5. | தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணைய முகப்பின் அம்சங்கள் | 287 |
| 4.6. | உலகத்திறன் போட்டிகள் 2022 | 290 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 4.7. | மேம்பட்ட திறன் பயிற்சி | 292 |
| 4.8. | அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல் (RPL) | 294 |
| 4.9. | பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா 3.0 (PMKVY 3.0) | 295 |
| 4.10. | சங்கல்ப் - வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள திறன் பெறுதல் மற்றும் அறிவிற்கான விழிப்புணர்வுத் திட்டம் (SANKALP) | 297 |
| 4.11. | உயர் திறன் மேம்பாட்டு மையங்கள் | 301 |
| 4.12. | பல்நோக்கு திறன் மேம்பாட்டு மையம் | 304 |
| 4.13. | நான் முதல்வன் | 305 |
| 4.14. | சிறப்புத் திட்டங்கள் | 309 |
| 4.15. | பயிற்சியை முடித்தவர்களுக்கு பயனுள்ள வேலைவாய்ப்பு வழங்குதல் | 311 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 4.16. | நீடித்த வளர்ச்சி இலக்குகள் | 312 |
| | **5. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்)** | |
| 5.1. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்வதற்கான தகுதிகள் | 316 |
| 5.2. | திட்டத்தின் நிதி ஆதாரம் | 317 |
| 5.3. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் | 318 |
| 5.4. | தமிழ்நாடு தொ.அ.ஈ. திட்ட நிர்வாக அமைப்பு | 320 |
| 5.5. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் இயங்கும் ஆயுஷ் (AYUSH) பிரிவுகள் | 321 |
| 5.6. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் பயன்கள் | 324 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|---|
| 5.7. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் இதர உதவிகள் | | 332 |
| 5.8. | மருத்துவமனை மேம்பாட்டுக் குழு | | 334 |
| 5.9. | காப்பீட்டு பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளில் மேற்கொண்ட மருத்துவ செலவினை மீளப்பெறுதல். | | 335 |
| | 5.9.1. | தொகுப்பு ஒப்பந்தம் (ஒப்பந்தம் செய்து கொண்ட மருத்துவமனைகள்) | 335 |
| 5.10. | கோவிட்-19 நோய் தொற்றின்போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | | 337 |
| 5.11. | தொ.அ.ஈ. கழகத்தின் கோவிட்-19 நிவாரணத் திட்டம் | | 337 |

## தொழிலாளர் நலன் மற்றும்
## திறன் மேம்பாட்டுத் துறை

### 1. தொழிலாளர் துறை

தொழில் உற்பத்தியிலும், உலகளாவிய முதலீடுகளை ஈர்ப்பதிலும் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. தரமான வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் தொழிலாளர்களின் அனைத்து வகையான மேம்பாடு என்ற இரட்டைக் கொள்கைகளின் அடிப்படையில், இணக்கமான தொழில் உறவுகள் மற்றும் அமைதியைப் பேணி, முன்னேற்றத்திற்கான மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம், மொத்த உள்நாட்டு உற்பத்தித் தரவரிசையில் நாட்டிலேயே இரண்டாம் இடத்தைத் தமிழ்நாடு பெற்றுள்ளது.

**தொழிலாளர் துறையின் நோக்கங்கள்**

- வேலையளிப்பவர் மற்றும் தொழிலாளர்களுக்கு இடையேயான தொழிற்தகராறுகளை சமரசப்

பேச்சுவார்த்தைகளால் முடிவுக்குக் கொண்டு வருவதை ஊக்குவிப்பதன் மூலம் மாநிலத்தில் தொழில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதி செய்தல்.

- நீதிமுறைமைசார் பணிகளை மேற்கொள்வதன் மூலம் தொழிலாளர்களுக்கான சிறப்பான பணி நிலைமைகளை உறுதி செய்தல், தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அமைப்பு சார்ந்த தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பினை மேம்படுத்துதல்.

- நியாயமான, குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிப்பதன் மூலம் தொழிலாளர்களின் சட்டப்படியான உரிமைகளைப் பாதுகாத்தல்.

- தொழிலாளர்களின் நீண்ட கால மற்றும் குறுகிய கால பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல் மூலமும், அவர்களுக்குப் பல்வேறு

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலமும் அவர்களின் சமூக - பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.

- தொழிலாளர்களின் தரமான வாழ்க்கை மற்றும் பணித் தரத்தை உறுதி செய்வதற்காக தொழிலாளர் சட்டங்களைத் திறம்பட அமல்படுத்துதல்.

- குழந்தைத் தொழிலாளர்களை முற்றிலுமாக நீக்குவதன் மூலம் தமிழ்நாட்டினைக் குழந்தைத் தொழிலாளர் அற்ற மாநிலமாக அறிவித்தல்.

- சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்களை மேம்படுத்துவதன் மூலம் அமைப்புசாரா தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதல்.

மாநிலத்தில் முதலீட்டாளர் மற்றும் தொழில் முனைவோருக்கு இணக்கமான சூழலை ஏற்படுத்திட

இத்துறையானது தொழில் துவங்குவதில் எளிமையான நடைமுறைகளை செயல்படுத்துவதன் மூலம் வேலையளிப்போர் மற்றும் தொழில் முனைவோர் அவர்தம் தொழில்களை எளிய மற்றும் அமைதியான முறையில் மேற்கொள்ள வழிவகை செய்துள்ளது.

சமூகத் தீங்குகளான குழந்தைத் தொழிலாளர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர் முறையினை தமிழ்நாட்டிலிருந்து ஒழிக்க தொழிலாளர் துறையானது பிற சார்புத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

பல்வேறு நலத்திட்ட உதவிகளைச் செயல்படுத்துவதன் மூலம், அமைப்புசாரா தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பினை 18 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் உறுதி செய்கின்றன.

பல்வேறு நலத்திட்ட மனுக்கள் மீது விரைந்து தீர்வு காண மாநில அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது. அமைப்புசாரா தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்தும் வகையில் புதிய உத்திகளுடன் பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சி திட்டங்கள் தமிழ்நாடு கட்டுமானப் பயிற்சிக் கழகத்தால் (TAC) நடத்தப்பட்டு, அவர்கள் வெற்றிகரமாக பயிற்சி முடித்த பின் தகுந்த சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இப்பயிற்சியானது தொழிலாளர்கள் அதிக ஊதியம் பெறவும், வெளிநாட்டில் சிறந்த வேலை வாய்ப்புகளைப் பெறவும், அதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் வழி வகுக்கிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், தொழிலாளர் தொடர்புடைய பெரும்பாலான இனங்கள் பொதுப்பட்டியலில் இடம் பெற்றுள்ளதால், ஒன்றிய

அரசுக்கும், மாநில அரசுக்கும்அவற்றில் சட்டமியற்ற அதிகாரம் உள்ளது.

பொதுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள தொடர்புடைய பொருள்கள் குறித்த விவரங்கள் பின்வருமாறு :

22. தொழிற்சங்கங்கள்; தொழில் மற்றும் தொழிற்தகராறுகள்

23. சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூகக் காப்பீடு; வேலை வாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை.

24. பணி நிலைமைகள், வருங்கால வைப்புநிதி, வேலையளிப்போரின் பொறுப்புகள், பணியாளர் இழப்பீடு, செயல்பாடற்ற மற்றும் முதியோர் ஓய்வூதியம் மற்றும் மகப்பேறு நலன் உள்ளிட்ட தொழிலாளர்களின் நலன்.

33-A. தர நிர்ணயம் நீங்கலான பிற எடைகள் மற்றும் அளவைகள்

## 1.1. செயல்பாடுகள்

தொழிலாளர் துறை பணி நிலைகளை முறைப்படுத்துதல் மற்றும் நலத்திட்டங்களை அமல்படுத்துதல் ஆகிய பணிகளை செயல்படுத்துகிறது.

### 1.1.1. முறைப்படுத்தும் பணிகள் பின்வருமாறு

1. ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் இயற்றப்பட்ட பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களை அமலாக்கம் செய்தல்.

2. தொழிலாளர் உரிமைகள் காத்திட நீதிமுறைமைசார் பணிகளை மேற்கொள்ளுதல்.

3. தொழிற்தகராறுகளை சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைத்தல்.

4. நுகர்வோர் நலன் காத்திட, சட்டமுறை எடையளவுச் சட்டம், 2009 மற்றும் சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 2011 அமலாக்கம் செய்தல்.

5. குறைந்தபட்ச ஊதியச்சட்ட அட்டவணையில் இடம் பெற்றுள்ள தொழில் இனங்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தினை நிர்ணயம் / மறு நிர்ணயம் மற்றும் அமலாக்கம் செய்தல்.

6. கொத்தடிமைத் தொழிலாளர்களை மீட்டு மறு வாழ்வு அளித்தல்.

7. அனைத்துப் பணிகளிலும் இருந்து குழந்தைத் தொழிலாளர்களை நீக்குதலும்,

அபாயகரமான பணிகள் மற்றும் செயல்முறைகளிலிலிருந்து வளரிளம் பருவத்தினரை நீக்குவதுமான செயல்பாடுகள்.

8. ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயரும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்.

### 1.1.2. நலத்திட்ட பணிகள் பின்வருமாறு

1. நலவாரியங்கள் மூலம் அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்புப் பயன்கள் வழங்குதல்.

2. பணியின் போது ஏற்படும் விபத்தின் காரணமாக மரணமடைந்த தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு /

ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு உதவித்தொகை வழங்குதல்.

3. நடமாடும் மருத்துவமனைகள், அங்கன்வாடி நிலையங்கள் மற்றும் தங்கும் இடங்கள் போன்ற சிறப்புச் சேவைகளை அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு வழங்குதல்.

4. பல்வேறு நலத் திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

5. கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்குதல்.

## 1.2. நிர்வாக அமைப்பு

தமிழ்நாட்டில், தொழிலாளர் துறையானது, 1920-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதன் தலைமையிடம் சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள டி.எம்.எஸ் வளாகத்தில் அமைந்துள்ளது. இத்துறையில் தொழிலாளர் ஆணையர்

தலைமையில், 12 தொழிலாளர் கூடுதல் ஆணையர்கள், 16 தொழிலாளர் இணை ஆணையர்கள், 24 தொழிலாளர் துணை ஆணையர்கள், 103 தொழிலாளர் உதவி ஆணையர்கள், 2 உதவி மருத்துவர்கள் (தோட்டங்கள்), 1 கணக்கு அலுவலர் மற்றும் 1 மக்கள் தொடர்பு அலுவலர், 70 தொழிலாளர் துணை ஆய்வர்கள், 220 தொழிலாளர் உதவி ஆய்வர்கள், 101 முத்திரை ஆய்வர்கள் மற்றும் 1,299 உதவி புரியும் பணியாளர்கள் ஆகியோர் உள்ளனர்.

**1.3. தொழிலாளர் துறையில் அமலாக்கப்படும் சட்டங்கள்**

தொழிலாளர் துறையில் அமலாக்கம் செய்யப்படும் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் விவரம் பின்வருமாறு :

### 1.3.1. தொழில் உறவுகள் தொடர்புடைய சட்டங்கள்

தொழிற்தகராறுகள் சட்டம், 1947, தொழிற்சங்கங்கள் சட்டம், 1926 மற்றும் தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946 ஆகியவை இவ்வினத்தில் அடங்கும்.

இச்சட்டங்கள், வேலையளிப்போர், தொழிலாளர்கள், தொழிலாளர் தரப்பு பிரதிநிதிகள் ஆகியோரிடையே நல்லுறவினை ஏற்படுத்துதல், கூட்டு பேரம், தொழிற்தாவாக்களைத் தீர்த்து வைத்தல், தொழிலாளர்களின் பணி நிலைமைகள் குறித்த விவரங்கள் மற்றும் தொழில் உறவுகள் தொடர்புடையதாகும்.

#### 1.3.1.1. தொழிற் தகராறுகள் சட்டம், 1947

தொழிற்தகராறுகள் சட்டம், 1947 மூலம் வேலையளிப்போரிடையேயும், வேலையளிப்போர்

மற்றும் தொழிலாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு இடையேயான தொழிற் தகராறுகளை விசாரித்துத் தீர்வு காணலாம்.

திறம்பட்ட சமரச பேச்சுவார்த்தைகளின் மூலமும் தொழிற் தகராறுகளை விசாரித்துத் தீர்வு காண்பதற்கான அதிகாரமன்றங்கள் மற்றும் நடைமுறைகளை வழங்குவதன் மூலமும் தொழில்துறை அமைதி மற்றும் தொழில் நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதே தொழிற்தகராறுகள் சட்டத்தின் நோக்கமாகும்.

தீர்வு அல்லது ஒப்பந்த மீறல் தொடர்பான தண்டனை நடவடிக்கைகளுக்கான நடைமுறைகளையும் இச்சட்டம் பரிந்துரைக்கிறது; மற்றும் தொழிலாளர் விரோத நடைமுறைகள், சட்டவிரோத வேலைநிறுத்தங்கள் மற்றும் கதவடைப்பு ஆகியவற்றைத் தவிர்ப்பது தொடர்பான நடவடிக்கைகளை விவரிக்கிறது.

இச்சட்டத்தின் கீழ் சமரசப் பணிகள் மேற்கொள்ள தொழிலாளர் துறை அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

01.04.2021 முதல்31.03.2022 வரையிலான காலத்தில் சமரச அலுவலர்களின் தலையீட்டின் மூலம் 1,081 தொழிற்தாவாக்களில் சுமூக முடிவுகள் எட்டப்பட்டுள்ளன. பல்வேறு தொழில் நிறுவனங்களில் 14 வேலை நிறுத்தங்கள் மற்றும் 2 கதவடைப்புகள் சுமுகமாக தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

**(அ) 2021-2022-ஆம் ஆண்டில் தீர்வு காணப்பட்ட முக்கிய தொழிற்தகராறுகள்**

**எலக்ட்ரோ ஸ்டீல் காஸ்டிங், திருவள்ளூர் மாவட்டம்**

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், எளாவூர் கிராமத்தில் Electro Steel Casting Limited என்ற தொழிற்சாலை கடந்த 1964-ஆம்

ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இந்நிறுவனம் Steel Casting குழாய்கள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

இந்த நிறுவனத்தில் 5 ஒப்பந்ததாரர்கள் மூலம் சுமார் 100 ஒப்பந்தத் தொழிலாளர்கள் பல்வேறு துணைப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். உற்பத்திக் குறைவின் காரணமாக கடந்த அக்டோபர் 2021-ல் முன்னறிவிப்பு வழங்கப்பட்டு, 6 ஒப்பந்தத் தொழிலாளர்களை மட்டும் தற்காலிகமாக பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதாகவும், இதில் 2 ஒப்பந்தத் தொழிலாளர்களை மட்டும் வேறு பணியில் ஈடுபடுத்திக் கொள்ளவும், தொழில் நிலைமை இயல்பு நிலைக்கு திரும்பியவுடன் மீதமுள்ள 4 தொழிலாளர்களுக்கு மீண்டும் பணி வழங்க பரிசீலனை செய்யப்படும் எனவும் நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டது.

இதனை ஏற்க மறுத்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் தங்களது குடும்பத்துடன் 03.01.2022 அன்று முதல் தொழிற்சாலையின் நுழைவு வாயிலில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இது தொடர்பாக தொழிற்தாவா எழுப்பப்பட்டு சென்னை, தொழிலாளர் துணை ஆணையர் (சமரசம்)-2 அலுவலகத்தில் 31.01.2022 அன்று நடைபெற்ற சமரச பேச்சுவார்த்தையில் மேற்படி ஆறு ஒப்பந்த தொழிலாளர்களின் பிரச்சனை குறித்து பேச்சுவார்த்தையில் தீர்வு காணலாம் என்றும், அதனை முன்னிறுத்தி நிரந்தர தொழிலாளர்களையும், மற்ற ஒப்பந்த தொழிலாளர்களையும் உடனடியாக பணிக்குத் திரும்ப அனுமதிக்குமாறு ஒப்பந்த தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் சமரச அலுவலரால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பிரச்சனை சுமுகமாக தீர்க்கப்பட்டுத் தொழிலாளர்கள் பணிக்கு திரும்பினர்.

**பாக்ஸ்கான் ஹான் ஹாய் டெக்னாலஜி இந்தியா மெகா டெவலப்மெண்ட் பிரைவேட் லிட், காஞ்சிபுரம் மாவட்டம்**

பாக்ஸ்கான் ஹான் ஹாய் லிமிடெட் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தத் தொழிலாளர்கள், அவர்கள் தங்கியிருந்த திருவள்ளூர் மாவட்ட விடுதியில் வழங்கப்பட்ட உணவால் ஏற்பட்ட நச்சுத்தன்மை காரணமாக 15.12.2021 அன்று போராட்டத்தில் ஈடுபட்டனர். இது, விடுதியில் உள்ள வாழ்நிலைச் சூழல்கள் மேம்பட வேண்டுமெனப் போராடத் தூண்டியது. மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் பெண் பணியாளர்கள் விடுதிக்குச் சென்றபோது, விடுதியில் வழங்கப்பட்ட உணவு உட்கொண்ட சில பெண் தொழிலாளர்கள் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்ததால்,

விடுதியில் நிலவும் பிரச்சனைகளை சரி செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தினர். பிரச்சனைகளைச் சரி செய்ய பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர், பூந்தமல்லி வட்டாட்சியர், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் இணை இயக்குநர் மற்றும் 5 பெண் தொழிலாளர்கள் அடங்கிய குழு அமைக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியானதும் தொழிலாளர்கள் கலைந்து சென்றனர். இந்நிலையில் பெண் ஊழியர் ஒருவர் உணவில் ஏற்பட்ட நச்சுத்தன்மையினால் இறந்ததாக வதந்தி பரவியதை அடுத்து மீண்டும் போராட்டம் வெடித்தது. ஃபாக்ஸ்கான் லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த ஏராளமான தொழிலாளர்கள் பெங்களூரு, சென்னை தேசிய நெடுஞ்சாலையில் போராட்டம் நடத்தியதால், பொது வாகனப் போக்குவரத்து சில மணி நேரம் பாதிக்கப்பட்டது. இப்போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன்

மேம்பாட்டுத்துறை அமைச்சர், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மற்றும் தொழிலாளர் துறை மற்றும் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகள் அடங்கிய குழுவினர் தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். காணாமல் போன பெண் தொழிலாளர்களை மீட்டு அழைத்து வரவும், விடுதி மற்றும் தங்கும் விடுதிகளில் கெட்டுப்போன உணவினை வழங்கிய பொறுப்பாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் மாவட்ட நிர்வாகத்திடம் பெண் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தனர். அனைத்துத் தொழிலாளர்களும் உடல்நிலை சீராகி அவர்களில் சிலர் தங்களது வீடுகளுக்கு திரும்பி விட்டனர் என விளக்கம் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து இப்பிரச்சனைக்கு சுமுகமான தீர்வு காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து பெண் தொழிலாளர்கள் போராட்டத்தைக் கைவிட்டு கலைந்து சென்றனர். அதன் பின்னர், பாக்ஸ்கான்

ஹான் ஹாய் லிமிடெட்-ன் விடுதியின் வசதிகளை மேம்படுத்திட சில நடவடிக்கைகளை எடுத்து தொழிற்சாலை மீண்டும் 12.01.2022 அன்று திறக்கப்பட்டு உற்பத்தி தொடங்கியது. தற்போது சுமார் 12,140 தொழிலாளர்கள் அமைதியான சூழலில் பணிபுரிகின்றனர். தொழிற்சாலையில் இயல்பு நிலை நிலவுகிறது.

**NTPC தமிழ்நாடு எனர்ஜி கம்பெனி லிமிடெட், திருவள்ளூர் மாவட்டம்**

NTPC தமிழ்நாடு எனர்ஜி கம்பெனி லிமிடெட் நிறுவனத்தில் பணிபுரியும் 2012 ஒப்பந்தத் தொழிலாளர்கள் தங்களுக்கு ஊதிய உயர்வு வழங்கக் கோரி 08.02.2022 முதல் வேலை நிறுத்தம் மேற்கொண்டனர். சென்னை கூடுதல் ஆணையர் முன்பாக 14.02.2022 அன்றுநடைபெற்ற பேச்சு வார்த்தையில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி 01.02.2022 முதல் NTECL மற்றும் UPL ஒப்பந்தத்

தொழிலாளர்களுக்கு சிறப்புப் படிகள் வழங்க ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனையடுத்து, தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு உடனடியாகப் பணிக்கு திரும்பினர்.

**(ஆ) தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் தீர்ப்பாயங்கள்**

தொழில் அமைதியின்மையை தடுப்பதற்கும், தொழில் அமைதி மற்றும் நல்லுறவினை ஊக்குவிப்பதற்கும், தொழிற்தாவா தொடர்புடைய பிரச்சினைகளின் தன்மையின் அடிப்படையில் முடிவு காணப்படாத அனைத்து தாவாக்களும் தொழிற் தகராறுகள் சட்டம் பிரிவு 10-ன்கீழ் தொழிலாளர் நீதிமன்றங்கள் அல்லது தொழில் தீர்ப்பாயத்திற்கு தீர்வு வழங்குவதற்காக அனுப்பப்படுகின்றன.

1947-ஆம் வருடத்திய தொழிற்தகராறுகள் சட்டத்தின் அட்டவணை இரண்டில் குறிப்பிட்டுள்ள தொழிலாளர் தொடர்பான இனங்கள் மீது தொழிலாளர்

நீதிமன்றங்கள், தீர்வங்கள் மற்றும் ஆணைகள் வழங்கும் மன்றங்களாகச் செயல்படுகின்றன. சமரசப் பேச்சுவார்த்தைகளில் சுமுகத் தீர்வு காண இயலாத தொழிற்தகராறுகளில் தீர்வம் வழங்க தமிழ்நாட்டில் 18 தொழிலாளர் நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. சென்னையில் 4 தொழிலாளர் நீதிமன்றங்களும், வேலூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் தலா 2 தொழிலாளர் நீதிமன்றங்களும், சேலம், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, காஞ்சிபுரம், கும்பகோணம்,ஓசூர் மற்றும் உதகமண்டலத்தில் தலா ஒரு தொழிலாளர் நீதிமன்றமும் செயல்படுகின்றன. 2021-ஆம் ஆண்டில் தொழிலாளர் நீதிமன்றங்கள் 1,298 வழக்குகளை முடித்துள்ளன.

1947-ஆம் வருடத்திய தொழிற்தகராறுகள் சட்டம், அட்டவணை 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள இனங்கள் மீது தீர்வு காணும் மன்றமாக தொழிற் தீர்ப்பாயம் செயல்பட்டு வருகிறது. சென்னையில்

இயங்கி வரும், இத்தீர்ப்பாயம் 2021-ஆம் ஆண்டில் 54 வழக்குகளில் தீர்வு கண்டுள்ளது.

### 1.3.1.2. தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946

சான்றளிக்கப்பட்ட நிலையாணையின் கீழ், தொழிலாளர்களின் பணி நிலைமைகளைத் தொழில் நிறுவனங்களின் வேலையளிப்போர் வரையறுக்க இச்சட்டம் வழிவகுக்கிறது. சான்றளிக்கப்பட்ட நிலையாணைகளைப் பெறுவதை 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் தொழில் நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தும். 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் 262 தொழில் நிறுவனங்களுக்கு, நிலையாணைகள் சான்றுகள், சம்பந்தப்பட்ட கூடுதல் தொழிலாளர் ஆணையர்களால் சான்றளிக்கப்பட்டுள்ளன.

### 1.3.1.3. தொழிற்சங்கங்கள் சட்டம், 1926

தொழிற்சங்கங்கள் சட்டம், 1926 என்பது அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்புசாராத் துறைகளில் உள்ள தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க சங்கம் அமைப்பதற்காக இயற்றப்பட்ட ஒரு ஒழுங்குமுறைச் சட்டமாகும். தொழிற்சங்கங்களைப் பதிவு செய்திடவும் மற்றும் தொழிற்சங்கங்கள் பதிவு குறித்த நடைமுறையினை ஒழுங்குபடுத்தவும், தொழிற்சங்க உறுப்பினர்களைப் பாதுகாத்திடவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டத்தின் கீழ் 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் 230 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 1.3.2. ஊதியம் வழங்குவது சம்பந்தமான சட்டங்கள்

இச்சட்டங்கள் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் மற்றும் மறுநிர்ணயம் செய்தல், உரிய காலத்தில் சம்பளம் மற்றும் மிகை ஊதியம் வழங்குதல், ஒரே வகையான பணியை ஆற்றும் ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சம ஊதியம் வழங்குவதனை உறுதி செய்கின்றன.

#### 1.3.2.1. சம்பளப் பட்டுவாடாச் சட்டம், 1936

இச்சட்டம் அங்கீகரிக்கப்படாத பிடித்தங்களற்ற ஊதியம் உரிய காலத்தில் பணியாளர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யவும் மற்றும் ஊதியம் தொடர்புடைய கேட்பு மனுக்களை விரைந்து முடிக்கவும் வழிவகை செய்கிறது. இச்சட்டம் மாதம் ரூ.24,000/- வரை மொத்தச் சம்பளம் பெறும் தொழிலாளர்களுக்குப் பொருந்தும்.

சம்பளப் பட்டுவாடா சட்டத்தின் கீழ் 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் 12,235 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், இக்காலகட்டத்தில் நீதிமன்றங்கள் மூலம் 19 வழக்குகள் முடிக்கப்பட்டு பல்வேறு முரண்பாடுகளுக்காக, வேலையளிப்பவர்களுக்கு ரூ.1,35,000/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இவை தவிர 297 கேட்பு மனுக்கள் முடிக்கப்பட்டு, ரூ.2,90,73,495/- கேட்புத் தொகை தொழிலாளர்களுக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

**1.3.2.2. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948**

1948-ம் வருட குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் நோக்கமானது இச்சட்டத்தின் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள தொழில் இனங்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்வது ஆகும். இச்சட்டம் ஊழியர்களின்

வாழ்வாதாரத்தை மட்டுமின்றி, ஊழியர்களின் செயல்திறனை பாதுகாப்பதையும் உறுதி செய்கிறது. தமிழ்நாட்டில் 94 விதமான தொழில் இனங்கள் குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948-ன் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன. இதில், கடைகள் மற்றும் நிறுவனங்கள், பொதுப் பொறியியல், கட்டுமானம், உணவு நிறுவனங்கள், தோட்டங்கள், தானியங்கிப் பணிமனைகள், பொது மோட்டார் போக்குவரத்து போன்ற 83 பணிகளுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பொதுவாக, தமிழ்நாட்டில், குறைந்தபட்ச ஊதியம் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றியமைக்கப்படுகிறது.

01.04.2021 முதல் 31.03.2022வரையிலான காலத்தில் குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948-ன் கீழ் அமலாக்க அலுவலர்களால் 24,753 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பல்வேறு

முரண்பாடுகள் கண்டறியப்பட்டமையின் தொடர் செயல்பாடாக, வேலையளிப்பவர்களுக்கு எதிராக 74 வழக்குகள் முடிக்கப்பட்டு ரூ.1,90,500/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. 1,290 கேட்பு மனுக்கள் பெறப்பட்டும், 831 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டும், தொழிலாளர்களுக்கு ரூ.6,25,08,561/- வழங்க ஆணைகிளிடப்பட்டுள்ளன.

**01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்திற்கான சாதனைகள்**

I. **இந்த காலத்தில் பின்வரும் தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் முதன்முறையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.**

   i. துணி மடிக்கும் தொழில்

   ii. மண்பாண்டங்கள் தொழில்

   iii. வீட்டு உபயோக துணிவகை உற்பத்தித் தொழில், அதாவது

படுக்கையறைத் துணிவகைகள், குளியலறைத் துணிவகைகள், வசிக்கும் அறைத் துணிவகைகள், அலங்காரத் துணிவகைகள், சமையலறைத் துணிவகைகள் மற்றும் இது போன்ற துணிவகைகள் உற்பத்தி தொழில்.

II. **இந்த காலத்தில் பின்வரும் தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.**

i. தச்சு மற்றும் கருமார் தொழில்

ii. கோணித் தொழில்

iii. காகிதம் தயாரிக்கும் தொழில் மற்றும் கைகளினால் செய்யப்படும் காகிதம் தொடர்புடைய பிற தொழில்கள்

iv. காலணிகள் தயாரிக்கும் தொழில்

v. விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த உப தொழில்கள்

vi. கயிறு தயாரிக்கும் தொழில்

III. **இந்த காலத்தில் பின்வரும் தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்து முதனிலை அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.**

i. வடிசாலைத் தொழில்

ii. இரசாயன உரத் தொழில்

iii. காட்டன் ஜின்னிங், ப்ரெஸ்ஸிங் மற்றும் காட்டன் வேஸ்ட் தொழில்

iv. அச்சகங்கள் தொழில்

v. பந்தல் அமைக்கும் தொழில்

vi. காளான் வளர்ப்புத் தொழில்

vii. அப்பளம் தயாரிக்கும் தொழில்

viii. புகையிலை தயாரிப்பு (பீடி சுற்றுதல் நீங்கலான பீடி தயாரிப்பு உட்பட) தொழில்

ix. பேக்கரீஸ் மற்றும் பிஸ்கட் தயாரிக்கும் தொழில்

x. பாத்திரங்கள் தயாரிக்கும் தொழில்

xi. செங்கல் மற்றும் ஓடுகள் தயாரிக்கும் தொழில்

xii. முந்திரி ஆலைத் தொழில்

xiii. காபி பதப்படுத்தும் தொழில்

xiv. எலக்ட்ரானிக் தொழில்

xv. பாலிதீன் தயாரித்தல், ப்ராசசிங் ஃபோம் அயிட்டம்ஸ் மற்றும் பிளாஸ்டிக் தயாரிக்கும் தொழில்.

xvi. தோட்ட நிறுவனங்கள் தொழில் அதாவது சின்கோனா, இரப்பர், தேயிலை, காபி மற்றும் ஏலக்காய் உள்ளிட்ட பயிர்களை வளர்த்து பராமரிக்கும் தோட்டங்கள்

xvii. தேங்காய் உரிக்கும் தொழில்

xviii. தோல் பொருட்கள் தயாரிக்கும் தொழில்

xix. அரிசி ஆலைகள், மாவு ஆலைகள் அல்லது பருப்பு ஆலைகள் தொழில்

xx. வெளுப்பாக்கல் அல்லது சாயம் தோய்த்தல் அல்லது இவ்விரு தொழில்கள்

xxi. கல்வி பயிற்றுவிக்கும் நிறுவனங்கள் தொழில் அதாவது, டுடோரியல் கல்லூரிகள், தொழில்நுட்ப நிறுவனங்கள், பிரைமரி அல்லது நர்சரி பள்ளிகள், அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் நடத்தப்படுவதைத் தவிர, அரசு மானியம் இல்லாமல் வணிக அடிப்படையில் நடத்தப்படும் ஆங்கில வழிப் பள்ளிகள்.

xxii. அகர்பத்தி தயாரிக்கும் தொழில்

xxiii. தோல் பதனிடுதல் மற்றும் தோல் தயாரிப்புத் தொழில்

xxiv. ஜவ்வரிசித் தொழில்

xxv. கிரானைட் தொழில்

### 1.3.2.3. போனஸ் வழங்கல் சட்டம், 1965

இச்சட்டம் 10 அல்லது அதற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இலாபம் அல்லது உற்பத்தி அல்லது உற்பத்தித்திறன் அடிப்படையில் போனஸ் வழங்கிட வழி வகுக்கிறது.

எந்தவொரு கணக்கீட்டு ஆண்டிலும் செலுத்தக்கூடிய உற்பத்தித்திறன் இணைக்கப்பட்ட போனஸ் உட்பட அதிகபட்ச போனஸ், சட்டப் பிரிவு - 31A இன் கீழ் ஒரு ஊழியரின் ஊதியத்தில் 20%-ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது.

போனஸ் வழங்கல் சட்டம், 1965–க்கான பணியாளரின் ஊதிய உச்சவரம்பு தகுதி மாதத்திற்கு ரூ.21,000/- ஆகும் .

01.04.2014 முதல் போனஸ் கணக்கீட்டிற்கு ஊழியர்களின் ஒருமாத சம்பளம் ரூ.7,000 அல்லது

உரிய அரசாங்கத்தால் அட்டவணையில் உள்ள தொழில்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் இவற்றுள் எது அதிகமானதோ அத்தொகை எடுத்துக் கொள்ளப்படும்.

### 1.3.2.4. சம ஊதியச் சட்டம், 1976

ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்குவது இச்சட்டத்தில் உறுதி செய்யப்பட்டு, பெண்களுக்கு எதிரான பாலின அடிப்படையிலான பாகுபாடு தடை செய்யப்பட்டுள்ளது. 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் மேற்கண்ட சட்டத்தின் கீழ், அமலாக்க அலுவலர்கள் பல்வேறு நிறுவனங்களில் 7,311 ஆய்வுகள் மேற்கொண்டுள்ளனர்.

### 1.3.3. சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள்

அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்குதல்

மற்றும் நலத் திட்டங்களை உருவாக்குதல் ஆகியவை இச்சட்டங்கள் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன. இச்சட்டங்கள், தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பணிக்கொடை வழங்குவதற்கும், பிழைப்பூதியம் வழங்குவதற்கும், நிரந்தரத் தகுதி வழங்குவதற்கும், பெண் தொழிலாளர்களுக்கு பேறுகாலச் சலுகைகள் வழங்குதல் மற்றும் விபத்தின் காரணமாக பணியாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கும் வழிவகை செய்கின்றன.

### 1.3.3.1. பணியாளர்கள் இழப்பீட்டுச் சட்டம், 1923

பணியாளர் இழப்பீட்டுச் சட்டம், 1923, இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட முதல் சமூகப் பாதுகாப்புச் சட்டமாக இயற்றப்பட்டது.இச்சட்டம், பணியின்போது ஏற்படும் விபத்தின் காரணமாக நிகழும் மரணம் மற்றும் ஊனத்தினால் ஏற்படும் ஊதியம் ஈட்டும் திறன் இழப்பிற்கு ஏற்ப பணியாளர்களுக்கோ

அல்லது அவர்களைச் சார்ந்தவர்களுக்கோ இழப்பீடு வழங்க வழிவகை செய்கிறது. இச்சட்டப்படி மண்டலத் தொழிலாளர் இணை ஆணையர்கள் பணியாளர் இழப்பீட்டு ஆணையர்களாக அறிவிக்கை செய்யப்பட்டு வழக்குகளை விசாரித்து ஆணைகள் பிறப்பிக்கின்றார்கள்.

இச்சட்டத்தின்படி உத்தரவிடப்படும் இழப்பீட்டுத் தொகை, வேலையளிப்பவர்களால் அல்லது காப்பீட்டு நிறுவனங்களால், ஆணையாளரிடம் வைப்பீடு செய்யப்படுகிறது. 01.04.2021 முதல் 31.03.2022வரையிலான காலத்தில் 2,975 வழக்குகள் முடிக்கப்பட்டு, மொத்தம் ரூ.76,26,28,800/- இழப்பீட்டுத் தொகையாக வழங்க ஆணைகளிடப்பட்டுள்ளன.

### 1.3.3.2. பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972

5 வருடத்திற்கு குறைவில்லாத, தொடர்பணி முடித்த தொழிலாளர்கள் வயது முதிர்வு / பணி ஓய்வு /

பணியிலிருந்து விலகுதல் / மரணம் அல்லது விபத்து மற்றும் நோயின் காரணமாக இயலாமை ஏற்படுதல் ஆகிய காரணங்களுக்காக பணிக்கொடை பெறத் தகுதியுடையவராவார்கள். இருப்பினும், இறப்பு அல்லது ஊனத்தால் பணிநீக்கம் செய்யப்பட்டால், 5 ஆண்டுகள் தொடர்ச்சியான பணி முடித்திருக்க வேண்டிய கட்டாயமில்லை. ஒரு பணியாளருக்கு அதிகபட்சமாக ரூ.20.00 இலட்சம் வரை பணிக்கொடையாக வழங்கப்படலாம்.

வட்டாரத் தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத் தொழிலாளர் துணை ஆணையர்கள் இச்சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டு அலுவலர்களாகவும், மண்டலக் கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள், மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில், 1,898 கேட்பு மனுக்கள் தீர்வு

செய்யப்பட்டு, ரூ.23,82,38,722/- பணிக்கொடைத் தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், 380 மேல்முறையீட்டு மனுக்கள் விசாரிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளன.

### 1.3.3.3. தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981

தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டு விசாரணை நிலுவையில் இருக்கும் தொழிலாளர்களுக்கு பிழைப்பூதியம் வழங்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. வட்டாரத் தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத் தொழிலாளர் துணை ஆணையர்கள் இச்சட்டத்தின் கீழ் அலுவலர்களாகவும், வட்டார இணை ஆணையர்கள் மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில், இச்சட்டத்தின் கீழ் 67 கேட்பு மனுக்கள்

முடிவு செய்யப்பட்டு, மொத்தம் ரூ.61,61,749/- பிழைப்பூதியமாக மனுதாரர்களுக்கு வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், 14 மேல்முறையீட்டு மனுக்கள் விசாரித்து முடிக்கப்பட்டுள்ளன.

**1.3.3.4. மகப்பேறு நலச் சட்டம், 1961**

பெண் தொழிலாளர்களின் மகப்பேறுக்கு முந்தைய மற்றும் பிந்தைய காலத்தில் பணி, ஊதியம் உள்ளிட்ட மகப்பேறு உதவிகள் வழங்கப்படுவதை இச்சட்டம் முறைப்படுத்துகிறது. இச்சட்டம் மகப்பேறு காலங்களில் குழந்தைப் பிறப்பு எதிர்பார்க்கப்படும் பிரசவ தினத்திற்கு முன் 8 வாரங்களுக்கு மிகாமல் மொத்தம் 26 வாரங்கள் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கிட வழிவகுக்கிறது.

01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில், இச்சட்டத்தின் கீழ், 7,108 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் ஒரு வழக்கு

நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு, வேலையளிப்பவருக்கு, பல்வேறு முரண்பாடுகளுக்காக ரூ.5,000/- அபராதம் விதிக்கப்பட்டது.

**1.3.3.5. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தரத் தகுதிவழங்கல்) சட்டம், 1981**

இச்சட்டம், ஒரு தொழில் நிறுவனத்தில் 24 மாத காலத்தில், 480 நாட்கள் தொடர்பணிபுரிந்த தொழிலாளிக்கு நிரந்தரத் தகுதி வழங்க வகை செய்கிறது. 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் இச்சட்டத்தின் கீழ் 224 மனுக்கள் முடிக்கப்பட்டு 158 தொழிலாளர்களின் பணியினை நிரந்தரப்படுத்த வேலையளிப்போருக்கு, உத்தரவுகளிடப்பட்டுள்ளன.

### 1.3.3.6. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972

இச்சட்டத்தின் கீழ் அமைப்பு சார்ந்த தொழிலாளர்களின் நலனை மேம்படுத்தவும், தொடர்புடைய நலத்திட்டங்களுக்காகவும், நிதி உருவாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 1.3.3.7. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல்) மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1982

இச்சட்டம் சில வகையான தொழில்களில் ஈடுபடும் உடலுழைப்புத் தொழிலாளர்களின் பணிநிலைமைகளை முறைப்படுத்தவும், பணிப்பாதுகாப்பினை உறுதி செய்யவும் வழிவகை செய்கிறது.

## 1.3.4. வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல் தொடர்பான சட்டங்கள்

கடைகள், வணிக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்கள், பத்திரிக்கை நிறுவனங்கள், ஒப்பந்த நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகள், தொழிலாளர்கள் பணிபுரிவதற்கேற்ற சுமுகமான சூழலை ஏற்படுத்தவும் இச்சட்டங்கள் வழி வகை செய்கின்றன.

### 1.3.4.1. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947

கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. 01.04.2021 முதல் 31.03.2022வரையிலான காலத்தில்

அமலாக்க அலுவலர்களால் 32,817 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 2,805 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, இசைவுத் தீர்வு முறையில் இணைக்கக் கட்டணமாக ரூ.8,27,750/- வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் 5 வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு ரூ.6,325/- பல்வேறு முரண்பாடுகளுக்காக அபராதமாக விதிக்கப்பட்டது.

பணியாளர்கள் தங்கள் பணி நேரங்களில் நின்றுகொண்டே பணிபுரிவதைத் தவிர்த்து, பணியிடத்தில் கிடைக்கும் தருவாயில் தாங்கள் அமர்ந்து கொள்ளும் வாய்ப்பினை பயன்படுத்தி கொள்வதற்கு ஏதுவாக ஒவ்வொரு நிறுவன வளாகத்திலும், இருக்கை வசதிகள் ஏற்படுத்தி தர, மேற்படி சட்டத்தில் 22-A என்ற புதிய பிரிவினை சேர்த்திட தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தம்) சட்டம், 2021-ல் தகுந்த திருத்தங்கள்

மேற்கொள்ளப்பட்டு அத்திருத்தச் சட்டம் 04.10.2021 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

### 1.3.4.2. **தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958**

உணவு நிறுவனங்கள் மற்றும் உணவு விடுதிகள் உட்பட பல்வேறு உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில், உணவு நிறுவன வேலையளிப்பவர்களிடமிருந்து, பதிவு, புதுப்பித்தல் மற்றும் திருத்தக் கட்டணமாக ரூ.1,56,85,861/- வசூலிக்கப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் 4,726 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 2,081 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, இசைவுத் தீர்வு முறையில் இணக்கக் கட்டணமாக ரூ.3,93,075/- வசூலிக்கப்பட்டுள்ளது.

### 1.3.4.3. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961

மோட்டார் போக்குவரத்து நிறுவனத் தொழிலாளர்களின் நலன்கள் மற்றும் பணி நிலைமைகளை பாதுகாக்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் 47 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. 645 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 238 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு இசைவுத் தீர்வு முறையில் இணக்கக் கட்டணமாக ரூ.81,200/- வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு வழக்கு நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு ரூ.3,500/- அபராதம் விதிக்கப்பட்டது.

### 1.3.4.4. தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951

தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951 மற்றும் இதன் விதிகள் தோட்டத் தொழிலாளர்களின்

சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நலனை பாதுகாக்கவும், பணி நிலைமைகளை முறைப்படுத்தவும் வழிவகை செய்கிறது. 5 ஹெக்டேர் மற்றும் அதற்கு மேற்பட்ட பரப்பரளவு, அதில் 15 தொழிலாளர்கள் மற்றும் அதற்கு மேல் பணிபுரியும் டீ, காபி, இரப்பர், ஏலக்காய் மற்றும் சின்கோனா பயிரிடப்படும் தோட்ட நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தும்.

இச்சட்டப்படி தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி, மருத்துவவசதி, குழந்தைகள் காப்பகம், கல்விவசதி, குளிர்கால பாதுகாப்பு உடை, குடிநீர் ஆகியன வேலையளிப்பவர்கள் / பயிரிடுவோர்களால் வழங்கப்பட வேண்டும்.

தலைமை தோட்ட நிறுவன ஆய்வர் அலுவலகம் சென்னையிலும், உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி, கூடலூர், வால்பாறை, ஏற்காடு, வத்தலக்குண்டு மற்றும் நாகர்கோவில் ஆகிய 8 இடங்களில் தொழிலாளர் உதவி ஆணையர்

(தோட்டங்கள்) அலுவலகங்களும் அமைந்துள்ளன. மேலும், உதகமண்டலம் மற்றும் நாகர்கோவில் ஆகிய 2 இடங்களில் தோட்ட தொழிலாளர்களின் மருத்துவ வசதிகளை ஆய்வு செய்வதற்காக உதவி மருத்துவர்கள் (தோட்டங்கள்) பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டிலுள்ள 2,225 தோட்ட நிறுவனங்களின் மொத்த பரப்பரளவு 62,250 ஹெக்டேர் ஆகும். இதில் 683 பதிவு பெற்ற தோட்ட நிறுவனங்களின் பரப்பளவு 54,599 ஹெக்டேர் மற்றும் 1,542 பதிவு பெறாத தோட்ட நிறுவனங்களின் பரப்பளவு 7,651 ஹெக்டேர் ஆகும். தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் 56,961 மொத்தத் தொழிலாளர்களில் 34,594 பெண்களும் 22,367 ஆண்களும் உள்ளனர்.

01.04.2021 முதல் 31.03.2022 வரையான காலத்தில் சட்ட அமலாக்க அலுவலர்களால் தோட்டத்

தொழிலாளர்கள் சட்டம் மற்றும் விதிகளின் கீழ் மட்டும் 2,187 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதில், காணப்பட்ட பல்வேறு முரண்பாடுகள் தொடர்பாக 85 வழக்குகள் முடிக்கப்பட்டு அதற்கு ரூ.2,65,000/- அபராதத்தொகை வேலையளிப்பவர்கட்கு விதிக்கப்பட்டது.

### 1.3.4.5. பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், 1966

இச்சட்டம், பீடிமற்றும் சுருட்டு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாத்து அவர்களது பணிநிலைமையினை முறைப்படுத்தும் பொருட்டு இயற்றப்பட்டது. 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் இச்சட்டத்தின் கீழ் 1,142 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 100 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, நீதிமன்ற வழக்குகளின் மூலம் முடிவு செய்யப்பட்டு ரூ.11,400/- அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

### 1.3.4.6. உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் இதர பத்திரிக்கைத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள் மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், 1955

உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் பத்திரிக்கை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. மேலும், இச்சட்டம் உழைக்கும் பத்திரிக்கையாளர்கள், நாளிதழ்கள் மற்றும் செய்தி நிறுவனங்களில் பணிபுரியும் பத்திரிக்கையாளர் அல்லாத பிற பணியாளர்களுக்கு ஊதிய நிர்ணயம் மற்றும் மறு நிர்ணயம் செய்ய ஊதியக் குழுக்களை அமைக்கவும் வழிவகை செய்கிறது. 'மஜிதியா ஊதியக் குழுவின்' பரிந்துரைகள் 11.11.2011 முதல் நடைமுறையில் உள்ளது. மாநிலத்தில் உள்ள 76 பத்திரிக்கை நிறுவனங்களில், 75 நிறுவனங்கள் 'மஜிதியா ஊதியக்

குழுவின்'பரிந்துரைகளை முழுமையாக அமல்படுத்தியுள்ளன. சென்னை, அம்பத்தூரில் உள்ள நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற நிறுவனத்தில் பணியாளர்களுடன் ஏற்படுத்தப்பட்ட 18(1) ஒப்பந்தத்தின் அடிப்படையில் பரிந்துரைகள் அமல்படுத்தப்பட்டுள்ளது.

### 1.3.4.7. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்கள்) சட்டம், 1958

தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேசிய பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்களில் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளித்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் 26,291 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் 2,746 நிறுவனங்களில் முரண்பாடுகள் கண்டறியப்பட்டு

இசைவுத் தீர்வாக ரூ.19,47,250/- வசூலிக்கப்பட்டுள்ளது; 32 வழக்குகள் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டு ரூ.45,050/- வேலையளிப்பவர்கட்கு பல்வேறு முரண்பாடுகளுக்காக அபராதம் விதிக்கப்பட்டது.

### 1.3.4.8. ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970

இச்சட்டத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்களின் பணி நிலைமையினை ஒழுங்குபடுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில், முதன்மை வேலையளிப்பவர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு முறையே 222 பதிவுச் சான்றிதழ்களும் 297 உரிமங்களும் வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.4.9. மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயரும் தொழிலாளர்கள் (வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம், 1979

சொந்த மாநிலங்களிலிருந்து பிற மாநிலங்களுக்கு சென்று பணிபுரியும் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாத்து, அவர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்திட இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் முதன்மை வேலையளிப்பவர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு முறையே 11 பதிவுச் சான்றிதழ்களும் 4 உரிமங்களும் வழங்கப்பட்டுள்ளது.

### 1.3.4.10. குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்தல்) சட்டம், 1986

மனித குலத்தின் மிகப்பெரிய பரிசு குழந்தைகள். குழந்தைப்பருவமானது தனிமனித வளர்ச்சியில் அனைவரையும் ஈர்க்கக்கூடியதும், சமூகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு இன்றியமையாததும் ஆகும்.

குழந்தைகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டால் அது குழந்தைகளின் மனம் மற்றும் உடல் வளர்ச்சியைத் தடை செய்கிறது. சிறு வயதிலேயே வேலை செய்வதால் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படுவதுடன், சமூகத்தில் அவர்கள் ஒரு உயர்ந்த நிலையை அடைய முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால், ஒட்டுமொத்த சமூக வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது. மாநில அரசின் பல்வேறு துறைகளின் ஒருங்கிணைந்த

முயற்சியினால், மாநிலத்தில் குழந்தைத் தொழிலாளர் முறை உணரக்கூடிய வகையில் வெகுவாகக் குறைந்துள்ளது. மாநில அரசு குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலும் அகற்றிடும் நோக்கத்தில் பன்முக ஒருங்கிணைப்புடன் செயல்பட்டு, பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் முறையை அகற்றுவதற்கான மாநிலச் செயல் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இச்செயல் திட்டமானது, அமலாக்க அதிகாரிகள் மற்றும் தொடர்புடைய பிற துறைகளின் செயல்பாடு மற்றும் பங்கு குறித்து விரிவான வழிகாட்டுதல்களை அளிக்கிறது. குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்தல்) சட்டம் 1986, தீவிரமாக அமல்படுத்தும் பொருட்டு

நிலையான இயக்க நடைமுறைகளைச் செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

**(அ) சட்ட அமலாக்கம்**

சட்ட அமலாக்கத்தை வலுப்படுத்தும் பொருட்டு, மாவட்ட அளவிலான தடுப்புக் குழுக்கள் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசாணை (2டி) எண்.2, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (யு2) துறை, நாள். 11.01.2021-ன்படி மாவட்ட தடுப்புக் குழுக்கள் மறு சீரமைக்கப்பட்டுள்ளன. குழந்தைகளைப் பணியமர்த்துவதைத் தடை செய்திட குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர்கள் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 மற்றும் தொடர்புடைய சட்டங்களை மாநில அளவில் தொழிலாளர் துறை ஆணையரக மற்றும் தொழிலகப்

பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் அமலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில், மாவட்ட தடுப்புப் படை மூலம் அமைக்கப்பட்ட குழுக்களின் மூலமும், அமலாக்க அலுவலர்கள் மூலமும் 33,504 நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 104 முரண்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு, 138 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. 136 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. 68 வழக்குகளில் (முன்பு நிலுவையிலிருந்தவை உட்பட) தண்டனை வழங்கப்பட்டு, ரூ.13,35,000/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒருங்கிணைப்பு அலுவலர்களாக தொழிலாளர் உதவி ஆணையர்கள் (அமலாக்கம்) மாநில அரசால் நியமனம்

செய்யப்பட்டுள்ளனர். 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் வேலைகளில் ஈடுபடுத்தப்படுவது முற்றிலுமாகத் தடை செய்யும் பொருட்டு, ஒன்றிய அரசால் சிறந்த அமலாக்க யுக்தியாக 'பென்சில்' (PENCiL – PLATFORM FOR EFFECTIVE ENFORCEMENT FOR NO CHILD LABOUR) என்னும் ஒரு இணைய தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

**(ஆ) விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வண்ணம், ஒவ்வொரு வருடமும் ஜூன் 12-ஆம் தேதி குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு மாநில அளவிலான குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின விழிப்புணர்வுக் கூட்டம் தொழிலாளர் ஆணையரகத்தில் அனுசரிக்கப்பட்டது, மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து

கொண்டார். அன்றைய தினம் நிகழ்ச்சியில் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய இராட்சத பலூன் பறக்கவிடப்பட்டது. குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான உறுதி மொழி மற்றும் குழந்தைத் தொழிலாளர்களை பணியமர்த்துவதற்கு எதிரான கையெழுத்து இயக்கம் ஆகியவை நடைபெற்றன.

**(இ) பயிற்சி மற்றும் பயிலரங்கம்**

தமிழகத்திலிருந்து குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலும் அகற்றிடும் நோக்கில் உருவாக்கப்பட்ட மாநில செயல்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக தொழிலாளர் துறை அலுவலர்களுக்கு அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில், மாநில அளவிலான பயிற்சி நடத்தப்பட்டது.

மேலும், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மண்டலங்களில் தொழிலாளர்

துறை அலுவலர்கள் மற்றும் குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுதலில் தொடர்புடைய பிற துறைகளை சார்ந்த அலுவலர்களுக்கும் பயிற்சி மற்றும் பயிலரங்கம் நடத்தப்பட்டுள்ளது.

**(ஈ) தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம்**

தமிழ்நாட்டில் ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் இயங்கி வருகிறது. தற்போது தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம் செயல்படும் 15 மாவட்டங்களில் இயங்கி வரும் 203 சிறப்பு பயிற்சி மையங்களில் 3,362 மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் கல்வி பயின்று வருகின்றனர். 01.04.2021 முதல் 28.02.2022 வரையிலான காலத்தில் 1,758

குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட உதவியுடன் பயிலும் மாணவ மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.400/- வீதம் உதவி தொகை, கல்வி உபகரணங்கள், இலவச சீருடை வழங்குவதுடன் இலவச மருத்துவ பரிசோதனையும் மேற்கொள்ளப்படுகிறது. மாநில அரசு, குழந்தைத் தொழிலாளராக இருந்து மீட்கப்பட்டு, தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டப் பள்ளிகளில் பயின்று பின்பு முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, பின்னர் உயர்கல்வியினை தொடரும் மாணவ மாணவியருக்கு மாதந்தோறும் ரூ.500/- வீதம் உதவித்தொகையாக வழங்கி வருகிறது.

ஒன்றிய அரசின் கடித எண்.Z-16025/04/2021-CL, நாள்:14.03.2022-இல், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டமானது, கல்வி

அமைச்சகத்தின் சமஹர சிக்ஷா அபியான் திட்டத்துடன் உள்ளடக்கிட முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 1.3.4.11. கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டம், 1976

ஒன்றிய அரசின் கொத்தடிமைத் தொழிலாளர் மறுவாழ்வு திட்டம்-2016, மீட்கப்படும் கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு பொருளாதார மற்றும் சமூக மறுவாழ்வு வழங்கி அவர்களின் திறன்களை மேம்படுத்த ஏற்படுத்தப்பட்டதாகும். பல்வேறு துறைகளின் பங்குதாரர்களுக்கு மேற்படி சட்டத்தை வலுவாக அமல்படுத்தும் நோக்கில், கொத்தடிமைத் தொழிலாளர்களை மீட்டெடுத்தல், விடுவித்தல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் ஆகியவை பற்றிய மாநில செயல் திட்டம் மற்றும் நிலையான இயக்க நடைமுறைகள் ஆகிய வழிகாட்டுதல்கள் அரசால் உருவாக்கப்பட்டன. 2019-20-ஆம் ஆண்டில்

உயர்மட்டக் கண்காணிப்புக் குழு மறுசீரமைப்பு செய்யப்பட்டது.

அனைத்து தொழிலாளர் உதவி ஆணையர்களும் (அமலாக்கம்) அவர்களது நிர்வாக எல்லையில் 1976-ம் வருட கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்டம் மற்றும் 2016-ம் ஆண்டு ஒன்றிய அரசின் கொத்தடிமைத் தொழிலாளர் மறுவாழ்வு திட்டத்தினை அமல்படுத்த ஒருங்கிணைப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களின் வழக்கு விசாரணைக்கு வரும் போது, தகுதியான மற்றும் இலவச சட்ட உதவிகளைத் திறம்பட வழங்குவதில் தமிழ்நாடு சட்டப்பணி ஆணைக் குழுவின் பங்கு குறித்து நிலையான இயக்க நடைமுறைகளில் திருத்தம் வழங்கப்பட்டு (பத்தி 5(A)) அரசாணை (பல்வகை) எண்.138, தொழிலாளர் நலன்

மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள்.28.09.2021-ன் மூலம் ஆணை வெளியிடப்பட்டது.

கொத்தடிமைத் தொழிலாளர் முறையிலிருந்து விடுவிக்கப்படும் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு உடனடி நிவாரண தொகையாக ரூ.20,000/- வழங்கப்பட்டு வருவதோடு, குடும்ப அட்டை, சாதி சான்றிதழ், வேலைவாய்ப்பு, கல்வி, தொழிற்திறன் பயிற்சி, சுய உதவிக் குழுக்களில் உறுப்பினராக சேர்த்தல் மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் அவர்கள் பணிபுரியும் தொழில்களுக்கு ஏற்ப, உரிய அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்டு தகுதியான திட்டப் பயன்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

ஒன்றிய அரசின் மறுசீரமைக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர் மறுவாழ்வு

திட்டம்-2021-ன்படி 27.01.2022 முதல் உடனடி நிவாரணத் தொகை ரூ.20,000/-லிருந்து ரூ.30,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்விற்கென நிரந்தர நிதி மூலதனம் (Permanent Corpus Fund) ஏற்படுத்தும் பொருட்டு ரூ.121 இலட்சம் (ரூபாய் நூற்று இருபத்தொன்று இலட்சம் மட்டும்) அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. மீட்கப்படும் கொத்தடிமை தொழிலாளர்களின் மறுவாழ்விற்காக மாநில அரசானது 2021-22-ம் நிதியாண்டிற்கு ரூ.125 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

01.04.2021 முதல் 31.03.2022 வரை 305 மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.61.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கொத்தடிமைத் தொழிலாளர் முறையினை முற்றிலும் அகற்றிடவும் மற்றும் தமிழ்நாட்டை

கொத்தடிமைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக உருவாக்கிடவும், ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 9-ஆம் நாள் கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினமாக அனுசரிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தினம் 09.02.2022 அன்று அனுசரிக்கப்பட்டு அனைத்து அரசு அலுவலகங்களிலும் உறுதிமொழி எடுக்கப்பட்டது.

கொத்தடிமைத் தொழிலாளர் குறித்த புகார்களை தெரிவிக்க, கட்டணமில்லா தொலைபேசி எண்.1800 4252 650 உருவாக்கப்பட்டுள்ளது.

### 1.3.5. நுகர்வோர் பாதுகாப்பு சார்ந்த சட்டங்கள்

கூடுதல் தொழிலாளர் ஆணையர் (ஆய்வுகள்), சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அலுவலராக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளார். சட்டமுறை

எடையளவுச் சட்டம் மற்றும் விதிகளை அமல்படுத்தும் பொருட்டு 30 தொழிலாளர் உதவி ஆணையர்கள் (அமலாக்கம்) மற்றும் 8 தொழிலாளர் உதவி ஆணையர்கள் (தோட்டங்கள்) சட்டமுறை எடையளவு துணை கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும், 67 தொழிலாளர் துணை ஆய்வாளர்கள் சட்டமுறை எடையளவு உதவி கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும், 101 முத்திரை ஆய்வாளர்கள் மற்றும் 218 தொழிலாளர் உதவி ஆய்வர்கள் சட்டமுறை எடையளவு ஆய்வாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### 1.3.5.1. சட்டமுறை எடையளவுச் சட்டம், 2009

இச்சட்டத்தின் வழியாக நிர்ணயம் செய்யப்பட்ட எடையளவுகளின் தரத்தை உறுதி செய்யவும், நுகர்வோர் நலன் கருதி எடை, அளவு அல்லது எண்ணிக்கை முறையில் மேற்கொள்ளப்படும் வணிகம் மற்றும் வியாபார பரிவர்த்தனைகளை முறைபடுத்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டம் தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகளை அமல்படுத்துவதுடன் நுகர்வோர் நலனை பாதுகாத்து, எடை, அளவை அல்லது எண்ணிக்கையின் அடிப்படையில் விற்கப்படும் பொருட்கள், எடைகள் மற்றும் அளவைகளை கொண்டு செயல்படும் வணிகம் மற்றும் வியாபாரத்தை முறைப்படுத்துகிறது.

01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் சட்டமுறை எடையளவுச் சட்டத்தின் கீழ் 41,587 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 3,407 முரண்பாடுகள் காணப்பட்டு இசைவுத் தீர்வு முறையில் இணக்கக் கட்டணம் மற்றும் நீதிமன்ற வழக்குகளில் அபராதமாக ரூ.6,000/- மற்றும் இணக்கக் கட்டணமாக ரூ.41.89 இலட்சமும், முத்திரைக் கட்டணமாக ரூ.61.20 கோடியும் வசூலிக்கப்பட்டுள்ளது.

01.04.2021 முதல் 31.03.2022 வரையிலானகாலத்தில் 689 எடையளவு தயாரிப்பாளர் / விற்பனையாளர் / பழுதுபார்ப்பவர் உரிமங்கள் வழங்கப்பட்டு, உரிமக் கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணமாக ரூ.44.66 இலட்சமும் வசூலிக்கப்பட்டுள்ளது.

**1.3.5.2. சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 2011**

இவ்விதிகளின்படி பொட்டலப் பொருட்கள் தயாரிப்பாளர், பொட்டலமிடுபவர் மற்றும் இறக்குமதி செய்வோர் அனைவரும் பொட்டலமிடும் பொருட்களின் மீது உற்பத்தியாளரின் பெயர் மற்றும் முகவரி, பொருட்களின் பொது அல்லது மரபு பெயர், நிகர எடை, பொட்டலமிடப்பட்ட மாதம் மற்றும் வருடம், சில்லறை விற்பனை விலை உள்ளிட்ட விவரங்களை பொட்டலப் பொருட்களின் மீது அறிவிக்க வேண்டும் என்பது

கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு, இவ்விதிகளின் கீழ் பொட்டலமிடுவதற்காக பதிவுச் சான்று பெற வேண்டும். பொருட்கள் அதிகபட்ச சில்லரை விற்பனை விலைக்கு அதிகமாக விற்கப்படுவதை தடுப்பதுடன் பொட்டலப் பொருட்கள் குறித்த இதர தகவல்களை நுகர்வோர் அறியவும் இது வழிவகுக்கிறது.

01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள் 2011-ன்கீழ் 15,630 நிறுவனங்களில் ஆய்வு செய்யப்பட்டு 994 வழக்குகளில் குற்றங்களைத் தீர்வு செய்த வகையில் அபராதமாக ரூ.24,000/- மற்றும் இணக்கக் கட்டணமாக ரூ.50.13 இலட்சமும், 687 பொட்டலமிடுபவர் / இறக்குமதியாளர் பதிவுச்சான்று வழங்கப்பட்டு, பதிவுக் கட்டணமாக ரூ.5.41 இலட்சமும் வசூலிக்கப்பட்டுள்ளது.

## 1.4. நல வாரியங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்கள்

### 1.4.1. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் சில அடிப்படை மற்றும் தேவையான சேவைகள் / வசதிகள் மற்றும் வாய்ப்புகளை உறுதி செய்வதற்காக தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972-ம் ஆண்டு இயற்றப்பட்டது. இந்நோக்கத்துடன் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 1975-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தொழிற்சாலைகள், மலைத் தோட்ட நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்போரிடமிருந்து பெறப்படும் தொகையின் மூலம் பல்வேறு நலத் திட்ட பயன்கள் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு தொழிலாளியும் ரூ.10/-ம், வேலையளிப்பவர் ஒரு தொழிலாளிக்கு ரூ.20/-ம், அரசு, ஒரு தொழிலாளிக்கு ரூ.10/- என்ற வீதத்திலும் தொழிலாளர் நல நிதி செலுத்தி வருகின்றனர். தொழிலாளர் நலச் சட்டம் மற்றும் விதிகளை மீறியமைக்காக வேலையளிப்பவர் மீது நீதிமன்றங்களினால் விதிக்கப்படும் அபராதம் மற்றும் அமலாக்க அலுவலர்களால் வசூலிக்கப்படும் இணக்கக் கட்டணம் ஆகியவை தொழிலாளர் நலநிதியில் சேர்க்கப்படுகிறது.

பின்வரும் நலத் திட்டங்களுக்காக தொழிலாளர் நல நிதி செலவிடப்படுகிறது.

- ❖ தையல் இயந்திரம் வாங்க உதவித் தொகை
- ❖ கல்வி உதவித் தொகை மற்றும் கல்வி ஊக்கத் தொகை
- ❖ பாடநூல் உதவித் தொகை.
- ❖ அடிப்படைக் கணினி பயிற்சி உதவித் தொகை.

- ❖ திருமண உதவித் தொகை திட்டம்
- ❖ மூக்குக் கண்ணாடி உதவித் தொகை.
- ❖ இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை.
- ❖ விபத்துமரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை.
- ❖ 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவர்களுக்கு விலையில்லா மாதிரி வினாத்தாள் கையேடு வழங்குதல்.
- ❖ நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி உதவித் தொகை
- ❖ மாவட்ட அளவிலான விளையாட்டு உதவித் தொகை
- ❖ மாநில அளவிலான விளையாட்டு உதவித் தொகை
- ❖ ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்துடன் சலுகை வாடகையில் தங்கி விடுமுறைக் காலங்களில் மகிழ்ச்சியுடன் ஓய்வெடுக்க மாமல்லபுரம், வால்பாறை மற்றும் குற்றாலம் ஆகிய இடங்களில் ஓய்வு இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்கு "ஜீவா இல்லம்" தொழிலாளர் ஆணையர் அலுவலகத்திற்கு அருகாமையில் கட்டப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்பவர்கள் படித்து பயன்பெறும் வகையில் முக்கிய நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் தொழிலாளர் நலன் சம்மந்தமான கட்டுரைகள் அடங்கிய "உழைப்பவர் உலகம்" எனும் தமிழ் மாத இதழ் வெளியிடப்பட்டு வருகிறது.

## 01.04.2021 முதல் 31.03.2022 வரையான காலத்தில் பல்வேறு நலத் திட்டங்கள் மூலம் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் செலவுத் தொகை விவரம்

| வ. எண். | திட்டங்கள் | பயனாளி-கள் | தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | கல்வி உதவித் தொகை | 1,150 | 28.89 |
| 2. | பாடநூல் உதவித் தொகை | 112 | 1.96 |
| 3. | திருமண உதவித்தொகை | 653 | 65.10 |
| 4. | மூக்குக் கண்ணாடி உதவித் தொகை | 48 | 0.48 |
| 5. | இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை | 426 | 127.80 |
| 6. | விபத்து மரணஉதவித்தொகை மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை | 85 | 89.25 |
| 7. | உழைப்பவர் உலகம் மாத இதழ் | 4,280 (மாதந் தோறும்) | 5.88 |
| 8. | விருந்தினர் இல்லம், ஓய்வு இல்லங்கள் பராமரிப்பு மற்றும் நிர்வாகச் செலவுகள் | 1,925 | 56.75 |
| **மொத்தம்** | | **8,679** | **376.11** |

## 1.4.2. அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள்

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்கும் பொருட்டு சட்டமியற்றியதன் மூலம் தமிழ்நாடு ஏனைய மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1982 மற்றும் அதில் வகுக்கப்பட்ட திட்டங்கள், இச்சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 54 (கட்டுமானம்) + 69 (உடலுழைப்பு) தொழில் இனங்களில் ஈடுபட்டுள்ள அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு திட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகின்றன.

பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு,

இயற்கை மரணம், விபத்து மரணம், ஈமச்சடங்கு, விபத்து ஊனம், மாதாந்திர ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் (பதிவு பெற்ற கட்டுமான தொழிலாளர்களுக்கு மட்டும்) போன்ற பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கிட இத்திட்டங்கள் வழிவகை செய்கின்றன.

**18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களை பின்வருமாறு அரசு அமைத்துள்ளது**

| வ. எண் | வாரியங்களின் பெயர் |
|---|---|
| 1. | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 2. | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் |
| 3. | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 4. | தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 5. | தமிழ்நாடு முடி திருத்துவோர் நல வாரியம் |
| 6. | தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம் |

| வ. எண் | வாரியங்களின் பெயர் |
|---|---|
| 7. | தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 8. | தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 9. | தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 10. | தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 11. | தமிழ்நாடு ஓவியர் நல வாரியம் |
| 12. | தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம் |
| 13. | தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 14. | தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நல வாரியம் |
| 15. | தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர்கள் நல வாரியம். |
| 16. | தமிழ்நாடு பாதையோர வணிகர்கள், கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம். |
| 17. | தமிழ்நாடு சமையல் மற்றும் உணவகத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 18. | தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நல வாரியம் |

## 1.4.2.1. அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகள்

அமைப்புசாராத் தொழிலாளர்களின் பதிவு, புதுப்பித்தல், நலத்திட்ட உதவித் தொகைகள் வழங்குதல் போன்ற வாரிய பணிகள், மாவட்ட அளவில் 40 தொழிலாளர் உதவி ஆணையர்களால் (சமூக பாதுகாப்புத் திட்டம்) நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

அமைப்புசாரா தொழிலாளர் நல வாரிய தலைமை அலுவலகங்கள் மற்றும் மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்கள் அனைத்தும் கேட்பு மனுக்கள் மீது விரைவாக நடவடிக்கை எடுக்க கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

19.06.2020 முதல் இணையதளம் மூலம் பதிவு செய்யப்படும் முறை தொடங்கப்பட்டு 20.07.2020 முதல் பதிவுபெற்ற தொழிலாளர்களுக்கு அடையாள

அட்டைகள் வழங்கப்படுகின்றன. 26.08.2020 முதல் புதுப்பித்தல் மற்றும் கேட்பு மனு விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் பெறப்பட்டு தொடர்புடைய மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர்களால் (ச.பா.தி) சரிபார்க்கப்படுகின்றன.

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெறும் மாவட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டம், உறுப்பினர்களுக்கு உரிய நேரத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுவதைக் கண்காணிக்கிறது.

உதவித் தொகை பெறுவதில் உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு உள்ள சிரமங்களை குறைக்கும் நோக்கில் நலத்திட்ட உதவிகள் வழங்குவதில் வெளிப்படைத் தன்மை பெருமளவில் கடைப்பிடிக்கப்பட்டு அனைத்து நலத்திட்ட உதவித் தொகைகளும் பயனாளிகள் / அமைப்புசாரா தொழிலாளர்களின் வங்கிக் கணக்கிற்கு மின்னணு

பரிமாற்றம் (Electronic Clearing System (**ECS**)) மூலம் நேரடியாக செலுத்தப்படுகிறது.

### 1.4.2.2. அதிகரிக்கப்பட்ட நலத்திட்ட உதவிகள்

2021-2022-ஆம் நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் 16 நலவாரியங்களின் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவித்தொகைகளை புதிதாக அறிமுகப்படுத்தியும் / ஏற்கனவே வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளை அதிகரித்தும் அறிவிப்புகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 04.09.2021 அன்று அறிவித்தார்கள்.

- ❖ அதன்படி பதிவுபெற்ற உடலுழைப்புத் தொழிலாளர்களின் 6-ஆம் வகுப்பு முதல் 9-ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு

கல்வி திட்ட உதவித்தொகை ரூ.1,000/- வழங்கும் திட்டம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டது.

- ❖ பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் 10-ஆம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகள் மற்றும் 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வித் திட்ட உதவித் தொகை ரூ.1,000/-லிருந்து ரூ.2,400/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- ❖ பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் 11-ஆம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகளுக்கான கல்வித் திட்ட உதவித் தொகை ரூ.1,000/-லிருந்து ரூ.3,000/- ஆகவும், 12-ஆம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகள் மற்றும் 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற குழந்தைகளுக்கான கல்வித்திட்ட உதவித்தொகை ரூ.1,500/-லிருந்து ரூ.3,000/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் பதிவுபெற்ற அமைப்புசாரா ஓட்டுனர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு முறையான பட்டப்படிப்பு படிப்பதற்கு வழங்கப்பட்ட ரூ.1,500/- மற்றும் முறையான பட்டப்படிப்பினை விடுதியில் தங்கி படிப்பதற்கு வழங்கப்பட்ட ரூ.1,750/- ஆகியவை ஆண்டிற்கு ரூ.4,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் பதிவுபெற்ற அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் இயற்கை மரணமடையும் போது வழங்கப்பட்ட இயற்கை மரண உதவித்தொகை ரூ.20,000/-லிருந்து ரூ.50,000/-ஆகவும், அதேபோல், இதர உடலுழைப்புத் தொழிலாளர்களின் இயற்கை

மரண உதவித்தொகை ரூ.20,000/-லிருந்து ரூ.30,000/-ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளன.

- அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்களின் விபத்து மரண உதவித்தொகை ரூ.1,00,000/-லிருந்து ரூ.2,00,000/-அகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- இதே போல், கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டர் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் தவிர இதர பதிவுபெற்ற உடலுழைப்பு தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் விபத்து மரண உதவித்தொகை ரூ.1,00,000/-லிருந்து ரூ.1,25,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

### 1.4.2.3. நலத்திட்ட உதவிகள் விவரம்

18 அமைப்புசாரா நல வாரியங்களில் பதிவு செய்துள்ள அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு பின்வரும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது :

| வ. எண். | நலத்திட்டத்தின் பெயர் | கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் | ஓட்டுநர்கள்மற்றும் தானியங்கி பணிமனை தொழிலாளர்கள் நல வாரியம் | இதர வாரியங்கள் |
|---|---|---|---|---|
| | | தொகை (ரூ.) | தொகை (ரூ.) | தொகை (ரூ.) |
| 1. | தனிநபர் விபத்து உதவி | | | |
| அ) | விபத்து மரண நிதி உதவி | 1 இலட்சம் | 2 இலட்சம் | 1.25 இலட்சம் |
| ஆ) | விபத்து ஊன நிதி உதவி (ஊனத்தின் தன்மைகேற்ப) | 1 இலட்சம் வரை | 1 இலட்சம் வரை | 1 இலட்சம் வரை |

| வ. எண். | நலத்திட்டத்தின் பெயர் | கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் | ஓட்டுநர்கள்மற்றும் தானியங்கி பணிமனை தொழிலாளர்கள் நல வாரியம் | இதர வாரியங்கள் |
|---|---|---|---|---|
| | | தொகை (ரூ.) | தொகை (ரூ.) | தொகை (ரூ.) |
| இ) | பணிபுரியும் இடத்தில் விபத்து மரணம் மற்றும் மருத்துவமணையில் அனுமதிக்கப்பட்டப்பின் மரணம் [(பணியின் போது) / பதிவுபெறாத தொழிலாளர்களுக்கும்] | 5 இலட்சம் | - - | - - |
| 2. | இயற்கை மரண உதவித்தொகை | 50,000/- | 50,000/- | 30,000/- |
| 3. | ஈமச்சடங்கு உதவித் தொகை | 5,000/- | 5,000/- | 5,000/- |
| 4. | கல்வி உதவித் தொகை | | | |
| I | 6ம் முதல் 9ம் வகுப்பு வரை கல்வி பயில | 1,000/- | 1,000/- | 1,000/- |
| II | 10ம் வகுப்பு பயில (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) / 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் | 2,400/- | 1,000/- | 1,000/- |

| வ. எண். | நலத்திட்டத்தின் பெயர் | கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் | ஓட்டுநர்கள்மற்றும் தானியங்கி பணிமனை தொழிலாளர்கள் நல வாரியம் | இதர வாரியங்கள் |
|---|---|---|---|---|
| | | தொகை (ரூ.) | தொகை (ரூ.) | தொகை (ரூ.) |
| III | 11 ம் வகுப்பு பயில (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 3,000/- | 1,000/- | 1,000/- |
| IV | 12 ம் வகுப்பு பயில (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) / 12 ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் | 3,000/- | 1,500/- | 1,500/- |
| V | முறையான இளநிலை பட்டப்படிப்பு/<br>விடுதியில் தங்கி படித்தால் | 4,000/- | 4,000/- | 1,500/-<br>1,750/- |
| VI | முறையான முதுநிலை பட்டப்படிப்பு /<br>விடுதியில் தங்கி படித்தால் | 4,000/-<br>5,000/- | 4,000/-<br>5,000/- | 4,000/-<br>5,000/- |

| வ. எண். | நலத்திட்டத்தின் பெயர் | கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் | ஓட்டுநர்கள்மற்றும் தானியங்கி பணிமனை தொழிலாளர்கள் நல வாரியம் | இதர வாரியங்கள் |
|---|---|---|---|---|
| | | தொகை (ரூ.) | தொகை (ரூ.) | தொகை (ரூ.) |
| VII | தொழில்நுட்ப பட்டப்படிப்பு / | 4,000/- | 4,000/- | 4,000/- |
| | விடுதியில் தங்கி படித்தால் | 6,000/- | 6,000/- | 6,000/- |
| VIII | தொழில்நுட்ப பட்டமேற்படிப்பு/ | 6,000/- | 6,000/- | 6,000/- |
| | விடுதியில் தங்கி படித்தால் | 8,000/- | 8,000/- | 8,000/- |
| IX | ஐடிஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு / | 1,000/- | 1,000/- | 1,000/- |
| | விடுதியில் தங்கி படிக்கும் வசதியுடன் | 1,200/- | 1,200/- | 1,200/- |
| 5. | திருமண உதவித் தொகை | | | |
| | I) ஆண்கள் | 3,000/- | 3,000/- | 3,000/- |
| | **II)** பெண்கள் | 5,000/- | 5,000/- | 5,000/- |
| 6. | மகப்பேறு உதவித் தொகை / | 6,000/- | 6,000/- | 6,000/- |
| | மருத்துவரீதியிலான கருச்சிதைவு – கருக்கலைப்பு | 3,000/- | 3,000/- | 3,000/- |

| வ. எண். | நலத்திட்டத்தின் பெயர் | கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் | ஓட்டுநர்கள்மற்றும் தானியங்கி பணிமனை தொழிலாளர்கள் நல வாரியம் | இதர வாரியங்கள் |
|---|---|---|---|---|
| | | தொகை (ரூ.) | தொகை (ரூ.) | தொகை (ரூ.) |
| 7. | கண்கண்ணாடி வாங்கிட உதவித் தொகை | 500 வரை | 500 வரை | 500 வரை |
| 8. | I) ஓய்வூதியம் (ஒவ்வொரு மாதமும்) | 1,000/- | 1,000/- | 1,000/- |
| | II) குடும்ப ஓய்வூதியம் (ஒவ்வொரு மாதமும்) | 500/- | -- | -- |

## நிதி ஆதாரங்கள்

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தால், கட்டப்படவுள்ள கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியின் மொத்த கட்டுமான மதிப்பீட்டில் பங்களிப்பாக ஒரு சதவிகிதம் வரியாக பெறப்படுகிறது. 2021-2022 நிதியாண்டில் ரூ.764.02 கோடி வரியாக பெறப்பட்டுள்ளது. (01.04.2021 முதல் 31.03.2022 வரை)

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் மூலம் சாலைகளில் செல்லும் ஒவ்வொரு பயணிகள் அல்லது பொருட்களை ஏற்றி செல்லும் வர்த்தக வாகனங்களின் உரிமையாளர்களிடமிருந்து, தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்பு சட்டம், 1974-ன்படி ஒரு சதவிகித மோட்டார் வாகன கூடுதல் வரி வசூலிக்கப்படுகிறது. 01.04.2021 முதல் 31.03.2022 வரை ரூ.7.57 கோடி கூடுதல் வரியாகப் பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள் நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு மானியம் வழங்குகிறது. 01.04.2021 முதல் 31.03.2022

வரையான காலத்திற்கு தமிழ்நாடு அரசு, மானியமாக ரூ.138.59 கோடி ஒப்பளித்துள்ளது.

**18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களின் சாதனைகள் வாரியம் துவங்கப்பட்ட நாள் முதல் 31.03.2022 வரை பதிவு மற்றும் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் விவரம்**

| வ. எண். | வாரியத்தின் பெயர் | பதிவு (இலட்சத்தில்) | பயனாளிகள் (இலட்சத்தில்) | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் | 19.43 | 20.34 | 1017.09 |
| 2. | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் | 1.46 | 1.47 | 57.64 |

| வ. எண். | வாரியத்தின் பெயர் | பதிவு (இலட்சத்தில்) | பயனாளிகள் (இலட்சத்தில்) | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 3. | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள் | 17.30 | 34.86 | 1210.90 |
| | **மொத்தம்** | **38.19** | **56.67** | **2285.63** |

## 01.04.2021 முதல் 31.03.2022 வரை பதிவு மற்றும் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் விவரம்

| வ. எண். | வாரியத்தின் பெயர் | பதிவு | பயனாளிகள் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் | 5,89,555 | 1,51,633 | 161.20 |

| வ. எண். | வாரியத்தின் பெயர் | பதிவு | பயனாளிகள் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 2. | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் | 53,883 | 15,651 | 8.74 |
| 3. | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள் | 3,47,227 | 2,38,984 | 129.08 |
| | **மொத்தம்** | **9,90,665** | **4,06,268** | **299.02** |

## 1.5. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, 1988-லிருந்து சங்கமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் இக்கல்வி நிலைய ஆட்சிமன்றக் குழுவின் தலைவராவார். இக்கல்வி நிலையத்தின் நிர்வாகச் செலவுகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ஆண்டு தோறும் மானியம் அளித்து வருகிறது.

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்திற்கு, அம்பத்தூரில் புதிய கட்டடம் கட்டப்பட்டு, 22.03.2021 முதல் சொந்த கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

இக்கல்வி நிலையம் தொழிலாளர் மேலாண்மையில் பி.ஏ (இளங்கலை பட்டப்படிப்பு) மற்றும் எம்.ஏ (முதுகலை பட்டப்படிப்பு) ஆகியவற்றை

நடத்தி வருகிறது. தொழிலாளர் மேலாண்மையில் முழு நேர மற்றும் பகுதி நேர ஆராய்ச்சி (பிச்.டி) படிப்பு நடத்துவதற்கு சென்னைப் பல்கலைக் கழகத்தால் ஓர் ஆராய்ச்சி நிலையமாக இக்கல்வி நிலையம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கல்வி நிலையம் தொழிலாளர் நிர்வாகத்தில் முதுகலை பட்டயப்படிப்பு (பி.ஜி.டி.எல்.ஏ) ஓராண்டு, பகுதி நேரம் (மாலை) மற்றும் தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும் என்ற ஓராண்டு பகுதிநேரம் (வார இறுதிநாட்கள் – சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை) பட்டயப் படிப்பும் பணிபுரிவோருக்காக நடத்தி வருகிறது.

இக்கல்வி நிலையம் பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள், போன்றவற்றைத் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் மேற்பார்வையாளர்கள், நிர்வாகிகள், தொழிற்சங்கத்தினர், தொழிலாளர் துறை, தொழிலகப்

பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்கள் ஆகியோர்களின் தேவை கருதி, காலமுறையில் நடத்தி வருகிறது.

இக்கல்வி நிலையத்திற்கு ஏழு புதிய பணியிடங்களை உருவாக்கி, அரசாணை (நிலை) எண் 191, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (ஜி2) துறை, நாள் 06.12.2021-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## 1.6. தமிழ்நாடு கட்டுமானக் கழகம்

கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் திறன், ஆற்றல் மற்றும் அறிவு ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு "**தமிழ்நாடு கட்டுமானக் கழகம்**" அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கட்டுமானக் கழக அலுவலகம் டி.எம்.எஸ் வளாகத்தில் உள்ள தொழிலாளர் நல வாரியக் கட்டிடத்தின் தரைத் தளத்தில் 04.01.2013

முதல் இயங்கி வருகிறது. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகத்தால் (DET) அனுமதிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி மையங்களின் வாயிலாக கட்டுமான தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இப்பயிற்சி இலவசமாக வழங்கப்படுகிறது. பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பின்னர் தேசிய தொழில் நெறிக் கல்விப் பயிற்சி (National Council of Vocational Training) சான்றிதழ் வழங்கப்படும்.

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு திறன் இடைவெளி இணைப்புப்பயிற்சி (Bridge Course) மற்றும் திறன் பரிசோதனை மூலம் (Recognition of Prior Learning - RPL) வழங்கும் பொருட்டு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தால் ரூ.186.20 இலட்சம் மதிப்பில் 5,000 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டு,

தமிழ்நாடு கட்டுமானக் கழகம் (TAC), தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) மற்றும் கட்டுமானத் தொழில் வளர்ச்சி குழுமத்துடன் (CIDC) இணைந்து இப்பயிற்சித் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 01.04.2021 முதல் 31.03.2022 முடிய 1,095 தொழிலாளர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

## 1.7. மாநிலங்களுக்கு இடையேயான புலம் பெயர்ந்த தொழிலாளர்கள்

அரசாணை (நிலை) எண்.398, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 10.06.2021-இல் 2021-ஆம் ஆண்டில் கோவிட்-19 ஊரடங்கு காலத்தில் வேலையிழந்த மற்றும் குடும்ப அட்டை இல்லாத, மாநிலங்களுக்கு இடையேயான புலம்பெயர்ந்த 1,29,444 வெளிமாநில தொழிலாளர்களுக்கு 15 கிலோ அரிசி, 1 கிலோ சமையல் எண்ணெய் மற்றும் 1 கிலோ

பருப்பு அடங்கிய உலர் உணவுப் பொருள் தொகுப்பு வழங்க அரசால் ஆணையிடப்பட்டது. இதற்காக ரூ.6,66,44,243/- (ரூபாய் ஆறு கோடியே அறுபத்தாறு இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து இருநூற்றி நாற்பத்து மூன்று மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசின் நலத்திட்டங்களின் பயன்கள் புலம் பெயர்ந்த தொழிலாளர்களைச் சென்றடையவும் அவர்களின் சட்ட உரிமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் புலம் பெயர் தொழிலாளர்களுக்கான நடமாடும் தகவல் மற்றும் உதவி மையங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

## 1.8. நீடித்த வளர்ச்சி இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகள், சமூகம், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய வளர்ச்சியின் மூன்று பரிமாணங்களை உள்ளடக்கிய இலட்சிய இலக்குகளாகும். 2030 கொள்கையில் 17 நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்கள் உள்ளன.

17 இலக்குகளில் பின்வரும் 2 இலக்குகள் மற்றும் சில குறிக்கோள்கள் தொழிலாளர் துறை தொடர்பானவை ஆகும்.

**இலக்கு எண்.5.1** – அனைத்து நிலைகளிலும் பெண்களுக்கு எதிரான பாலினப் பாகுபாடுகளை முடிவுக்கு கொண்டு வருதல்.

நிறுவனங்களில் பணிபுரியும் ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு சம ஊதியம் வழங்க வகை செய்யவும், வேலை வாய்ப்பில் பெண்

பணியாளர்களுக்கு பாலினப் பாகுபாட்டின் அடிப்படையில் ஊதியம் வழங்குவதை தடுக்கும் பொருட்டும் சம ஊதியச் சட்டம், 1976 அமல்படுத்தப்பட்டு வருகிறது.

இச்சட்டத்தின் கீழ் 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் 7,311 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**இலக்கு எண்.8.5** – 2030-ஆம் ஆண்டிற்குள் முழுமையான, திறன்மிக்க வேலை வாய்ப்பை உருவாக்குவதன் வாயிலாக இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள், ஆண்கள், பெண்கள் ஆகிய அனைவருக்கும் தகுந்த வேலைவாய்ப்பை அளித்தல் மற்றும் சம வேலைக்கு சம ஊதியம் வழங்குதல்.

குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948, அனைத்துப் பணியாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டிய குறைந்தபட்ச ஊதிய அளவை நிர்ணயித்துள்ளது. திட்டமிடப்பட்ட

வேலையமைப்புகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பணியின் தன்மைக்கேற்ப குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 1.9. தொழில் நடத்துவதில் எளிய முறை

"தொழில் நடத்துவதில் எளிய நடைமுறை" என்பதைச் செயல்படுத்திட,பதிவு / உரிமம் / புதுப்பித்தல் / திருத்தம் / மாற்றம் / மூடுதல் ஆகிய வசதிகளையும் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் சட்டமுறை எடையளவுச் சட்டத்தின் கீழ் ஆய்வு மேற்கொள்ளுதல் ஆகியவற்றையும் தொழிலாளர் துறையின் வலைதளமான "https://labour.tn.gov.in"-ல் இத்துறை தொகுத்து வழங்குகிறது. மேலும், இவை மின்னணு மூலம் கட்டணம் செலுத்துதல் / சான்றிதழ்கள் / உரிமங்கள் பதிவிறக்கம் செய்தல் ஆகிய வசதிகளுடன் செயல்படுத்தப்படுகிறது.

தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2011-ன் படி தமிழ்நாடு அரசு, 14.12.2016 அன்று தொழிலாளர் துறைக்கான 41 மின்னணு சேவைகளை அரசிதழில் வெளியிட்டது. இந்த 41 சேவைகளில், 37 சேவைகள் இணைய வழியாக செயல்படுத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள 4 சேவைகள் விரைவில் பயன்பாட்டிற்கு வரவுள்ளன.

**இணையம் மூலம் தாக்கல் செய்யப்படும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை**

பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் பல ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்வதை தவிர்த்திட சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் காகிதமற்ற முறையில் வலைதளம் மூலம் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை தாக்கல் செய்யும் முறை பின்வரும் விதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் விதிகள், 1959
- தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர்கள் விதிகள், 1955
- தமிழ்நாடு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் விதிகள், 1965
- தமிழ்நாடு பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள், 1968.

**ஒருங்கிணைந்த பதிவேடுகள்**

பல்வேறு பதிவேடுகள் மற்றும் படிவங்களைப் பராமரிக்கும் சிரமத்தினைக் குறைத்திடும் வகையில், எளிமையான ஒருங்கிணைந்த பதிவேடுகள் முறை பின்வரும் விதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் விதிகள், 1959

- தமிழ்நாடு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் விதிகள், 1965
- தமிழ்நாடு பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள், 1968
- தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகள், 1948

இதனைப் போல், ஒருங்கிணைந்த பதிவேடுகள் முறை பின்வரும் விதிகளில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

- தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர்கள் விதிகள், 1955

### 1.10. சட்டமுறை எடையளவுச் சட்டத்தின் கீழ் இணையதளம் மூலமாக முத்திரையிடும் பணி

தொழிலாளர் துறை இணைய முகப்பு வாயிலாக சட்டமுறை எடையளவுச் சட்டம், 2009-ன்கீழ்

எடைகள் மற்றும் அளவைகள், எரிபொருள் விநியோகிக்கும் கருவிகள் மற்றும் டேங்கர்கள் அளவீடு ஆகியவற்றை இணையம் மூலம் முத்திரையிடுதல் 23.02.2022 முதல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

## 1.11. தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் அறிமுகம்

ஒன்றிய அரசு, தற்போது நடைமுறையில் உள்ள 29 தொழிலாளர் நலச் சட்டங்களை உள்ளடக்கிய நான்கு சட்டத் தொகுப்புகளை உருவாக்கி, அவற்றைப் பாராளுமன்றத்தின் ஒப்புதல் பெற்று, அதனைத் தொடர்ந்து

மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது.

1) ஊதியச் சட்டத் தொகுப்பு, 2019,

2) தொழில் உறவுகள் சட்டத் தொகுப்பு, 2020

3) சமூகப் பாதுகாப்பு சட்டத் தொகுப்பு, 2020

4) தொழிலகப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிநிலைமைகள் சட்டத் தொகுப்பு, 2020

ஒன்றிய அரசும் இதற்கான மத்திய சட்ட விதிகளை தயாரித்து அரசிதழில் வெளியிட்டுள்ளது.

இச்சட்டத் தொகுப்புகளை மாநிலங்களில் அமல்படுத்த அந்தந்த மாநிலங்களும் மாநில சட்ட விதிகளை இயற்றி வருகின்றன.

ஊதியச் சட்டத் தொகுப்பு, தொழில் உறவுகள் சட்டத் தொகுப்பு மற்றும் தொழிலகப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிநிலைமைகள் சட்டத் தொகுப்பு, ஆகியவற்றிற்கான வரைவு விதிகளை 11.04.2022 அன்று மாநில அரசு வெளியிட்டுள்ளது.

தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள், வேலையளிப்பவர்கள் மற்றும் இதர பொது உறுப்பினர்கள் ஆகியோர் வரைவு விதிகளின் மீதான

தங்களது ஆலோசனைகள் / மறுப்புகளை தெரிவிக்கலாம்.தொடர்புடைய அனைவரையும் கலந்தாலோசித்த பின்னரே இவ்விதிகள் அரசால் இறுதியாக்கப்படும்.

## 1.12. சிறப்பு சாதனைகள்

- ❖ 18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற, 50,721 தொழிலாளர்களுக்கு ரூ.12.35 கோடிக்கான நலத்திட்ட உதவிகள் வழங்குவது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 01.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில் துவக்கி வைக்கப்பட்டது.

- ❖ தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

❖ செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை மற்றும் தென்காசி ஆகிய ஐந்து மாவட்டங்களில் புதியதாக தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி) அலுவலகங்கள் ரூ.36.32 கோடி செலவில் உருவாக்கப்பட்டது.

❖ தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம் என்பதை தமிழ்நாடு சமையல் மற்றும் உணவகத் தொழிலாளர்கள் நல வாரியம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. உணவகத் தொழிலாளர்களும் இவ்வாரியத்தில் பதிவு செய்கிறார்கள்.

❖ கல்வி நலத்திட்ட உதவித்தொகையாக 6-ஆம் வகுப்பு முதல் 9-ஆம் வகுப்பு வரை படிக்கும் பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு 1,000 ரூபாய் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

- பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் 10-ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகள் மற்றும் 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற குழந்தைகளுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகை 1,000 ரூபாயிலிருந்து ஆண்டிற்கு 2,400 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

- பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் 11-ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகளுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகை 1,000 ரூபாய் மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகள் மற்றும் தேர்ச்சி பெற்ற குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகை 1,500 ரூபாய் ஆகியவை ஆண்டிற்கு 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

- ❖ பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகையான, முறையான பட்டப்படிப்பு படிப்பதற்கு 1,500 ரூபாய் மற்றும் முறையான பட்டப்படிப்பினை விடுதியில் தங்கி படிப்பதற்கு 1,750 ரூபாய் ஆகியவை ஆண்டிற்கு 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

- ❖ தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரித்தில் பதிவு பெற்ற கட்டுமான தொழிலாளர் இயற்கை மரணம் அடைந்தால் அவர்களது குடும்பத்திற்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித் தொகை 20,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

❖ தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் என்பதை தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அத்தொழிலாளர்கள் இவ்வாரியத்தில் பதிவு செய்கிறார்கள்.

❖ தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் 6-ஆம் வகுப்பு முதல் 9-ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

❖ தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரிய

தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகை முறையான பட்டப்படிப்பு படிப்பதற்கு 1,500 ரூபாய் மற்றும் முறையான பட்டப்படிப்பினை விடுதியில் தங்கி படிப்பதற்கு 1,750 ரூபாய் ஆகியவை ஆண்டிற்கு 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

❖ தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரிய ஓட்டுநர்கள் விபத்து மரணம் அடையும் நேர்வில், தற்பொழுது வழங்கப்பட்டு வரும் விபத்து மரண உதவித்தொகை, 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

- தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரிய ஓட்டுநர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித் தொகை, 20,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

- தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் 15 நல வாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் 6-ஆம் வகுப்பு முதல் ஞ9-ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையாக, 1,000 ரூபாய் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

- தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் 15 நல வாரியங்களின்

தொழிலாளர்கள் விபத்து மரணம் அடையும் நேர்வில், அன்னாரது குடும்பத்திற்கு தற்பொழுது வழங்கப்படும் விபத்து மரண உதவித் தொகை, 1 இலட்சம் ரூபாயிலிருந்து 1.25 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

- தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் 15 நல வாரியங்களின் தொழிலாளர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித்தொகை, 20,000 ரூபாயிலிருந்து 30,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

### 1.13. மாநிலத் தொழிலாளர் ஆலோசனை வாரியம்

மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரைத் தலைவராக கொண்ட மாநில தொழிலாளர் ஆலோசனை வாரியம்

பல்வேறு நிறுவனங்கள், தொழிற்சாலைகள், தோட்ட நிறுவனங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளில், வேலையளிப்போர் மற்றும் தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் இனங்கள் / பொருண்மைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது. இவ்வாரியம் 28.02.2022 அன்று திருத்தியமைக்கப்பட்டது.

### 1.14. தோட்டத் தொழிலாளர் ஆலோசனை குழு

1951-ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டத்தை அமல்படுத்துவது குறித்து பரிசீலனை செய்ய தொழிலாளர் ஆணையர் தலைமையில் முத்தரப்பு தோட்டத் தொழிலாளர் ஆலோசனை குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு சட்டரீதியற்ற குழுவாகும். இக்குழு, அரசாணை (2டி) எண். 60, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள். 28.12.2021-ன் படி மாற்றியமைக்கப்பட்டது.

இக்குழுவின் 51வது கூட்டம் சென்னையில், 23.03.2022 அன்று நடைபெற்றது.

## 1.15. குறைந்தபட்ச ஊதிய (மாநில) ஆலோசனை வாரியம்

1948-ம் வருட குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின் கீழ், பிரிவு 7-ன் படி, பிரிவு 5-ன் கீழ் நியமிக்கப்பட்ட குழுக்கள் மற்றும் துணைக் குழுக்களின் பணிகளை ஒருங்கிணைப்பதற்காகவும், அறிவிக்கை முறையில் குறைந்தபட்ச ஊதிய சட்ட அட்டவணையில் சேர்க்கப்பட்ட தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் / மறுநிர்ணயம் செய்கையில் அரசுக்கு பொருத்தமான ஆலோசனை வழங்குவதற்காகவும் குறைந்தபட்ச ஊதிய (மாநில) ஆலோசனை வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் ஆணையர் அவர்களை தலைவராகக் கொண்ட இவ்வாரியம், அரசாணை (டி) எண்.20, தொழிலாளர் நலன் மற்றும் திறன்

மேம்பாட்டுத் (ஜெ1) துறை, நாள்.12.01.2022-ன் படி திருத்தியமைக்கப்பட்டது. இக்குழுவின் 78வது கூட்டம் சென்னையில் 22.03.2022 அன்று நடைபெற்றது.

### 1.16. இஷ்ரம் (e-SHRAM)

மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றத்தின், 29 ஜூன் 2020 தேதியிட்ட தன்னார்வ நீதிப்பேராணை மனு எண்.06/2020-இல் வழங்கிய கட்டளைகளின் படி ஒன்றிய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், அமைப்புசாரா தொழிலாளர்கள் / புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பதிவுக்காக இஷ்ரம் (e-SHRAM) வலைப்பக்கத்தை (http://eshram.gov.in) உருவாக்கி, 26 ஆகஸ்ட் 2021 அன்று துவக்கியது.

தமிழ்நாட்டில் 31 மார்ச் 2022 நிலவரப்படி, 70,48,529 அமைப்புசாரா தொழிலாளர்கள் இஷ்ரம் தரவு தளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

## 2. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

தொழில் வளர்ச்சியின் அடிப்படையில் நன்கு வளர்ந்த மாநிலங்களில் ஒன்றாகவும் அதிக எண்ணிக்கையிலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் முன்னணி மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்கிறது.

தமிழ்நாட்டில் வாகனம் மற்றும் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், பொறியியல், நூற்பாலைகள், ஆயத்த ஆடைகள், தோல் பொருட்கள், இரசாயனம், பெட்ரோகெமிக்கல், உணவு, பட்டாசு மற்றும் தீப்பெட்டி போன்ற பலதரப்பட்ட தொழிற்சாலைகள் அமையப் பெற்றுள்ளன.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முக்கியப் பங்களிப்பாளராக இருப்பதுடன் நாட்டின் பொருளாதாரத்தில் இரண்டாவது பெரிய மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. நாட்டின் தொழில்துறை ஆற்றல் மையமாக இம்மாநிலம் இருப்பதால்,

புத்துணர்ச்சியூட்டும் மற்றும் நெகிழ்ச்சியான உள்கட்டமைப்புகளுடன் கூடிய வலுவான தொழில்துறையை உருவாக்கி தொடர்ந்து வளர்த்து வருகிறது. மாநிலத்தின் அதிக ஏற்றுமதி பங்கானது வலுவான தொழில்துறை அடித்தளம், உள்கட்டமைப்பு மற்றும் மாநிலத்தில் எளிதாக தொழில் தொடங்கும் முறையை பிரதிபலிக்கிறது.

நிலையான வேலைவாய்ப்புகளை உருவாக்கி, தொழிலாளர்களின் நலனை அதிகப்படுத்துவதன் மூலம், தமிழ்நாட்டில் உயர்ந்த உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை அடைவதே அரசின் முதன்மையான முன்னுரிமையாகும்.

சுலபமாக தொழில் தொடங்கும் நடைமுறையை மேம்படுத்தவும், பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதை ஈர்க்கவும், பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களின் கீழ் சேவைகள் வழங்கப்படுவதற்கான கால

வரம்பினை நிர்ணயித்தல், சட்டபூர்வமான பதிவேடுகள் பராமரித்தலை எளிமையாக்குதல் போன்ற பல்வேறு முயற்சிகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகளை சமர்ப்பிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் இடர் அளவீட்டின் அடிப்படையில் கணினி மூலம்தெரிவு செய்யப்படும் ஆய்வு முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்கூறிய சீர்திருத்தங்களால் செயல்முறைகள் எளிதாக்கப்பட்டது மட்டுமல்லாமல் அதன் காரணமாக நமது மாநிலத்தின் பொருளாதாரம் நிலையான துரித வளர்ச்சியை அடைந்துள்ளது.

இவ்வியக்கத்தின் மூலம் வழங்கப்படும் பல்வேறு சேவைகளான பதிவு செய்தல், உரிமம் வழங்குதல் மற்றும் ஆண்டறிக்கைகளை இணைய வழியாக சமர்ப்பித்தல் ஆகியவை வழங்குவதற்கு பிரத்தியேக வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வலைதளத்தின் வாயிலாக இணையவழி கட்டணம் செலுத்தும் வசதியும் மின் கையொப்பமிடப்பட்ட பதிவுச் சான்றிதழ் மற்றும் உரிமங்களை உரிய நேரத்தில் இணையவழியாக பெற வசதியும் செய்யப்பட்டுள்ளதால் இவ்வசதிகளை வழங்கும் அலுவலர்களை நேரடியாக அணுகுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதார வசதிகளை உறுதிசெய்யும் நோக்கோடு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களை திறம்பட அமலாக்கம் செய்து வருகிறது. நடைமுறையில் உள்ள அணுகுமுறையின் வாயிலாக தமிழ்நாட்டில் தொழில் அமைதி நிலவுவதற்கு இவ்வியக்ககம் முக்கிய பங்கு வகிக்கிறது.

தமிழ்நாட்டில், 31.03.2022 அன்றுள்ளவாறு 1948-ஆம் ஆண்டைய தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 48,394 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டு 24,93,853 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அதே போல், கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம், 1996-ன் கீழ் 15,219 கட்டுமான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு 7,92,889 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## 2.1. நிர்வாக அமைப்பு

இயக்குநர் அவர்களின் தலைமையில் இயங்கி வரும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில், தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவு மற்றும் கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்க பிரிவு ஆகிய இரண்டு பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

## 2.2. தொழிற்சாலைகள் சட்ட அமலாக்கப் பிரிவு

இயக்குநரின் கீழ் ஒரு முதுநிலை கூடுதல் இயக்குநர், 6 கூடுதல் இயக்குநர்கள், 32 இணை இயக்குநர்கள், 55 துணை இயக்குநர்கள், 46 உதவி இயக்குநர்கள், 1 தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் 8 உதவி அறுவை மருத்துவர்களுடன் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

## 2.3. கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு

இயக்குநரின் கீழ் ஒரு முதுநிலை கூடுதல் இயக்குநர், 2 இணை இயக்குநர்கள், 8 துணை இயக்குநர்கள் மற்றும் 16 உதவி இயக்குநர்களுடன் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககமானது, தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பணியிடங்களில் பணிபுரியும்

தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்கள் காக்கப்படுவதை உறுதி செய்வதுடன் பின்வரும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

(i) தொழிற்சாலைகள் சட்டம், 1948 & தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள், 1950 மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களை தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்தல்.

(ii) தொழிற்சாலைகளில் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேம்பாடு குறித்த செயல்பாடுகள்.

(iii) கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகள், 2006 மற்றும் இதர

தொழிலாளர் நலச் சட்டங்களை கட்டுமானப் பணியிடங்களில் அமலாக்கம் செய்தல்.

### 2.3.1. தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களை தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்தல்

இவ்வியக்ககம், தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகள் தொழிலாளர்களுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்கு, காலமுறையில் தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொள்வதை முதன்மைப் பணியாக கொண்டு செயல்பட்டு வருகிறது.

### 2.3.2. தொழிற்சாலைகளில் எளிதாகத் தொழில் தொடங்கும் நடைமுறைகளை ஊக்குவித்தல்

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தால் மேற்கொள்ளப்படும் ஆய்வு நடைமுறைகளில் மாற்றம் செய்யப்பட்டு, தொழிற்சாலைகளின் அபாய வகைப்பாட்டின் அடிப்படையில் கணினி மூலமாக தெரிவு செய்து ஆய்வு மேற்கொள்ளும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தொழில் முனைவோருக்கு, சுலபமாகத் தொழில் தொடங்கும் வசதிகளை (Ease of Doing Business) வழங்கும் பொருட்டு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் உருவாக்கப்பட்டுள்ள பிரத்தியேக வலைதளத்தின் மூலம் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் வழங்கப்படும் சட்டப்பூர்வமான ஒப்புதல்களை இணையதளம்

வழியாகவே கட்டணம் செலுத்தி இவ்வியக்கக அலுவலர்களின் மின்கையொப்பத்துடன் (Digital Signature) பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வியக்ககத்தின் பின்வரும் சேவைகளை https://dish.tn.gov.in என்ற வலைதளத்தின் மூலம் பெற இயலும்.

- தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன்கீழ் உரிமம் வழங்குதல்
- தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன்கீழ் உரிமம் புதுப்பித்தல்
- தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன்கீழ் வரைபடங்கள் ஒப்புதல் அளித்தல்.
- ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970-ன்கீழ் பதிவுச்சான்று வழங்குதல்.

- ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970-ன்கீழ் உரிமம் வழங்குதல்.

- மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979-ன்கீழ் பதிவுச் சான்று வழங்குதல்.

- மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979 -ன்கீழ் உரிமம் வழங்குதல்.

- ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கைகள் தாக்கல் செய்தல்.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் 2021-ம் ஆண்டு முதல் புதுப்பிக்கப்படும் உரிமங்களை

இவ்வியக்ககத்தின் வலைதளத்தின் வாயிலாக கட்டணம் செலுத்திய பின்னர் நிர்வாகத்தினரால் தானாகப் புதுப்பிக்கப்பட்ட உரிமங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வியக்கக வலைதள மாற்றம் மற்றும் மேம்பாடு தொடர்பாக ரூ.1.73 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2.3.3. ஆய்வு முறை

ஆய்வுகளில் வெளிப்படைத்தன்மையை மேலும் அதிகரிக்கும் விதமாக "இடர் அளவீட்டின் படியான கணினி மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆய்வுகள்", ஆய்வு அலுவலர்கள் ஒதுக்கீடு செய்தல் போன்ற சீர்திருத்தங்கள் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் ஆய்வு முறைகளில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

வெளிப்படைத்தன்மையை ஊக்குவிக்கும் வகையில் ஆய்வு முறைகளில் பின்வரும் கொள்கைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

(i) ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலை / கட்டடம் அல்லது இதர கட்டுமான நிறுவனத்தில் பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் கீழ் ஒரே சமயத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii) ஒரே அலுவலர் ஒரே தொழிற்சாலை / கட்டடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனத்தை இரண்டு முறை தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொள்ளக்கூடாது.

(iii) அனைத்து வகையான ஆய்வுகளுக்குமான ஆய்வறிக்கை ஆய்வு முடிந்த 24 மணிநேரத்திற்குள் துறை மற்றும் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை / கட்டடம் மற்றும் இதர

கட்டுமான நிறுவனத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டும்.

தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி முறையின் அடிப்படையிலும் அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் அதிக அபாயகரமான, நடுத்தர அபாயகரமான மற்றும் குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.3.3.1. அதிக அபாயகரமான தொழிற்சாலைகள்

100 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் அபாயகரமான செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் (தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 87 மற்றும் விதி 95-ன்கீழ் வகைபடுத்தப்பட்டவை) மற்றும் ஊறுவிளைவிக்கும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் (தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு 2 (cb)-ன் அட்டவணையில் பட்டியலிடப்பட்டவை) மற்றும் அனைத்து

பெருவிபத்து இடர் தரும் தொழிற்சாலைகள் "அதிக அபாயகரமான தொழிற்சாலைகள்" என வகைபடுத்தப்பட்டுள்ளது.

### 2.3.3.2. நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள்

100 தொழிலாளர்கள் வரை பணிபுரியும் அபாயகரமான தொழில் முறை கொண்ட தொழிற்சாலைகள் (தொழிற்சாலைகள் சட்டப்பிரிவு 87 மற்றும் விதி 95-ன்கீழ் வகைப்படுத்தப்பட்டவை) மற்றும் ஊறுவிளைவிக்கும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் (தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு 2 (cb)-ன் அட்டவணையில் பட்டியலிடப்பட்டவை) மற்றும் 250 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் அபாயகரமான தொழில் முறை மற்றும் ஊறுவிளைவிக்கும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் என வகைபடுத்தப்படாத

தொழிற்சாலைகள் "நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள்" என வகைபடுத்தப்பட்டுள்ளது.

### 2.3.3.3. குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள்

அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் மற்றும் நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்ட தொழிற்சாலைகள் தவிர மற்ற அனைத்து தொழிற்சாலைகளும் "குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள்" என வகைபடுத்தப்பட்டுள்ளது.

அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் குறிப்பற்ற முறையில் வருடத்திற்கு ஒரு முறையும், நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் குறிப்பற்ற முறையில் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையும், குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் குறிப்பற்ற முறையில் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

01.04.2021 முதல் 31.03.2022 உடன் முடிவடைந்த காலத்தில் தொழிற்சாலைகளில், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் 9,207 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

## 2.3.4. சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம்

### (i) சுய சான்றிதழ் திட்டம்

250 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகளுக்கும், குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகளுக்கும் சுய சான்றிதழ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகளுக்கு ஆய்விலிருந்து விலக்களிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பதிவு

செய்யப்பட்டுள்ள நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் குறிப்பற்ற முறையில் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படும்.

**(ii) எளிதாக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள்**

தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு பயனளிக்கும் விதமாகவும், நடைமுறைகளை எளிமையாக்கவும், துரிதமாக்கவும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950-ன் விதி 100-ன்படி தொழிற்சாலைகள் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையினை படிவம் எண் 22-ல் சமர்பிக்க வேண்டும். பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழான பல்வேறு விவரங்கள் இணைய வழியாக ஒரே படிவத்தில் சமர்ப்பிக்கப்படுவதால் பல்வேறு தொழிலாளர்

சட்டங்களின் கீழ் தனித்தனியாக ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

### 2.3.5. நீடித்த வளர்ச்சிக்கான நிலையான இலக்கிற்கான குறியீடுகளை மேம்படுத்த இவ்வியக்ககம் சார்ந்த முயற்சிகள்

ஐக்கிய நாடுகள் சபையால் 2015-ஆம் ஆண்டு உலகளாவிய இலக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள், சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை சமப்படுத்தும் வகையில் அமைய வேண்டும்.

**இலக்கு எண். 5.1.**

**வழக்கமான சம்பளம்/ஊதியம் பெறும் தொழிலாளர்களில் பெண் மற்றும் ஆண் தொழிலாளர்களால் பெறப்படும் சராசரி ஊதியம் / சம்பள ஈட்டும் விகிதம்.**

தற்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களால் மேற்கொள்ளப்படும் பணியின் தன்மை வேறுபட்டு இருப்பதால் அவர்கள் ஈட்டும் சம்பளம் / ஊதியம் வேறுபட்டுள்ளது. பணிகளில் பாலினப்பாகுபாட்டின் அடிப்படையில் ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கான சம்பள/ஊதிய வேறுபாட்டினை தவிர்க்கும் வகையில் சம ஊதிய சட்டம், 1976-ஐ அமலாக்கம் செய்வதன் மூலம் ஒரே மாதிரியான தன்மை கொண்ட பணிகளில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு, ஆண்களுக்கு இணையான ஊதியம் உறுதி செய்யப்பட்டு, பாலின அடிப்படையில் பெண்களுக்கு எதிராக வேறுபாடு காணுதல் தவிர்க்கப்பட்டுள்ளது.

**இலக்கு எண். 5.5**

**பெண் மற்றும் ஆண் தொழிலாளர்களின் பங்களிப்பு விகிதம் (LFPR)**

பெண் தொழிலாளர்களின் உடல் நலம், பாதுகாப்பு மற்றும் நலன் ஆகியவற்றை உறுதிசெய்வதன் மூலம் அவர்களை அதிகளவில் தொழில் துறையில் பணிசெய்ய ஊக்குவிக்கவும், பெண் தொழிலாளர்களின் பங்களிப்பு விகிதத்தை மேம்படுத்தவும் பின்வரும் வசதிகள் செயல்படுத்தப்படுகிறது.

(i) இரவு நேரங்களில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான முறையில் போக்குவரத்து வசதியினை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(ii) பெண் தொழிலாளர்களுக்கு சுகாதார வசதிகள், உடல்நலம் மற்றும் நலவசதிகளை முறையாக அமலாக்கம் செய்தல்.

(iii) தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள இடங்களில் பொதுவான குழந்தைகள் காப்பகம் அமைத்தல்.

(iv) பணியிடங்களில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் (தடுத்தல், தடை மற்றும் நிவாரணம்) சட்டம், 2013-ஐ முறையாக செயல்படுத்துதல் மற்றும் அனைத்து தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் பாலியல் உள்புகார் குழு அமைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்தல்.

(v) தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தங்கும் விடுதிகள் மற்றும் வீடுகள் (ஒழுங்குமுறை) சட்டம், 2014-ன்கீழ் உள்ள சட்டபூர்வ விதிகள் குறித்த

விழிப்புணர்வை தொழிற்சாலை நிர்வாகங்களிடையே ஏற்படுத்துதல்.

### 2.3.6. பட்டாசுத் தொழிற்சாலை ஆய்வுகள்

பட்டாசு உற்பத்தியில் கையாளப்படும் அனைத்து இரசாயனங்கள், இடைப்பட்ட உற்பத்தி பொருட்கள், இறுதியாக தயாரிக்கப்படும் பட்டாசுகள் ஆகியவை மிகவும் அபாயகரமான தன்மையுடையவை என்பதால் உரிய பாதுகாப்பு வழிமுறைகள் கடைபிடிக்கப்படாவிடில், அவை தொழிலாளர்களின் உயிருக்கும், பாதுகாப்பிற்கும் ஊறு விளைவிப்பதாக அமைந்து விடும். எனவே, பட்டாசு தொழிற்சாலைகளில், தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு காலமுறைதோறும் ஆய்வு செய்யப்பட்டு பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பான செயல்முறைகள் மற்றும் கையாளும் வழிமுறைகள் குறித்து கற்றுத் தரப்படுகிறது.

01.04.2021 முதல் 31.03.2022 உடன் முடிவடைந்த காலத்தில் விதி மீறல்கள் காணப்பட்ட பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு எதிராக 409 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.22,24,000/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

### 2.3.6.1. பட்டாசுத் தொழிற்சாலைகளுக்கான சிறப்பு நடமாடும் கண்காணிப்புக் குழு

பட்டாசு தொழிற்சாலைகள் அபாயகரமானவை மட்டுமின்றி அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்களைக் கொண்டவையாகும். விருதுநகர் மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் பட்டாசு தொழிற்சாலைகள் இயங்கி வருவதால், அத்தொழிற்சாலைகளில் பாதுகாப்பு வழிமுறைகளை கூடுதல் முனைப்புடன் நடைமுறைப்படுத்தி, பாதுகாப்பான பணி நிலைமைகளை உறுதி செய்யும் வகையில் அத்தொழிற்சாலைகளை ஆய்வு செய்ய தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக

கூடுதல் இயக்குநர் தலைமையில், பிரத்தியேகமாக ஒரு நடமாடும் கண்காணிப்புக் குழு உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழு, தொழிலாளர்களது பணிப் பாதுகாப்பை உறுதி செய்ய தொழிற்சாலைகளில் திடீர் ஆய்வுகளை மேற்கொள்வதோடு அங்குள்ள தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினருக்கு பாதுகாப்புடன் பணிபுரியும் வழிமுறைகள் குறித்து எடுத்துரைக்கிறது.

நடமாடும் கண்காணிப்புக் குழு உருவாக்கப்பட்ட பின்னர், பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினர் மற்றும் தொழிலாளர்கள், பாதுகாப்பு விதிமுறைகளை நன்கு அறிந்துள்ளனர்.

01.04.2021 முதல் 31.03.2022 உடன் முடிவடைந்த காலத்தில், இக்குழுவால் 197 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு விதி மீறல்கள் காணப்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது 24 வழக்குகள்

தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.2,65,000/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

பட்டாசு தொழிற்சாலைகளில் நிகழும் விபத்துக்களை குறைக்கும் பொருட்டு அத்தொழிற்சாலைகளில் கடைபிடிக்கப்படும் பாதுகாப்பு வழிமுறைகளை காலமுறைதோறும் திறனாய்வு செய்ய விருதுநகர், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு பாதுகாப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

### 2.3.7. தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல்

தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன் பிரிவு 67 மற்றும் குழந்தை மற்றும் வளரிளம் தொழிலாளர் (தடை செய்தல் மற்றும் முறைபடுத்துதல்) சட்டம், 1986-ல் வரையறுக்கப்பட்டவாறு தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர் பணியமர்த்தப்படுவதை தடுக்கும் வகையில்,

இவ்வியக்கக அலுவலர்களால் காலமுறைப்படி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், ஒவ்வொரு மாதமும் தொழிலாளர் துறை மற்றும் தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட அலுவலர்களுடன் இணைந்து தொழிற்சாலைகள் மற்றும் சிறு நிறுவனங்களில் குழு ஆய்வுகளும் நடத்தப்படுகின்றன. 01.04.2021 முதல் 31.03.2022 உடன் முடிவடைந்த காலத்தில் 1,486 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, சட்ட விதிகளை மீறி செயல்பட்ட வேலையளிப்போர் மீது நீதிமன்றங்களில் 7 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

### 2.3.8. இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகள்

ஊறுவிளைவிக்கும் மூலப்பொருட்கள் மற்றும் இரசாயனங்களை பயன்படுத்தும் தொழிற்சாலைகளில் அவற்றை சேமித்து வைக்கும் / கையாளும் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கும், உடல்நலத்திற்கும் ஊறு

விளைவிக்கக் கூடியதாகவும் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தக் கூடியதாகவும் விளங்கும் தொழிற்சாலைகள் ஊறுவிளைவிக்கும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் என தொழிற்சாலைகள் சட்டம், 1948 (திருத்தப்பட்ட சட்டம், 1987) பிரிவு 2(cb)ன் கீழ் வகைபடுத்தப்பட்டுள்ளன. தொழிற்சாலைகள் சட்டம், 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987)-ன் பிரிவு 2(cb)-ன்கீழ் முதல் அட்டவணையில் 29 செயல்முறைகள், இடர்தரும்தொழில் செயல்முறைகளாக பட்டியலிடப்பட்டுள்ளன.

### 2.3.9. பெரும்விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள்

ஊறுவிளைவிக்கும் இரசாயனங்களின் உற்பத்தி, சேமிப்பு மற்றும் இறக்குமதி விதிகள், 1989-ன் அட்டவணை-3-ல் குறிப்பிட்டுள்ள அதிகபட்ச அளவுக்கு மேல்

இரசாயனங்களை சேமிக்கும் மற்றும் கையாளும் தொழிற்சாலைகள் பெரும்விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. 31.03.2022 அன்றைய நிலையில் தமிழ்நாட்டில் 175 தொழிற்சாலைகள் பெரும் விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள் என கண்டறியப்பட்டுள்ளன.

அவசர காலகட்டத்தில் ஏற்படக் கூடிய நடைமுறை பிரச்சனைகளை சரியாக அளவீடு செய்யும் பொருட்டு, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களின் மேற்பார்வையில் இத்தொழிற்சாலைகளில் மாதிரி ஒத்திகைகள் காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. 01.04.2021 முதல் 31.03.2022 உடன் முடிவடைந்த காலத்தில் 75 மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன.

### 2.3.10. மனை மதிப்பீட்டுக் குழு

இடர்தரும் செயல்முறைகளைக் கொண்ட தொழிற்சாலைகள் துவக்குவதற்கு முன்னரோ

அல்லது விரிவாக்கம் செய்வதற்கு முன்னரோ அனுமதி கோரி தொழிற்சாலை நிர்வாகத்தினரால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மீது அரசுக்கு ஆலோசனை வழங்க, தொழிற்சாலைகள் சட்டம், 1948-ன் (திருத்தப்பட்ட சட்டம், 1987) கீழ் வரையறுக்கப்பட்டவாறு 'மனை மதிப்பீட்டுக் குழு' ஒன்று மாநில அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்வதோடு, பாதுகாப்பான சூழ்நிலை மற்றும் பாதுகாப்பான பணி செயல்முறைகளுடன் துவக்க நிலையிலிருந்தே இயங்குவதற்கு உரிய வழிமுறைகள் குறித்து இடர்தரும் செயல்முறைகளைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கு அறிவுரை வழங்குகிறது. 01.04.2021 முதல் 31.03.2022 உடன் முடிவடைந்த காலத்தில் 11 விண்ணப்பங்கள் மனை மதிப்பீட்டு குழுவால் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது.

## 2.4. தொழிற்சாலைகளில் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேம்பாடு குறித்த செயல்பாடுகள்

### 2.4.1. உடல்நல மேம்பாட்டு செயல்பாடுகள்

இவ்வியக்ககத்தில், ஒரு தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் எட்டு உதவி அறுவை மருத்துவர்களுடன் மருத்துவ பிரிவு இயங்கி வருகிறது. இப்பிரிவு அபாயகரமான மற்றும் இடர்தரும் செயல்முறைகளில் ஈடுபடும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர்களுக்கு காலமுறைப்படி மருத்துவ பரிசோதனை செய்து, மருத்துவ அறிவுரைகள் மற்றும் இதர தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகள் வழங்கும் பணியை மேற்கொண்டு வருகிறது. குழந்தைத் தொழிலாளர்களின் வயதினை உறுதி செய்திடும் பொருட்டு குழந்தைத் தொழிலாளர்

ஆய்வுக் குழுவுடன் மருத்துவ அலுவலர்கள் செல்கின்றனர்.

01.04.2021 முதல் 31.03.2022 உடன் முடிவடைந்த காலத்தில் மருத்துவ அலுவலர்கள், அபாயகரமான மற்றும் இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளில் பணிபுரியும் 1,82,799 தொழிலாளர்களுக்கும், உணவகங்களில் பணிபுரியும் 14,159 தொழிலாளர்களுக்கும் மருத்துவச் சான்றிதழ்களை வழங்கி உள்ளனர். மேலும், 27,899 வளரிளம் பருவத்தினருக்கு உடல் தகுதிச் சான்றிதழ்களையும் வழங்கியுள்ளனர்.

### 2.4.2. இரைச்சலின் அளவினைக் கண்காணித்தல்

தொழிற்சாலைகளில் நிலவும் அதிகப்படியான இரைச்சலால் தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய உடல்நலக் கேடுகளைத் தடுக்க இவ்வியக்ககம் சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது. ஒலி அளப்பான் மூலம் இரைச்சலை அளவிட்டு, தொழிலாளர்களை

அதிகப்படியான இரைச்சலின் பாதிப்பிலிருந்து பாதுகாத்திட இவ்வியக்ககம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆய்வுகளின் போது இது சம்பந்தமாக தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்படுவதுடன், தேவைப்படும் நிகழ்வுகளில் சட்ட ரீதியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது.

### 2.4.3. பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு

பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள், பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள், பாதுகாப்பு ஒத்திகைகள் போன்ற பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இவ்வியக்கக அலுவலர்கள் விபத்துக்களை குறைக்க தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மண்டலங்களில் மூன்று பாதுகாப்பு பிரச்சாரக்குழுக்கள் இவ்வியக்ககத்தால்

உருவாக்கப்பட்டு, இக்குழுக்கள் இரசாயனம், பட்டாசு, தோல்பதனிடும் தொழிற்சாலைகள், வெளுத்தல் மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்கு காலமுறை அடிப்படையில் சென்று அத்தொழிற்சாலைகள் பாதுகாப்பு வழிமுறைகளை ஆய்வு செய்து, அத்தொழிற்சாலைகள் எதிர்நோக்கக்கூடிய திடீர் அபாயங்கள் குறித்தும் விபத்துகளை தவிர்க்க அத்தொழிற்சாலைகளில் கடைபிடிக்க வேண்டிய போதுமான பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் நிர்வாகத்தினர் மற்றும் தொழிலாளர்களுக்கு எடுத்துரைக்கின்றன.

01.04.2021 முதல் 31.03.2022 உடன் முடிவடைந்த காலத்தில் இக்குழுக்களால் 84 பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டு, 3,852 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

### 2.4.4. பாதுகாப்புப் பயிற்சி

இவ்வியக்கக அலுவலர்களால் தொழிற்சாலை வளாகத்திலேயே, பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. 01.04.2021 முதல் 31.03.2022 உடன் முடிவடைந்த காலத்தில் 518 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 19,445 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

பாதுகாப்பு கருத்தரங்குகள் நடத்துதல் போன்ற பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபட்டு வரும் தேசிய பாதுகாப்பு குழுமம் மற்றும் தேசிய உற்பத்தி குழுமம் போன்ற பிற அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும், நிரந்தரத் தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

## 2.4.5. அழுத்தக்கலன் பாதுகாப்பினை உறுதி செய்தல்

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்துவதோடு மட்டுமல்லாமல் தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள அழுத்தக்கலன்கள் பாதுகாப்பாக செயல்படுவதையும் இவ்வியக்கக அலுவலர்கள் உறுதி செய்கின்றனர். இந்திய கொதிகலன்கள் சட்டத்தின் கீழ் வரும் நீராவி கொதிகலன்களைத் தவிர்த்து, வாயு மண்டல காற்று அழுத்தத்திற்கு மேல் (above atmospheric pressure) செயல்படும் அனைத்து அழுத்தக்கலன்களிலும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வெளிப்புற சோதனையும், ஆண்டுக்கு ஒரு முறை உட்புற சோதனையும் அல்லது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நீரழுத்த சோதனையும் அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நுண்ணொலி சோதனையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 01.04.2021 முதல்

31.03.2022 உடன் முடிவடைந்த காலத்தில் மொத்தம் 1,38,717 வெளிப்புற, 1,574 உட்புற, 16,263 நீர் அழுத்த மற்றும் 7,804 நுண்ணொலி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.4.6. தொகுப்பு தனிநபர் விபத்துக் காப்பீட்டுத் திட்டம்

மாண்புமிகு உச்சநீதிமன்ற ஆணையின்படி, தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்தில் மரணமடையும் தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கு நிவாரணமாக ரூ.50,000/- வழங்க வகை செய்யும் புதிய தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டமானது தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இக்காப்பீட்டிற்கான பிரிமியத் தொகை பல்வேறு காப்பீட்டு நிறுவனங்கள், பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் ஆகியோருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயம்

செய்யப்படுகிறது. ஒவ்வொரு தொழிலாளிக்கும் பிரிமியம் செலுத்த வேண்டியது வேலையளிப்போரின் சட்டப்பூர்வமான பொறுப்பாகும். இந்த நிவாரணமானது, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் (E.S.I Scheme) மற்றும் பணியாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணங்கள் அல்லாது கூடுதலாக வழங்கப்படுவதாகும். நடப்பு ஆண்டில் யாதொரு நாளில் பணிபுரிந்துள்ள தொழிலாளர்களின் அதிகபட்ச எண்ணிக்கையோடு கூடுதலாக 10% எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் இக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட வேண்டும். தற்போது, தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, திருத்தங்கல் என்ற காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான தொகுப்பு காப்பீட்டுத் திட்டம் புதுப்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 2.4.7. பாதுகாப்பு விருதுகள் வழங்கும் திட்டம்

#### 2.4.7.1. மாநில பாதுகாப்பு விருதுகள்

விபத்து தடுப்பில் சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டு தொழிலாளர்களிடையே பாதுகாப்பு உணர்வை மேம்படுத்தி, சிறந்த பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றி விபத்தில்லா நிலையை எட்டும் நோக்குடன் செயல்படும் தொழிற்சாலை நிர்வாகத்தினரை ஊக்குவித்து அவர்களைப் பெருமைப்படுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும், மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் விபத்துகளைக் குறைக்கும் விதமாக செயல்படும் பல்வேறு வகை தொழிற்சாலைகளுக்கு ஆண்டுதோறும் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளாக ஒவ்வொரு பிரிவிலும் தலா 90 விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### 2.4.7.2. உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்

தொழிற்சாலைகளில் உற்பத்தி திறனை உயர்த்துதல், பணிச்சூழலை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றில் சிறந்த ஆலோசனைகளை வழங்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம், ஆண்டுதோறும் "தமிழ்நாடு அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்" வழங்கப்பட்டு வருகின்றன.

## 2.5. கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு விதிகள், 2006 மற்றும் அதனைச் சார்ந்த தொழிலாளர் நலச் சட்டங்களை கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் அமலாக்கம் செய்தல்

கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு

கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகள் 2006-ன்கீழ் கட்டுமான நிறுவனங்களில் உள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் அடிப்படை வசதிகள், பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் இதர வசதிகளை உறுதி செய்வதை முதன்மை நோக்கமாக கொண்டு கட்டுமானம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு கடந்த 2013-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம் மற்றும் விதிகளை அமலாக்கம் செய்வதோடு கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழில்களில் ஈடுபட்டுள்ள நிர்வாகத்தினர், ஒப்பந்ததாரர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி அளித்து கட்டுமான இடங்களில் பாதுகாப்பினை

மேம்படுத்தவும், விபத்துக்களை குறைக்கவும் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

01.04.2021 முதல் 31.03.2022 உடன் முடிவடைந்த காலத்தில், 983 கட்டுமான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, 899 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சட்டவிதிகளை மீறி செயல்பட்ட நிறுவனங்கள் மீது ஆய்வின் பொழுது காணப்பட்ட முரண்பாடுகளுக்காக 181 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றங்களால் 65 வழக்குகளில் ரூ.2,18,000/- அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

**2.5.1. கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் எளிமையாக்கப்பட்ட தொழில் தொடங்கும் நடைமுறைகளை ஊக்குவித்தல்**

தொழில் முனைவோருக்கு சுலபமாக தொழில் தொடங்கும் வசதிகளை (Ease of Doing Business)

வழங்கும் பொருட்டு தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் உருவாக்கப்பட்டுள்ள பிரத்தியேக வலைதளத்தின் மூலம் பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் கீழ் வழங்கப்படும் சட்டப்பூர்வமான ஒப்புதல்களை இணையதளம் வழியாகவே கட்டணம் செலுத்தி இவ்வியக்கக அலுவலர்களின் மின்கையொப்பத்துடன் (Digital Signature) இவ்வலைதளம் மூலம் பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வியக்ககத்தின் பின்வரும் சேவைகளை http://dish.tn.gov.in என்ற வலைதளத்தின் மூலம் பெற இயலும்.

- கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம் 1996-ன் கீழ் கட்டுமான நிறுவனங்களை பதிவு செய்தல்.

- ❖ ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970-ன்கீழ் பதிவுச் சான்று வழங்குதல்.
- ❖ ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970-ன்கீழ் உரிமம் வழங்குதல்.
- ❖ மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979-ன்கீழ் பதிவுச் சான்று வழங்குதல்.
- ❖ மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979-ன்கீழ் உரிமம் வழங்குதல்.

❖ ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்தல்.

### 2.5.2. ஆய்வு முறை

கட்டடம் மற்றும் இதர கட்டுமானங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளை முறைப்படுத்தும் விதமாக கட்டுமான பணித்தன்மையின் அடிப்படையிலும் அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் கட்டுமான பணியிடங்கள் அதிக அபாயகரமான, நடுத்தர அபாயகரமான மற்றும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

#### 2.5.2.1. அதிக அபாயகரமான கட்டுமானங்கள்

கட்டுமான பணியிடங்களில் 500 தொழிலாளர்களுக்கு மேல் பணியமர்த்தப்படும் கட்டுமானங்கள், 5 மற்றும் அதற்கு மேற்பட்ட

தளங்கள் கொண்ட கட்டுமானங்கள், இரயில்வே கட்டுமானங்கள், மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மான கட்டுமான பணிகள், அணை கட்டுமானம் போன்ற அபாயங்கள் நிறைந்த அனைத்து கட்டுமானங்களும் பணியாளர்களின் எண்ணிக்கையினை கருத்தில் கொள்ளாமல் அதிக அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளது.

### 2.5.2.2. நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள்

50 முதல் 500 தொழிலாளர்கள் வரை பணியமர்த்தப்படும் கட்டுமானங்கள் மற்றும் 2-லிருந்து 5 தளங்கள் வரை கொண்ட கட்டுமானங்கள் பணியாளர்களின் எண்ணிக்கையினை கருத்தில் கொள்ளாமல் நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளது.

### 2.5.2.3. குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள்

அதிக அபாயகரமான கட்டுமானங்கள் மற்றும் நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்ட கட்டுமானங்களைத் தவிர மற்ற அனைத்து கட்டுமானங்களும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளது.

கட்டுமான நிறுவனங்கள் குறிப்பற்ற முறையில் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் குறிப்பிட்ட இடைவெளிகளில் ஆய்வு செய்யும் வண்ணம் ஆய்வு அட்டவனை இணைய வழி முறையில் தேர்வு செய்யப்படும். அதிக அபாயகரமான கட்டுமானங்கள் குறிப்பற்ற முறையில் வருடத்திற்கு ஒருமுறையும், நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் குறிப்பற்ற முறையில் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் குறிப்பற்ற முறையில்

மூன்று வருடங்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

## 2.5.3. சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம்

### 2.5.3.1. சுய சான்றிதழ் திட்டம்

"சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம்" பின்வரும் கட்டுமான நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அ) நடுத்தர அபாயகரமான கட்டுமான நிறுவனங்கள்

ஆ) குறைந்த அபாயகரமான கட்டுமான நிறுவனங்கள்

சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குறைந்த அபாயகரமான

கட்டுமான நிறுவனங்களுக்கு ஆய்விலிருந்து விலக்களிக்கப்படும். மேற்படி திட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நடுத்தர அபாயகரமான கட்டுமான நிறுவனங்கள் குறிப்பற்ற முறையில் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படும்.

### 2.5.4. கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு

கட்டுமான இடங்கள், அதிகப்படியான தொழிலாளர்கள் செறிந்துள்ளதாகவும், கல்வியறிவு இல்லாத வெளி மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்களை அதிகளவில் பணியமர்த்தும் இடங்களாக இருப்பதாலும், பாதுகாப்பான பணி முறைகள் குறித்து விழிப்புணர்வு இல்லாததாலும் அதிக விபத்துக்கள் நிகழ வாய்ப்புள்ள இடங்களாக உள்ளதால் அவர்களது தாய் மொழியிலேயே பாதுகாப்பு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. கட்டுமான

பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இவ்வியக்கக கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு துணை இயக்குநர்களால் ஒவ்வொரு மாதமும் தலா இரண்டு பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

01.04.2021 முதல் 31.03.2022 உடன் முடிவடைந்த காலத்தில், 1,110 தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் 38 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்படுத்தப்பட்டு விபத்துகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.

### 2.5.5. சிறப்பு முயற்சிகள்

❖ **கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள்**

கட்டுமான தொழிலில் ஈடுபட்டுள்ள 1 இலட்சம் கட்டுமான தொழிலாளர்களுக்கு ரூ.16.57 கோடி செலவில் முழு உடல் பாதுகாப்பு கச்சை, பாதுகாப்பு தலைக்கவசம், மின்பாதுகாப்பு காலணிகள், பாதுகாப்பு காலணிகள், பிரதிபலிக்கும் மேலங்கி, மூக்குக்கவசம், கையுறைகள் (காட்டன்), இரப்பர் கையுறைகள், மின் பாதுகாப்பு கையுறைகள், இரப்பர் பூட்ஸ், பாதுகாப்பு கண்ணாடி மற்றும் வெல்டிங் முகக்கவசம் ஆகிய பாதுகாப்பு உபகரணங்கள் கொண்ட பெட்டகம் கொள்முதல் செய்யப்பட்டு, கட்டுமான தொழிலாளர்களுக்கு வழங்கும் பணி தற்போது துவங்கப்பட்டுள்ளது.

- **இரசாயனங்களைப் பாதுகாப்பாகக் கையாளுவது குறித்து இயக்கக அலுவலர்களுக்குப் பயிற்சி வழங்குதல்**

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களுக்கு இரசாயன பாதுகாப்பு குறித்த பயிற்சி வழங்குவதற்கு அரசால் ரூ.22 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அனைத்து அலுவலர்களுக்கும் மார்ச், 2022 மாதத்தில் பயிற்சி வழங்கப்பட்டது.

- **உள்வளாக மற்றும் வெளிவளாக அவசரகால மாதிரி ஒத்திகைகள் குறித்த குறும்படங்கள் தயாரித்தல்**

உள்வளாக மற்றும் வெளிவளாக அவசரகால மாதிரி ஒத்திகைகள் குறித்த குறும்படங்கள் தயாரிக்க ரூ.19.97 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

❖ **இரசாயனம், சிமெண்ட் மற்றும் பஞ்சாலைத் தொழிற்சாலைகளுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்**

இரசாயன தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் அத்தொழிற்சாலைகளில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைககள் குறித்து 25.09.2021 அன்று கடலூரில் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்கள் தலைமையில் விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டு 14 இரசாயன தொழிற்சாலைகளை சேர்ந்த 40 நிர்வாக பிரதிநிதிகள் பயனடைந்துள்ளனர்.

- கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள பல்வேறு தொழிற்சாலைகளைச் சேர்ந்த 156 நிர்வாகப் பிரதிநிதிகளுக்கு வலைதளம் வாயிலாக "தொழிலகப் பாதுகாப்பு மற்றும் விபத்து தடுப்பு நடவடிக்கைகள்" குறித்த கருத்தரங்கு 29.09.2021 அன்று கோயம்புத்தூர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் அவர்களால் நடத்தப்பட்டது.

- 12 சிமெண்ட் தொழிற்சாலைகளைச் சேர்ந்த 70 நிர்வாக பிரதிநிதிகளுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டம் திருச்சியில் 27.11.2021 அன்று நடத்தப்பட்டு "சிமெண்ட் தொழிற்சாலைகளில் விபத்து தடுப்பு மற்றும் தொழில்வழி சுகாதாரத்திற்கான சிறந்த நடைமுறைகள்" குறித்த கையேடு தயாரிக்கப்பட்டு தொழிலகப் பாதுகாப்பு மற்றும்

சுகாதார இயக்குநர் அவர்களால் வெளியிடப்பட்டது.

- ஈரோடு மாவட்டத்திலுள்ள தொழிற்சாலைகளில் குளோரினை பாதுகாப்பாக கையாள்வது குறித்த விழிப்புணர்வு கூட்டம் 24.11.2021 அன்று இவ்வியக்கக அலுவலர்களால், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலர்களுடன் இணைந்து நடத்தப்பட்டு, அதில் 67 தொழிற்சாலை நிர்வாகப் பிரதிநிதிகள் பயனடைந்தனர்.

- **பவர்பிரஸ் மற்றும் உயரத்தில் பணிசெய்தல் குறித்து பாதுகாப்பு கையேடு**

ஸ்ரீபெரும்புதூரிலுள்ள ஹீண்டாய் மோட்டார் இந்திய லிட்., என்ற தொழிற்சாலையில் நடத்தப்பட்ட தேசிய பாதுகாப்பு தின விழாவில் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களால்

பவர்பிரஸ் மற்றும் உயரத்தில் பணிசெய்தல் குறித்து பாதுகாப்பு கையேடு வெளியிடப்பட்டது.

### 2.5.6. பட்டாசுத் தொழிற்சாலைகளில் நிகழும் விபத்துகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள்

#### 2.5.6.1. பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

பட்டாசு தொழிற்சாலைகளில் நிகழும் விபத்துகளைக் குறைக்கவும், பட்டாசு ஆலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், இவ்வியக்ககத்தால் மதுரை மண்டலத்தில் பாதுகாப்பு பிரச்சாரக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவால் மதுரை மண்டலத்தில் 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் 32 பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு 1,126 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**2.5.6.2. பட்டாசுத் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம்**

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் பெரும்பாலும் படிப்பறிவு இல்லாதவர்களாகவும், பாதுகாப்பான பணி வழிமுறைகளை அறியாதவர்களாகவும், இரசாயனங்களின் கூறுகள் குறித்து அறியாதவர்களாகவும் உள்ளதால் கடும் விபத்துகள் மற்றும் மரண விபத்துகள் அதிக எண்ணிக்கையில்

நிகழ்கின்றன. பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஃபோர்மேன்கள் / மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் மத்தியில் பட்டாசு தயாரிப்பின் போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு செயல்முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிவகாசியில் ஒரு பாதுகாப்பு பயிற்சி மையம் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் பின்வரும் பாதுகாப்பு அம்சங்கள் குறித்த சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

- இரசாயனங்களின் கூறுகள்
- இரசாயனங்களை கையாளுதல்
- இரசாயனங்களின் கலவை
- இரசாயனங்களின் வேதி வினை
- பாதுகாப்பான செயல்முறைகள்

இப்பயிற்சி மையத்தில், 01.04.2021 முதல் 31.03.2022 வரையான காலத்தில் 61 அமர்வுகளில் ஒரு நாள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு அதன் மூலம் 2,334 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். இதே காலத்தில் 7 ஒருமாத பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 78 ஃபோர்மேன்கள் / மேற்பார்வையாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**2.5.6.3. பட்டாசுத் தொழிற்சாலைகளில் சிறப்பு குழு ஆய்வுகள்**

தீபாவளி பண்டிகையை ஒட்டிய காலங்களில் மாநிலத்தின் மற்ற பகுதியிலிருந்து இணை இயக்குநர்களைக் கொண்ட சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு பட்டாசு தொழிற்சாலைகள் தீவிரமாக

கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இக்குழுக்களின் ஆய்வுகளின் போது பட்டாசுத் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் அபாயகரமான பொருட்களை பாதுகாப்பாக சேமிப்பது மற்றும் கையாளுவது குறித்து கண்காணிக்கப்படுகிறது. விதிமீறல்கள் காணப்படும் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் பட்டாசுத் தொழிற்சாலைகள் பாதுகாப்பாக செயல்படுவதை உறுதி செய்யும் பொருட்டு விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் பிற மாவட்டங்களைச் சேர்ந்த அலுவலர்களால் 472 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2.5.6.4. பட்டாசுத் தொழிற்சாலைகளுக்கான பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள்**

01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான காலத்தில் விருதுநகர் மாவட்டத்தில் இவ்வியக்கக அலுவலர்களால் 20 பாதுகாப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு 761 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## 3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

### வேலைவாய்ப்புப் பிரிவு

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் வாயிலாக தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல், தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துதல் மற்றும் திறன் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றின் மூலமாக மாநிலத்திலுள்ள வேலைநாடுநர்களின் வேலை பெறும் திறன்களை மேம்படுத்துவது வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் தொலைநோக்கு திட்டமாகும். இம்மையங்கள், பொதுத்துறை காலிப்பணியிடங்களுக்கு வேலைநாடுநர்களைப் பதிவு செய்து காலியிட அறிவிப்பு வெளியிடப்படும்போது தகுதியான பதிவுதாரர்களை பரிந்துரை செய்கின்றன.

## 3.1. வேலைவாய்ப்புப் பிரிவின் நிர்வாக கட்டமைப்பு


இயக்குநர் அவர்களின் தலைமையில் இயங்கும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் தலைமையிடத்தில் அவருக்கு உதவ வேலைவாய்ப்பு பிரிவில் இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), இணை இயக்குநர் (தொழில்நெறி வழிகாட்டல்) உள்ளனர். மேலும், இயக்கக நிர்வாகத்தை நடத்திட நான்கு துணை இயக்குநர்கள், ஒரு முதன்மை கணக்கு அலுவலர், மூன்று உதவி இயக்குநர்கள் மற்றும் ஐந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் வேலைவாய்ப்பு பிரிவில் பணியாற்றுகின்றனர்.

மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) அலுவலகங்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு மண்டலங்களில் செயல்படுகின்றன.

வேலைவாய்ப்புப் பிரிவானது, 38 மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள், சென்னை மற்றும் மதுரை ஆகிய 2 இடங்களில் தொழில் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள், சென்னையில் ஒரு மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள், நீலகிரியில் ஒரு பழங்குடியினருக்கான சிறப்பு தொழில் நெறி வழிகாட்டும் மையம் மற்றும் சென்னையில் ஒரு மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம் என மொத்தம் 48 சார்நிலை அலுவலகங்களை உள்ளடக்கியதாகும். இம்மையங்களின் அனைத்து

செயல்பாடுகளும் மண்டல இணை இயக்குநர்கள் (வேலைவாய்ப்பு) மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

## வேலைவாய்ப்புப் பிரிவின் நிர்வாக அமைப்பு பின்வருமாறு



## 3.2. வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களின் செயல்பாடுகள்

- ❖ வேலைநாடுநர்களைப் பதிவு செய்தல், புதுப்பித்தல் மற்றும் கூடுதல் விபரங்களை பதிவு செய்தல்.

- ❖ பொதுத்துறை காலிப்பணியிடங்களுக்கு தகுதியான வேலைநாடுநர்களை பரிந்துரைத்தல்.

- ❖ தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாயிலாக போட்டித்தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.

- ❖ அனைத்து வகைப் போட்டித்தேர்வுகளுக்குமான மென்பாடக் குறிப்புகளை மெய்நிகர் கற்றல் இணையம் வாயிலாக வழங்குதல்.

❖ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்குதல்.

❖ 10 பல்கலைக்கழகங்களில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் பொருளாதாரத்தில் நலிவடைந்த மாணவர்களுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.

❖ அயல்நாட்டு வேலைவாய்ப்பிற்கு பதிவு செய்தல் மற்றும் வழிகாட்டுதல்.

❖ திறன் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு மற்றும் பதிவு மேற்கொள்ளுதல்.

❖ கல்வி நிறுவனங்களில் தொழில்நெறி வழிகாட்டும் உரைகள் நிகழ்த்துதல்.

- ❖ காலமுறைப்படி தொழில்நெறி வழிகாட்டு கையேடுகளை வெளியிடுதல்.
- ❖ தனியார் துறையில் வேலைவாய்ப்பு அளிக்க உரிய கால இடைவெளியில் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல்.
- ❖ தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம் வாயிலாக தனியார் துறை வேலைவாய்ப்புகள் வழங்குதல்.
- ❖ வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டத்தினை செயல்படுத்துதல்.
- ❖ வேலை நிலவர தகவல் தொடர்பிலான புள்ளி விவரங்களை சேகரித்து தொகுத்தல்.

### 3.3. வேலைவாய்ப்பு இணையதளம்

(www.tnvelaivaaippu.gov.in)

வேலைவாய்ப்பு பதிவுகள், புதுப்பித்தல், அறிவிக்கப்பட்ட காலிப்பணியிடங்களுக்கு தகுதியான மனுதாரர்களை பரிந்துரை செய்தல் உள்ளிட்ட அனைத்து வேலைவாய்ப்பு செயல்பாடுகளும், 15.09.2010 அன்று அப்போதைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட இணைய தளம் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உயர்நிலைக்கல்வி மற்றும் மேல்நிலைக்கல்வி தேர்ச்சி பெற்ற மாணவர்களின் வேலைவாய்ப்பு பதிவுகளை பள்ளி வளாகத்திலேயே மேற்கொள்ளும் வசதியினை இவ்விணையதளம் வழங்குகிறது.

31.03.2022 அன்றைய நிலவரப்படி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களின் உயிர்ப்பதிவேட்டில் 76,24,726 நபர்கள்

**உள்ளனர். இவர்களில் 35,63,672 பேர் ஆண்கள், 40,60,817 பேர் பெண்கள் மற்றும் 237 பேர் மூன்றாம் பாலினத்தவர்.**

**உயிர்ப்பதிவேடு விவரங்கள்** :

**(31.03.2022 அன்றைய நிலவரப்படி)**

| **விவரங்கள்** | **பதிவுதாரர்கள்** |
|---|---|
| மொத்த பதிவுதாரர்கள் | 76,24,726 |
| 18 வயதிற்குட்பட்ட பள்ளி மாணவர்கள் | 16,73,803 |
| 18 முதல் 23 வயதிற்குட்பட்ட உயர்கல்வி பயிலும் மாணவர்கள் | 17,32,820 |
| 24 முதல் 35 வயதிற்குட்பட்ட வேலை நாடுநர்கள் | 28,82,193 |
| 36 முதல் 58 வயதிற்குட்பட்ட பதிவுதாரர்கள் | 13,24,170 |
| 58 வயதிற்கு மேற்பட்ட பதிவுதாரர்கள் | 11,740 |

### 3.4. சிறப்பு புதுப்பித்தல் சலுகை

2021-2022 மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது, மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, 2014, 2015 மற்றும் 2016-ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பு பதிவினை புதுப்பிக்க தவறியவர்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகையும், மேலும் 2017, 2018 மற்றும் 2019-ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பு பதிவினை புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட சிறப்பு புதுப்பித்தல் சலுகையினை மேலும் மூன்று மாதங்களுக்கு கால அவகாச நீட்டிப்பும் வழங்கப்பட்டது. இச்சலுகையினைப் பயன்படுத்தி 2,88,108 பதிவுதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

## 3.5. தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள்

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள், தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வாயிலாக வேலைவாய்ப்புகள் குறித்து இளைஞர்களுக்கிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களால் தொழில்நெறி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அனைத்து கல்வி நிறுவனங்களிலும் நடத்தப்படுகின்றன. மேலும், பதிவின்போது வழிகாட்டுதல், குழு மற்றும் தனிநபர் வழிகாட்டுதல், தன்னார்வ பயிலும் வட்டங்களுக்கான சேர்க்கை, திறன் பயிற்சிகளுக்கு பதிவு செய்தல் மற்றும் அயல்நாட்டு வேலைவாய்ப்புகளுக்கு பதிவு செய்தல் ஆகிய செயல்பாடுகள் அனைத்து மையங்களின் வளாகங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆண்டு

தோறும் தொழில்நெறி வழிகாட்டல் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. இக்கண்காட்சிகளை நடத்துவதற்கென அரசு ஒவ்வொரு மையத்திற்கும் ஆண்டுதோறும் ரூ.10,000/- ஒதுக்கீடு செய்கிறது.

### 3.6. தன்னார்வ பயிலும் வட்டங்கள்

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், பணியாளர் தேர்வாணையம், இரயில்வே தேர்வு வாரியம், வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் போன்ற பல்வேறு தேர்வு முகமைகளால் நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகளின் வாயிலாக, பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பல்வேறு காலிப்பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் அமைக்கப்பட்டுள்ள தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாயிலாக போட்டித்தேர்வு

ஆர்வலர்களுக்கான இலவச பயிற்சி வகுப்புகள், திறமையான வல்லுநர்களைக் கொண்டு வழங்கப்படுகின்றன. போட்டித்தேர்வு ஆர்வலர்களுக்காக போட்டித்தேர்வுகளுக்கு தேவையான புத்தகங்கள், தினசரி, வாராந்திர மற்றும் மாதாந்திர இதழ்கள் மற்றும் முந்தைய ஆண்டுகளின் வினாத்தாள்கள் ஆகியவை தன்னார்வ பயிலும் வட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இப்போட்டித்தேர்வுகளுக்கு தேவையான பயிற்சி வகுப்புகள் பெருந்தொற்று சூழலை கருத்திற்கொண்டு இணைய வாயிலாகவோ அல்லது நேரடியாகவோ நடத்தப்படுகின்றன.

சிறந்த பேச்சாளர்கள் மற்றும் தன்னார்வ பயிலும் வட்டத்தில் பயின்று தேர்ச்சி பெற்ற வெற்றியாளர்களை கொண்டு, ஊக்கமூட்டும் உரைகள் நடத்தப்படுகின்றன. போட்டித்தேர்வு ஆர்வலர்களுக்கு மாதிரி தேர்வுகள் மற்றும் மாதிரி

நேர்காணல்கள் நடத்தப்படுகின்றன. இத்தன்னார்வ பயிலும் வட்டங்களின் செயல்பாட்டிற்கு அரசால் ஆண்டுதோறும் ரூ.2.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாயிலாக 2021-2022 நிதியாண்டில் 436 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதில், 25,848 தேர்வர்கள் கலந்து கொண்டனர். தன்னார்வ பயிலும் வட்டங்களில் பயின்ற 590 ஆர்வலர்கள் 2021-2022-ஆம் ஆண்டில் பல்வேறு போட்டித்தேர்வுகளில் வெற்றி பெற்றுள்ளனர்.

### 3.7. கல்லூரிகளில் இலவசப் பயிற்சி வகுப்புகள்

10 பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்ட கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் இறுதியாண்டு மாணவர்கள் பொதுத்துறையில் வேலை பெற உதவும் வகையில் பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்திற்காக

அரசால் ஆண்டிற்கு ரூ.50.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### 3.8. மெய்நிகர் கற்றல் இணையதளம்

(https://tamilnaducareerservices.tn.gov.in')

வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி போட்டித்தேர்வு ஆர்வலர்களுக்கு இணைய வழி கற்றல் வசதியை வழங்குவதற்காக மெய்நிகர் கற்றல் இணையதளம் துவக்கப்பட்டது. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், ஒன்றிய அரசு பணியாளர் தேர்வாணையம், பணியாளர் தேர்வாணையம், ரயில்வே தேர்வு வாரியம் மற்றும் வங்கிப்பணியாளர் தேர்வு நிறுவனம் போன்ற பல்வேறு தேர்வு முகமைகளால் நடத்தப்படும் பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கான காணொளி காட்சிப்பதிவுகள், ஒலிப்பதிவுகள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் தமிழ் மற்றும் ஆங்கில

வடிவில் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இவ்விணையதளத்தில் பதிவு செய்துள்ள பதிவுதாரர்கள் இப்பாடக்குறிப்புகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். போட்டித்தேர்வுகளுக்கான பாடத்திட்டம், எதிர்வரும் தேர்வுகள் பற்றிய ஆண்டு கால அட்டவணை, நடப்பு நிகழ்வுகள், தேர்வு முகமைகளால் அறிவிப்பு செய்யப்படும் காலிப்பணியிடங்கள் ஆகியவை தொடர்பான தகவல்கள் தொடர்ச்சியாக இவ்விணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இவ்விணையதளத்தில் 1,63,008 ஆர்வலர்கள் பதிவு செய்துள்ளனர்.

### 3.9. தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரம்

ஒவ்வொரு ஆண்டும் ஜுலை 2-வது வாரம் தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரமாக அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்

தொழில்நெறி வழிகாட்டும் மையங்களால் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகத்துடன் இணைந்து கொண்டாடப்பட்டு வருகின்றது. 2021-2022-ல் தொழில்நெறி ஆலோசனைகள், தொழில்நெறி வழிகாட்டும் உரைகள், தொழில்நெறி விழிப்புணர்வு கருத்தரங்குகள், திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இணைய வழியாக நடத்தப்பட்டன. மாணவர்களுக்கு விழிப்புணர்வையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தும் வகையில் பல்வேறு திறன் போட்டிகள், வினாடி வினா நிகழ்ச்சிகள், மூன்றாம் பாலினத்தவர், பெண்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

## 3.10. திறன் தமிழகம் இதழ் மற்றும் வெளியீடுகள்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின்

செயல்பாடுகள் இடம்பெறக்கூடிய 'திறன் தமிழகம்' எனும் காலாண்டு இதழினை இத்துறை வெளியிட்டு வருகிறது. இவ்விதழ் துவக்கத்திலிருந்து இதுவரை 16 பதிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

இத்துடன் கூடுதலாக தொழில்நெறி வழிகாட்டும் கையேடுகள், பின்வரும் தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ளன.

- 10-ஆம் வகுப்புக்கு பிறகு?
- 12-ஆம் வகுப்புக்கு பிறகு?
- ஐ.டி.ஐ - க்கு பிறகு?
- பட்டய படிப்பிற்கு பிறகு?
- முதல்தர உயர்கல்வி நிறுவனங்கள் வழங்கும் முதுநிலை பட்டப் படிப்புகள் மற்றும் முதுநிலை பட்டயப்படிப்புகள் - ஒரு பார்வை!

மேற்கூறிய வெளியீடுகள், துறையின் வலைதளத்தில் (www.tnvelaivaaippu.gov.in) மின்-புத்தகங்களாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

### 3.11. மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புப் பிரிவுகள்

மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் வேலைவாய்ப்பு உதவிகள் வழங்குவதற்காக சென்னையில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இயங்கி வருகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கான இச்சேவையினை அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கும் விரிவுபடுத்தும் வகையில் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. போட்டித்தேர்வுகளுக்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள், தனியார் துறை

வேலைவாய்ப்பு உதவி, பல்வேறு வேலைவாய்ப்புகள், திறன் பயிற்சிகள், கல்வி உதவித்தொகைகள், சுய வேலைவாய்ப்பிற்கான திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு உண்டாக்குதல் போன்ற சிறப்பு முன்முனைவுகள், மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. செவிப்புலன் இழந்த மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள் சைகை மொழிபெயர்ப்பாளர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன.

## 3.12. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அதிகம் வசிக்கும் கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஆதிதிராவிடர் மற்றும்

பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் மையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல், நம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகள் நடத்துதல், பல்வேறு போட்டித்தேர்வுகளுக்கான இலவச பயிற்சிகள் வழங்குதல், சுய வேலைவாய்ப்பை மேற்கொள்ள ஊக்குவித்தல், வேலைவாய்ப்பு மற்றும் தொழில் திறனை உயர்த்தும் வகையில் தொழிற்பயிற்சிகள் வழங்குதல் போன்ற செயல்பாடுகள் வாயிலாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பதிவுதாரர்களது தேவைகளை இம்மையங்கள் நிறைவு செய்கின்றன. இம்மையங்களின் மேற்கூறிய செயல்பாடுகளுக்காக அரசு ஆண்டொன்றிற்கு ரூ.20.46 இலட்சம் ஒதுக்கீடு செய்கிறது.

## 3.13. பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம்

உதகமண்டலத்தில் செயல்பட்டு வரும் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையமானது, மாவட்டத்தில் ஒதுக்கமாக உள்ள பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினரிடையே பல்வேறு தொழில்வாய்ப்புகள், உயர்கல்வி வாய்ப்புகள், போட்டித்தேர்வுகள் மற்றும் சுய வேலைவாய்ப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இயங்கி வருகிறது. மேலும், இம்மையமானது உள்ளடங்கிய மலைப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின மாணவர்களின் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவுகளை அந்தந்த பகுதிகளிலேயே மேற்கொள்கின்றது.

## 3.14. மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம்

மெய்நிகர் வகுப்பறைகள் மற்றும் உளவியல் பகுப்பாய்வு சோதனைகளுடன் கூடிய வழிகாட்டும்

வசதிகளுடன் மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையமானது சென்னையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இம்மையம் போட்டித்தேர்வுகளை எழுதும் ஆர்வலர்களுக்கு பயிற்சி வகுப்புகள் மற்றும் மாதிரி தேர்வுகளையும் நடத்துகின்றது. மேலும், இம்மையம் சிறப்பு கல்வித்தகுதிகள் கொண்ட வேலைநாடுநர்களுக்கென சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்களைSயும் நடத்துகின்றது.

## 3.15. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகைத் திட்டம்

மாநிலத்திலுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு நிதி உதவி அளிக்கும் வகையில் 2006-ஆம் ஆண்டு வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத்திட்டம் தொடங்கப்பட்டது. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் பதிவு செய்து, உயிர்ப் பதிவேட்டில்

குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் காத்திருக்கும் பதிவுதாரர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு இவ்வுதவித்தொகை வழங்கப்படுகிறது. இதற்கான தகுதியாக குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/- நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வயது வரம்பு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பினருக்கு 45 ஆகவும், இதர பிரிவினருக்கு 40 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.200/-, 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.300/-, மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.400/- பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.600/- என்ற வீதத்தில் ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது. 2021-2022-ல் 55,342 பயனாளிகளுக்கு ரூ.27.48 கோடி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

## 3.16. அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கான வேலை வாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டம்

வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகையானது மாற்றுத்திறனாளி வேலை நாடுநர்களுக்கும் வழங்கப்படுகிறது. வேலைவாய்ப்பக உயிர்ப்பதிவேட்டில் ஓராண்டிற்கு மேல் காத்திருக்கும் மாற்றுத்திறனாளிகள் வயது வரம்பு மற்றும் பெற்றோர் வருமானம் போன்ற நிபந்தனைகள் ஏதுமின்றி இவ்வுதவித் தொகையினை பெறலாம். இவ்வுதவித்தொகையானது 10 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் முதல் 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் வரை ரூ.600/-, மேல்நிலைக்கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.750/-, பட்டதாரிகளுக்கு ரூ.1,000/- என்ற வீதத்தில் மாதந்தோறும் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை

வழங்கப்படுகிறது. 2021-2022-ல் 14,420 பயனாளிகளுக்கு ரூ.14.42 கோடி உதவித்தொகையாக வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையால் வழங்கப்படுகிறது.

### 3.17. மாதிரித் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்

ஒன்றிய அரசு, மிஷன் மோடு திட்டத்தின் (Mission Mode Project) கீழ் 'மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்' அமைப்பதற்கு நிதி உதவி வழங்கியுள்ளது. முதல் மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையம் வேலூரிலும் அதனைத்தொடர்ந்து கோயம்புத்தூரிலும் 2014-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. வேலைநாடுநர்கள் மற்றும் மாணவர்களுக்கு உளவியல் பகுப்பாய்வு சோதனைகள் செய்து அதன்மூலம் தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் பல்வேறு தொழில் வாய்ப்புகள் குறித்து அதிகளவில் விழிப்புணர்வு உண்டாக்குதல்

மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்களின் நோக்கமாகும்.

இதனைத்தொடர்ந்து, சேலம், திருவள்ளூர், உதகமண்டலம், விழுப்புரம், விருதுநகர், மதுரை மற்றும் இராமநாதபுரம், ஆகிய ஏழு இடங்களில் கூடுதலாக மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மதுரையில் ரூ.47.35 இலட்சம் நிதி ஒதுக்கீட்டிலும், இதர இடங்களில் ரூ.49.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டிலும் இம்மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### 3.18. தனியார் துறை பணியமர்த்தல்

சமீப காலங்களில் தனியார் துறைகளில் அதிக அளவிலான மனித வள தேவைகள் உருவாகியுள்ளது. தனியார் துறைகளில் அதிக அளவிலான பணி நியமனங்களை உறுதி செய்யும் வகையில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களானது சிறிய மற்றும் பெரிய அளவிலான

வேலைவாய்ப்பு முகாம்களை உரிய கால இடைவெளியில் ஏற்பாடு செய்து வேலையளிப்பவர்கள், திறன் பயிற்சி வழங்குபவர்கள் மற்றும் வேலைநாடுநர்கள் நேரடியாக சந்தித்து தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ள உதவுகிறது.சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகங்களில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் நடத்தப்படுகிறது. இத்துடன் ஒவ்வொரு காலாண்டு தோறும் பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டு வேலையளிப்பவர் தகுதியான மனித வளத்தை தேர்வு செய்யவும், வேலைநாடுநர்கள் அதிக அளவிலான வாய்ப்புகளை பெறுவதற்கும் வழிவகை செய்யப்படுகின்றன. வேலைவாய்ப்பு பெறாத வேலைநாடுநர்கள் தங்களது திறமைகளை மதிப்பீடு செய்து, தேவையான திறன் பயிற்சிகள் அல்லது இதர

பயிற்சிகளைப் பெற்று, வேலைவாய்ப்பு பெறுவதற்கு இந்த வேலைவாய்ப்பு முகாம்கள் உதவி செய்கின்றன. வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துவதற்கென அரசு ஆண்டுதோறும் ரூ.1.52 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது.

**2021-2022 காலத்திற்கான புள்ளிவிவரங்கள்**

| வ. எண் | விவரம் | பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் | சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | வேலைவாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | 55 | 364 | 419 |
| 2 | வேலையளிப்பவர்களின் எண்ணிக்கை | 7,086 | 1,838 | 8,924 |
| 3 | வேலைநாடுநர்களின் எண்ணிக்கை | 3,69,885 | 29,744 | 3,99,629 |
| 4 | பணி நியமனம் பெற்றவர்களின் எண்ணிக்கை | 62,534 | 5,480 | 68,014 |

## 3.19. தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம் (www.tnprivatejobs.tn.gov.in)

தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையமானது, வேலையளிப்பவர் மற்றும் வேலைநாடுநர்களை நேரடியாக இணைக்கிறது. சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் பெரு நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களும் இதில் பதிவு செய்து தங்களது தேவைக்கு ஏற்ப மனிதவளத்தை தேர்வு செய்யலாம். அதேபோன்று வேலைநாடுநர்கள் ஊதியம், வேலை செய்யும் இடம், தகுதி மற்றும் தேவைகள் ஆகிய எதிர்பார்ப்புகளுக்கு உட்பட்டு வேலையளிப்பவரை தேர்வு செய்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. வேலைநாடுநர்கள், இவ்விணையதளத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பதிவு செய்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. இச்சேவையானது வேலையளிப்பவர்கள் மற்றும்

வேலைநாடுநர்களுக்கு இலவசமாக இவ்விணையதளம் வாயிலாக வழங்கப்படுகின்றது.

இவ்விணையதளமானது திறன் இடைவெளி, திறன் தேவைகள், மனித வளத் தேவைகள் மற்றும் வழங்கல், பற்றாக்குறை வேலைவாய்ப்புகள் ஆகியவை பற்றி மதிப்பீடு செய்ய உதவுகிறது. ஒவ்வொரு மாவட்டத்தின் தொழிலாளர் சந்தை விவரங்களை உறுதி செய்ய துறை வாரியான காலிப்பணியிடங்கள், துறை வாரியான பணிகள் மற்றும் அறிவிக்கப்பட்ட ஊதிய வாரியான பணிகள் ஆகிய தரவுகளின் பகுப்பாய்வுகளை இவ்விணையம் வழங்குகிறது.

தனியார் துறை நிறுவனங்களில் அதிகளவில் வேலைவாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன், மனிதவள முகமைகள் / ஆலோசனை நிறுவனங்கள் துறையின் இத்தனியார் வேலை இணையத்தில் பதிவு செய்து கொள்ளலாம் என அரசால்

ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வாணைகளின்படி, தனியார் துறையில் அதிகபட்ச பணி நியமன இலக்குகளை எய்தும் வகையில் ஒன்பது மனித வள முகமைகள் / ஆலோசனை நிறுவனங்கள், இவ்விணையத்தில் பதிவு செய்துள்ளன.

**தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம்**

**தொடர்பான புள்ளி விவரங்கள்**

**(31.03.2022 அன்றுள்ளவாறு)**

| வ. எண் | விவரங்கள் | |
|---|---|---|
| 01 | பதிவு செய்துள்ள வேலைநாடுநர்கள் | 1,82,433 |
| 02 | பதிவு செய்துள்ள வேலையளிப்பவர்கள் | 4,283 |
| 03 | அறிவிப்பு செய்யப்பட்ட பணிக்காலியிடங்கள் | 85,425 |
| 04 | வழங்கப்பட்ட பணி நியமனங்கள் | 35,515 |

## 3.20. ஏர்மேன் தேர்விற்கான சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

இந்திய விமானப் படையின் ஒத்துழைப்புடன் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களால் ஏர்மேன் தேர்விற்கான சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. விமான படையில் உள்ள பல்வேறு வேலைவாய்ப்புகள் மற்றும் பயிற்சி வசதிகள், சலுகைகள் மற்றும் பயன்கள், ஏர்மேன் தேர்வு நடைமுறை ஆகியவை பற்றிய விரிவான விவரங்கள் இந்திய விமானப்படை சார்ந்த உயர் அலுவலர்களால் இச்சிறப்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வேலைநாடுநர்களுக்கு எடுத்துரைக்கப்படுகிறது. விமானப் படை தேர்வுகளுக்கான பாடக்குறிப்புகள் மெய்நிகர் கற்றல் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. பள்ளி, கல்லூரி மாணவர்கள் பயன்பெறும்வகையில் விழிப்புணர்வு பேரணிகள்

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களால் விமானப்படை அலுவலர்களுடன் இணைந்து நடத்தப்படுகின்றன.

## 3.21. தொலைக்காட்சி வாயிலாக போட்டித் தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள்

பல்வேறு வகையான போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் கல்வித்தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்புவதற்கான ஆணைகள், அரசாணை (நிலை) எண்.05. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, நாள் 07.01.2022 வாயிலாக அரசால் வெளியிடப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 20.03.2022 அன்று போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளை கல்வித் தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. இப்பயிற்சி வகுப்புகளுக்கான ஒளிபரப்பு திங்கள் கிழமை முதல்

வெள்ளிக்கிழமை வரை காலை 07.00 மணி முதல் 09.00 மணி வரையும் மற்றும் மறுஒளிபரப்பு இரவு 07.00 மணி முதல் 09.00 மணி வரையும் செய்யப்படுகிறது.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், ஒன்றிய அரசுப்பணியாளர் தேர்வாணையம், பணியாளர் தேர்வாணையம், இரயில்வே தேர்வு வாரியம், வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் மற்றும் பல்வேறு முகமைகளால் நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள், பாடங்களில் அனுபவம் பெற்ற சிறந்த பயிற்றுநர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன. சிறந்த பேச்சாளர்களைக் கொண்டு ஊக்கமூட்டும் உரைகள் நிகழ்த்துதல், குழு கலந்துரையாடல்கள், நடப்பு நிகழ்வுகள் மற்றும் முந்தைய ஆண்டுகளின் வினாத்தாள்களை ஆராய்தல் மற்றும் ஆளுமைத்

தேர்வு போன்றவற்றை உள்ளடக்கி இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

**3.22. புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் அமைத்தல்**

2021-2022 மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது, செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, இராணிப்பேட்டை மற்றும் தென்காசி ஆகிய ஐந்து மாவட்டங்களில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் அமைக்கப்படும் என மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அவ்வறிவிப்பினைத் தொடர்ந்து, மேற்கூறிய ஐந்து மாவட்டங்களிலும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி

வழிகாட்டும் மையங்கள் 25.01.2022 முதல் செயல்பட்டு வருகின்றன.

## 3.23. 'முதல்வரின் முகவரி' துறையில் இருந்து பெறப்பட்ட மனுக்கள் மீதான நடவடிக்கைகள்

முதல்வரின் முகவரி துறையிலிருந்து வேலைவாய்ப்பு உதவி வேண்டி பெறப்பட்ட 3,34,077 மனுக்கள் மீது வேலைவாய்ப்பு பிரிவால் மனுதாரர்களின் குறைகளைக் களைய நடவடிக்கை எடுக்கப்பட்டு, 3,33,976 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டன. 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்கள் மீதான விரைவான தீர்வு நடவடிக்கைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 14.08.2021 அன்று இத்துறைக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

### 3.24. நீடித்த வளர்ச்சி இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்கு 8-ன்படி, மாநிலத்திலுள்ள இளைஞர்களின் வேலைபெறும் திறனை மேம்படுத்தும் வகையில், கல்வி நிலையங்களில் தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல், சுய வேலைவாய்ப்பிற்கு ஊக்குவித்தல், வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் தனியார் துறையில் பணியமர்த்தம் செய்தல், திறன் பயிற்சிகள் வாயிலாக திறன் இடைவெளியை நிரப்புதல், மெய்நிகர் கற்றல் இணையம் வாயிலாக இணையவழி பாடக்குறிப்புகளை வழங்குதல், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், ஒன்றிய அரசுப்பணியாளர் தேர்வாணையம், பணியாளர் தேர்வாணையம், இரயில்வே தேர்வு வாரியம், வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் மற்றும் பல்வேறு முகமைகளால்

நடத்தப்படும் அனைத்து வகையான போட்டித் தேர்வுகளுக்கும் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளை கல்வித் தொலைக்காட்சி வாயிலாக ஒளிப்பரப்பு செய்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் வேலைவாய்ப்பு பிரிவு மேற்கொண்டு வருகிறது.

## பயிற்சிப் பிரிவு

மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு திறன் மேம்பாடு இன்றியமையாத நிபந்தனையாகும். மாநிலத்தில் சேவைத் துறையின் வளர்ச்சி மற்றும் தொழில் மயமாக்கலின் வேகத்திற்கேற்ப திறமையான மனித வளத்திற்கான தேவை ஒவ்வோரு ஆண்டும் பன்மடங்காக அதிகரித்துள்ளது. பல்வேறு திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் மட்டுமே தொழிற்துறையின் தேவைகளை பூர்த்தி செய்திடவும் மற்றும் தொழிற்துறையின் தேவைக்கேற்ப இளைஞர்களுக்கு தேவையான திறன் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்திடவும் முடியும்.

உயர்தர திறன்பயிற்சி, வேலையின்மையை குறைப்பதுடன், பொருளாதார வளர்ச்சிக்கும் உதவுகிறது. இது இளைஞர்கள் தங்களது முழுத்திறனையும் வளர்த்துக்கொள்ளும் வகையில்


அவர்களை ஊக்கப்படுத்திட, ஒரு சக்தி வாய்ந்த வழி முறையாக அமைவதுடன் அதன் மூலம் தொழிலாளர்கள் மற்றும் தொழிற்துறையின் உற்பத்தி திறனையும் அதிகரிக்கிறது. மாநிலத்தில் உள்ள இளைஞர்களுக்கு நீண்ட கால திறன் பயிற்சியினை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் பயிற்சி பிரிவின் மூலம் தமிழ்நாடு அரசு அளித்து வருகிறது.

### 3.25. நிர்வாக அமைப்பு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையில் இயக்குநர், துறைத் தலைவராகவும், மாநில தலைமையகத்தில் இயக்குநருக்கு உதவியாக 3 கூடுதல் இயக்குநர்கள் மற்றும் 1 இணை இயக்குநர் செயல்படுகின்றனர்.

மாநிலத்தில் 7 மண்டல இணை இயக்குநர் (பயிற்சி) அலுவலகங்கள் முறையே சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில்

இயங்குகின்றன. மண்டல இணை இயக்குநர்கள் (பயிற்சி) தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சி, தொழிற் பழகுநர் பயிற்சி, தொழிற்பள்ளிகள் மற்றும் பல்வேறு திறன் மேம்பாட்டுத் திட்டங்களை கண்காணிக்கின்றனர். மாநிலத்தில் இயங்கி வரும் 91 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் துணை இயக்குநர் / உதவி இயக்குநர் நிலையிலான முதல்வர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. மாவட்ட அளவில் பல்வேறு குறுகிய கால திறன் பயிற்சி திட்டங்களையும் தொழிற் பழகுநர் பயிற்சி திட்டத்தையும் கண்காணித்திட மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள் உள்ளன.



## 3.26. நீண்ட காலத் திறன் பயிற்சி திட்டங்கள்

1. கைவினைஞர் பயிற்சித் திட்டம்
2. பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு திட்டத்தின்கீழ் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல்.
3. தொழில் மதிப்பு விரிவாக்கத்திற்கான திறன் வலுப்படுத்தும் திட்டம்.
4. மாதிரி தொழிற்பயிற்சி நிலையம்
5. தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம்
6. தேசிய தொழிற்பழகுநர் ஊக்குவிப்பு திட்டம்
7. தொழிற்பள்ளிகள்

## 3.27. கைவினைஞர் பயிற்சித் திட்டம்

தொழிற்பயிற்சி துறையில் இத்திட்டம் மிகவும் முக்கியமான திட்டமாகும். இத்திட்டம் மாநிலம் முழுவதும் பரவி அமைந்திருக்கும் தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் இளைஞர்களை தற்போதைய மற்றும் எதிர்கால மனிதவளத் தேவைக்கேற்ப

வடிவமைத்து உருவாக்குகிறது. நாட்டின் தொழில் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு திறன் பெற்ற மனிதவளத்தை வழங்குவதற்காக அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் நீண்ட கால திறன் பயிற்சிகள் வழங்கப்படுகின்றது. தேசிய திறன் தகுதி கட்டமைப்பிற்கு (NSQF) ஏற்ப திறன் பயிற்சிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடத்தப்படும் பாடத்திட்டம் நிலை 4 (தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் தினசரி வாலாய பணிபுரிவதைப் போன்ற பழக்கமான பணிச்சூழலில் பணியாற்றும் வண்ணம் பயிற்சியாளர்களை பழக்கப்படுத்துவது இதன் நோக்கமாகும்) மற்றும் நிலை 5 (இந்த நிலை தொழிலை மையப்படுத்துவதோடு ஆக்கப்பூர்வமான தொழிற்சாலைகளில் திறன் அடிப்படையிலான வேலைவாய்ப்புகளுக்கு தகுந்தவாறு பயிற்சி பெற்றவர்களை உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது) என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

நீண்ட கால திறன் பயிற்சியில் செய்முறை பயிற்சி மற்றும் தொழிற்பிரிவிற்கான கருத்தியல், பணிமனைக் கணக்கீடுகள் மற்றும் அறிவியல், பொறியியல் வரைபடம் மற்றும் வேலைவாய்ப்புக்கான திறன்கள் ஆகியவை அடங்கும்.

### 3.27.1. அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்

மாநிலம் முழுவதும் உள்ள 91 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் நீண்டகால திறன் பயிற்சி வழங்கப்படுகிறது. இந்த வருடம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் 54 பொறியியல் மற்றும் 24 பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சி காலம் 6 மாதத்திலிருந்து 2 வருடம் வரை உள்ளது. 14 வயது முதல் 40 வயது வரையிலான மாணவர்கள் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கை செய்யப்படுகின்றனர். பெண் பயிற்சியாளர்களுக்கு அதிக பட்ச வயது

வரம்பில்லை. நடைமுறையில் உள்ள இட ஒதுக்கீட்டு விதிகளை பின்பற்றி தகுதி அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை / ஆகஸ்ட் மாதத்தில் சேர்க்கை நடைபெறுகிறது. மையப்படுத்திய இணையவழி சேர்க்கை www.skilltraining.tn.gov.in மூலம் நடத்தப்படுகிறது. மாணவர்கள் தாங்கள் திறன் பயிற்சி பெற விரும்பும் தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவினை அவர்களே தேர்வு செய்யலாம்.

**3.27.2. பாதிக்கப்படக்கூடிய பிரிவினரை மேம்படுத்துதல்**

நீடித்த வளர்ச்சி இலக்கு 4.5-க்கு ஏற்ப பட்டியலின மற்றும் பழங்குடியின இளைஞர்களை அதிக வேலைவாய்ப்பு பெறுபவர்களாக மாற்றிடவும், அவர்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்பாடு அடையச் செய்வதற்கும் பல்வேறு தொழிற்பிரிவுகளில் திறன் பயிற்சி வழங்கப்படுகிறது.

**“2030-ம் ஆண்டுக்குள் கல்வியில் பாலின பாகுபாடுகள் அகற்றப்பட்டு பூர்வீகக் குடியினர், உடற்குறைபாடு உள்ளவர்கள் மற்றும் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலையில் உள்ள குழந்தைகள் என பாதிக்கப்படக்கூடிய அனைவருக்கும் அனைத்து நிலை கல்வியிலும், தொழில் பயிற்சி பெறுவதிலும் சமமான வாய்ப்புகள் கிடைப்பதை உறுதி செய்திட வேண்டும்” - நீடித்த வளர்ச்சி இலக்கு 4.5**

இந்த இலக்கின் நோக்கமானது நியாயமான திறன் பயிற்சி பெற சமவாய்ப்பு வழங்குவதன் மூலம் பாதிக்கப்படக்கூடிய பிரிவினர் ஆதாயமான வேலைவாய்ப்பு பெறுவது, ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்படுவது, தரமான உயர் கல்வியை பெறுவதில் உலகளாவிய வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவது ஆகியவற்றின் மூலம் நிறைவேற்றப்படுகிறது.

**திறன் பயிற்சி அளிப்பதன் மூலம் பட்டியலின மாணவர்களை முன்னேறச் செய்தல்**

மாநிலத்தில் இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் பட்டியலின மாணவர்களுக்கென தனியாக இயங்கி வருகிறது. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் 2022-ஆம் ஆண்டில் 447 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட மொத்த இடங்கள் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | கடலூர் | சிதம்பரம் | 256 | 252 |
| 2. | திருவள்ளூர் | வடகரை | 208 | 195 |
| | | **மொத்தம்** | **464** | **447** |

மேற்கூறியவை தவிர, அனைத்து அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலும் பட்டியலினத்தவர்களுக்கு 18 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு 6,782 பட்டியலின மாணவர்கள் இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**பழங்குடியின மாணவர்களுக்கு திறன் பயிற்சி வழங்கி முன்னேறச் செய்தல்**

மாநிலத்தில் ஆறு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் பழங்குடியின மாணவர்களுக்கென தனியாக இயங்கி வருகிறது. இந்த தொழிற்பயிற்சி நிலையங்களில் 2022-ஆம் ஆண்டில் 1,258 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட மொத்த இடங்கள் | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி | சங்கராபுரம் | 272 | 252 |
| 2. | கோயம்புத்தூர் | ஆனைக்கட்டி | 208 | 198 |
| 3. | சேலம் | கருமந்துறை | 216 | 192 |
| 4. | திருவண்ணாமலை | ஜமுனாமரத்தூர் | 216 | 196 |
| 5. | நாமக்கல் | கொல்லிமலை | 208 | 208 |
| 6. | நீலகிரி | கூடலூர் | 216 | 212 |
| மொத்தம் | | | **1,336** | **1,258** |

மேற்கூறியவை தவிர அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் பழங்குடியின மாணவர்களுக்கு 1 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு 127 பழங்குடியின மாணவர்கள், இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### 3.27.3. திறன் பயிற்சி மூலம் மாற்றுத்திறனாளி மாணவர்களை முன்னேறச் செய்தல்

ஒவ்வொரு ஆண்டும் அனைத்து தொழிற் பயிற்சி நிலையங்களிலும் உள்ள அனுமதிக்கப்பட்ட இருக்கைகளில் 5 சதவீத இருக்கைகள் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இது தவிர கிண்டி, உளுந்தூர்பேட்டை மற்றும் நாகர்கோவில் ஆகிய மூன்று அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் காது கேளாத மற்றும் வாய்பேச இயலாத இளைஞர்களுக்கென பொருத்துநர் தொழிற்பிரிவில் பிரத்தியேகமாக பயிற்சி வழங்கப்படுகிறது. 2022-ல் 20 மாற்றுத்திறனாளி மாணவர்கள் இந்த மூன்று தொழிற்பயிற்சி நிலையங்களிலும் பயிற்சி பெறுகின்றனர். ஏனைய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் 48 மாற்றுத்திறனாளி மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்

### 3.27.4. திறன் பயிற்சி மூலம் மகளிரை முன்னேறச் செய்தல்

மாநிலத்தில் பாலின சமத்துவத்தை அடைந்திட மகளிருக்கென பயிற்சி வழங்கிட தனியாக 10 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும் 5 மகளிர் பிரிவுகளும் இயங்கி வருகின்றன. இதன் மூலம் நீடித்த வளர்ச்சி இலக்கு (SDG) - 5க்கு ஏற்ப மகளிருக்கு உயர்வான வாழ்வாதாரம் கிடைப்பது உறுதி செய்யப்படும்.

**அனைத்து மகளிர் மற்றும் பெண் குழந்தைகளை முன்னேறச் செய்வதன் மூலம் பாலின சமத்துவத்தை அடைதல் – நீடித்த வளர்ச்சி இலக்கு** (SDG) **– 5.**

இந்த தொழிற்பயிற்சி நிலையங்களில் 3,215 மாணவிகள் 2022-ஆம் ஆண்டில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட மொத்த இடங்கள் | நிரப்பப்பட்ட இடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | சென்னை | கிண்டி | 452 | 322 |
| 2. | சென்னை | அம்பத்தூர் | 232 | 170 |
| 3. | தேனி | ஆண்டிப்பட்டி | 272 | 237 |
| 4. | திண்டுக்கல் | திண்டுக்கல் | 360 | 304 |
| 5. | மதுரை | மதுரை | 280 | 269 |
| 6. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 492 | 403 |
| 7. | சேலம் | சேலம் | 384 | 311 |
| 8. | கன்னியாகுமரி | நாகர்கோவில் | 276 | 276 |
| 9. | கடலூர் | கடலூர் | 504 | 417 |
| 10. | திருச்சிராப்பள்ளி | புள்ளம்பாடி | 360 | 243 |
| **மகளிர் பிரிவுகள்** | | | | |
| 11. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 72 | 21 |
| 12. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 88 | 76 |
| 13. | கிருஷ்ணகிரி | ஓசூர் | 72 | 31 |
| 14. | கரூர் | கரூர் | 88 | 88 |
| 15. | நாமக்கல் | நாமக்கல் | 72 | 47 |
| **மொத்தம்** | | | **4,004** | **3,215** |

மேலும், ஏனைய அனைத்து அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலும் 30 சதவீத இருக்கைகள் மகளிருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு 2,017 மாணவிகள் இப்பயிற்சி மையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### 3.27.5. சிறைவாசிகளுக்கு திறன் பயிற்சி வழங்குதல்

திருச்சிராப்பள்ளி - மத்திய சிறைச்சாலையில் உள்ள சிறைவாசிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட அவர்களுக்கு திறன் பயிற்சி வழங்கப்படுகிறது. 2022-ஆம் ஆண்டில் 89 நபர்கள் திறன் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### 3.27.6. உயர்ரக தொழிற்பிரிவுகள்

இளைஞர்களை அதிக வேலைவாய்ப்பு பெறத் தக்கவர்களாக உருவாக்க மற்றும் தொழிற்சாலைகளின் தேவைகளை பூர்த்தி செய்திட பின்வரும் உயர்ரக தொழிற் பிரிவுகளில், 20 அரசு

தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண். | உயர்ரக தொழிற்பிரிவுகள் |
|---|---|
| 1. | மெக்கானிக் மெடிக்கல் எலக்ட்ரானிக்ஸ் |
| 2. | ஆர்க்கிடெக்சுரல் அசிஸ்டெண்ட் |
| 3. | ஆட்டோபாடி ரிப்பேரிங் |
| 4. | ஆட்டோபாடி பெயிண்டிங் |
| 5. | ஆப்பரேட்டர் அட்வான்ஸ்டு மிஷின் டூல்ஸ் |
| 6. | ஸ்மார்ட் போன் டெக்னீசியன் |
| 7. | டெக்னீசியன் பவர் எலக்ட்ரானிக்ஸ் |
| 8. | ஃபயர் டெக்னாலஜி & இண்டஸ்ரியல் சேப்டி மேனேஜ்மெண்ட் |
| 9. | ட்ரோன் பைலட் |
| 10. | டூல் & டை மேக்கர் (பிரஸ் டூல்ஸ் ஜிக்ஸ் & ஃபிக்சர்ஸ்) |

### 3.28. மாணவர்களுக்கான கூடுதல் உதவிகள்

திறன் பயிற்சி பெற சேரும் மாணவர்களை ஊக்கப்படுத்திட பின்வரும் உதவிகள் வழங்கப்படுகின்றன.

| | |
|---|---|
| 1. | கட்டணமில்லா திறன் பயிற்சி. |
| 2. | பேருந்து பயணச் சலுகை. |
| 3. | ஒவ்வொரு ஆண்டும் இலவச சீருடை மற்றும் காலணி. |
| 4. | தகுதியுள்ள மாணவருக்கு இலவச மிதிவண்டி. |
| 5. | மாதந்தோறும் ரூ.750/- உதவித் தொகை. |
| 6. | தகுதியுள்ள மாணவருக்கு இலவச மடிக்கணினி. |
| 7. | இலவச பாடப்புத்தகங்கள் மற்றும் வரைபட கருவிகள். |
| 8. | பயிற்சிக்கு தேவையான நுகர்பொருட்கள். |
| 9. | சுயதொழில் வாய்ப்புள்ள 11 தொழிற்பிரிவுகளில் பயிற்சி முடித்து செல்லும் மாணவர்களுக்கு இலவச கருவித் தொகுப்பு. |

### 3.29. தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள்

திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்குவதில் தனியார் நிறுவனங்களும் மாநில அரசுடன் இணைந்து பெரும்பங்கு வகிக்கின்றன. மாநிலத்தில் 326 அங்கீகாரம் பெற்ற மாணவர்கள் சேர்க்கை தகுதி உடைய தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 31,288 அனுமதிக்கப்பட்ட இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. இந்நிலையங்கள், மாவட்ட அளவில் மாவட்ட திறன் பயிற்சி அலுவலர்கள் மூலமும் மண்டல அளவில் மண்டல இணை இயக்குநர்கள் (பயிற்சி) மூலமும் கண்காணிக்கப்படுகின்றன. இந்த தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 2022 ஆம் ஆண்டில் 19,061 மாணவர்கள் திறன் பயிற்சி பெற்று வருகின்றனர்.

## 3.30. தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு உதவி வழங்குதல்

பயிற்சி கட்டணத்தை திரும்ப வழங்குதல் மூலம் மாநிலத்தில் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களை கட்டணமில்லா பயிற்சினை வழங்குவதற்கு மாநில அரசு ஊக்குவிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் 50 சதவீத இருக்கைகள் அரசு ஒதுக்கீட்டின் மூலம் இணையவழி கலந்தாய்வில் நிரப்பப்படுகின்றது. ஊரகப் பகுதிகளில் ஒரு பயிற்சியாளருக்கு ஒரு வருடத்திற்கு ரூ.10,000/- எனவும், நகர்ப்புற பகுதிகளில் ஒரு பயிற்சியாளருக்கு ஒரு வருடத்திற்கு ரூ.12,000/- எனவும் பயிற்சிக் கட்டணத்தை மாநில அரசு தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு திரும்ப வழங்குகிறது. 2022-இல் ரூ.3,50,00,000/- வழங்கப்பட்டு 5,439 மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

## 3.31. அகில இந்திய தொழிற்தேர்வு மற்றும் தேசிய அளவிலான சான்றிதழ்

ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி காலத்தின் முடிவில் ஒன்றிய அரசின் தலைமை பயிற்சி இயக்ககம் அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு தேசிய அளவிலான அகில இந்திய தொழிற்தேர்வு நடத்த பொது தேர்வு கால அட்டவணை வெளியிடுகிறது. 2020-21 ஆம் ஆண்டு முதல் தொழிற் தேர்வு இணையவழியாக நடத்தப்பட்டு வருகிறது. 2021 ஆம் ஆண்டு (என்.சி.வி.இ.டி.) (NCVET) முறைப்படி நடைபெற்ற அகில இந்திய தொழிற் தேர்வில் 31,208 மாணவர்கள் கலந்து கொண்டு 25,334 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தால் (என்.சி.வி.இ.டி.) (NCVET) மூலம் தேசிய தொழிற் சான்றிதழ் வழங்கப்படுகிறது. மாநில தொழிற்பயிற்சி குழுமத்தின்

தொழிற்தேர்வில் 1,010 மாணவர்கள் கலந்து கொண்டு 990 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். வெற்றிகரமாக தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு மாநில தொழிற்பயிற்சி குழுமத்தால் (எஸ்.சி.வி.டி.) சான்றிதழ் இத்துறையின் மூலம் வழங்கப்படுகிறது.

மேலும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தில் பதிவு செய்து அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி வழங்குநர்களால் வழங்கப்படும் குறுகியகாலப் பயிற்சியும் மாநில தொழிற்பயிற்சி குழுமத்தால் (எஸ்.சி.வி.டி.) மதிப்பீடு செய்யப்படுகிறது.

## 3.32. பயிற்சியாளர்களுக்கு வேலைவாய்ப்பு

அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பணியமர்த்தும் குழுமத்தின் உட்கட்டமைப்பு மற்றும் அலுவலர்களுக்கான வசதிகளை வலுப்படுத்துவதன் மூலம் பயிற்சியாளர்களுக்கு வேலைவாய்ப்பை அளித்திட அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகளை ஈர்க்க முடியும் என்பதால்

வேலைவாய்ப்பு சம்பந்தமான பணிகளை கவனிக்க பயிற்சி அலுவலர் நிலையிலான பணியமர்த்தும் அலுவலர் அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் நியமிக்கப்பட்டுள்ளார்.

தொழிற்கூட்டாளர்களுக்கு தளவாட உதவிகள் ஏற்படுத்தி தருவதன் மூலமாக, பணியமர்த்தும் அலுவலர் நிறுவனங்கள் / தொழிற்சாலைகளுடன் இணைந்து தொழிற்பயிற்சி நிலையத்தில் வளாக நேர்காணல்களை நடத்திட தேவையான ஏற்பாடுகளை செய்திடுவார். வளாக நேர்காணல்கள் மூலம் தேர்ச்சி பெற்ற மாணவர்களில் 75 சதவீதம் பேர் பல்வேறு தொழிற்சாலைகளில் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.

### 3.33. பொது மற்றும் தனியார் கூட்டமைப்பின் வழியாக அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல்

தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப பயிற்சி வடிவமைப்பு மற்றும் வழங்கல் ஆகியவற்றை

மாற்றியமைத்திட மற்றும் தொழிற்பயிற்சி முடித்தவர்களின் வேலை வாய்ப்பினை அதிகப்படுத்திட, ஒன்றிய அரசினால் பொது மற்றும் தனியார் கூட்டமைப்புத் திட்டம் 2007-ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. தமிழநாட்டில் உள்ள 32 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் இத்திட்டத்தால் மேம்படுத்தப்பட்டன. ஆண்டுவாரியான விவரங்கள் பின்வருமாறு:

| **ஆண்டு** | **அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| 2007 - 08 | 12 |
| 2008 - 09 | 05 |
| 2009 - 10 | 11 |
| 2010 – 11 | 02 |
| 2011 - 12 | 02 |
| **மொத்தம்** | **32** |

ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிலையத்திலும் நம்பகமான தொழிற்சாலை கூட்டாளர் தலைமையில் நிலைய மேலாண்மைக்குழு உருவாக்கப்பட்டு சங்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிலைய மேலாண்மைக் குழுவிற்கும் ஒன்றிய அரசினால் வட்டியில்லாக் கடனாக ரூ.2.50 கோடி வழங்கப்பட்டுள்ளது.

நிலைய மேலாண்மைக் குழுவானது, நிலைய மேம்பாட்டிற்காக நிலைய மேம்பாட்டுத் திட்டத்தினை தயாரித்துள்ளது. இந்நிலைய மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் ஒன்றிய அரசு வட்டியில்லாக் கடனாக ரூ.2.50 கோடி நேரடியாக நிலைய மேலாண்மைக் குழுவின் வங்கி கணக்கிற்கு வழங்கியுள்ளது. வட்டியில்லாக் கடனாக வழங்கியுள்ள ரூ.2.50 கோடியில் ரூ.50 இலட்சம் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் நிலைய மேலாண்மைக்

குழுவால் வைப்புத் தொகையாக இட்டு வைக்கப்பட்டுள்ளது.

நிலைய மேலாண்மைக் குழுவிற்கு வழங்கப்பட்ட கடனை திரும்ப செலுத்த கடன் வழங்கப்பட்ட ஆண்டிலிருந்து 10 வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. வட்டியில்லாக் கடன் கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 11 வது வருடத்தில் துவங்கி 20 வருட சமதவணைகளில் நிலைய மேலாண்மைக் குழுவினால் திரும்ப செலுத்தப்பட வேண்டும். இத்திட்டம் செயல்படும் தொழிற்பயிற்சி நிலையங்களில் 57 புதிய தொழிற்பிரிவுகள் 2,648 இருக்கைகளுடன் இயங்கி வருகிறது. இவற்றுள் 2,421 மாணவர்கள் இந்த ஆண்டில் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர்.

### 3.34. தொழில் மதிப்பு விரிவாக்கத்திற்கான திறன்களை வலுப்படுத்துதல் (STRIVE)

தொழில் மதிப்பு விரிவாக்கத்திற்கான திறன்களை வலுப்படுத்துதல் திட்டம் உலக வங்கி உதவியுடன் ஒன்றிய அரசால் 100 சதவீத நிதி வழங்கப்படும் திட்டமாகும். இத்திட்டம் 5 வருடத் திட்டமாகும். இது நவம்பர் 2022 வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், வணிக சங்கங்கள், தொழில் கூட்டமைப்புகள் ஆகிவற்றில் தொழிற்பழகுநர் பயிற்சி மற்றும் தொழிற்சாலைகளுடன் இணைந்து தொழிற்பயிற்சி நிலையங்களில் வழங்கப்படும் பயிற்சியின் தரத்தினை அதிகரித்தல் ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களின் ஒட்டு மொத்த செயல்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில் இத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது,

நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் போட்டிகளுக்கிடையே தொழிற்பயிற்சி நிலையங்கள் தேர்வு செய்யப்பட்டு இத்திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்படுகிறது. இத்திட்டம் கோட்பாடுகள் வாரியாக பின்வரும் பத்திகளில் விளக்கப்பட்டுள்ளது.

**கோட்பாடு 1: தொழிற்பயிற்சி நிலையங்களின் செயல்திறனை மேம்படுத்துதல்**

அம்பத்தூர், செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கடலூர், மதுரை, திண்டுக்கல், தூத்துக்குடி, விருதுநகர், நாமக்கல், சேலம், கோயம்புத்தூர் மற்றும் சிவகங்கை ஆகிய 13 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், டான் போஸ்கோ ஐடிஐ, லால்குடி, பி.ஏ.சி.ஆர் ஐடிஐ, அரியலூர் மற்றும் ராம்கோ ஐடிஐ, விருதுநகர் ஆகிய மூன்று தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு ரூ.29.01 கோடி செலவு

நிர்ணயிக்கப்பட்டு இதில் ரூ.11.56 கோடி ஒன்றிய அரசால் விடுவிக்கப்பட்டுள்ளது.

இக்கோட்பாட்டின் நோக்கங்கள்:

திறன் மேம்பாட்டு திட்டங்களின் தரத்தை மேம்படுத்துதல், தொழிலாளர் தேவைக்கேற்ற பயிற்சி மற்றும் செயல்பாடுகளின் திறன்களை அதிகரித்தல், தொழிற்சாலைகளுடன் நல்லுறவை வளர்த்தல், தொழிற்சாலைகளின் பயிற்சி மற்றும் கூட்டு மதிப்பீடுகள், உள்ளூர் சந்தை தேவைகளுக்கேற்ப புதிய தொழிற்பிரிவுகளை அறிமுகப்படுத்துதல் (கைவினைஞர் பயிற்சி திட்ட தொழிற்பிரிவுகள் மற்றும் ஏனைய தேசிய திறன் தகுதிக் கட்டமைப்புக்குட்பட்ட குறுகிய கால தொழிற்பயிற்சிகள்) ஆகியவை இக்கோட்பாட்டின் நோக்கங்கள் ஆகும். தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி உபகரணங்களை மேம்படுத்துவதிலும், புதிய தேசிய தொழிற்பயிற்சி குழும தொழிற்பிரிவுகளை

தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ப்பதிலும் இக்கோட்பாடு கவனம் செலுத்துகிறது.

**கோட்பாடு 2: தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பழகுநர் பயிற்சிக்கு உதவிடும் வகையில் மாநில அரசின் திறன்களை அதிகப்படுத்துதல்**

இக்கோட்பாட்டின் நோக்கங்கள்

1. தொழிற்பயிற்சி நிலையங்களின் ஒட்டு மொத்த ஒழுங்குமுறை மற்றும் செயல்பாட்டு சூழலை மேம்படுத்துவதற்கும், மாநில அளவில் தொழில் கூட்டமைப்புகளை உருவாக்குவதற்கும், மாநில அரசிற்கு உதவிடுதல்.
2. செயல்திறன் அடிப்படையிலான நிதியுதவி மூலம் திறன் சூழலில் சீர்த்திருத்தங்களை அறிமுகப்படுத்த மாநிலங்களை ஊக்குவித்தல்.

3. மாநில அளவில் திறன் பயிற்சி கண்காணிப்பு வழிமுறைகளை வலுப்படுத்துவதன் மூலம் இந்தியாவில் திறன் பயிற்சியின் செயல்திறனை மேம்படுத்துதல்.

இக்கோட்பாட்டினை செயல்படுத்துவதற்கென ரூ.10.20 கோடி தொகை ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்டு, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே செயல்திறன் அடிப்படையிலான நிதியுதவி ஒப்பந்தம் (PBFA) கையொப்பம் ஆனதை தொடர்ந்து ரூ.10.20 கோடியில் 30 சதவீத தொகையான ரூ.3.06 கோடியை பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக முன் மானியமாக ஒன்றிய அரசு விடுவித்துள்ளது.

1. தொழிற்பயிற்சி நிலைய பயிற்றுநர்களின் பணி முன்னேற்றத்திற்கான கொள்கையை உருவாக்குதல்

2. அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்றுநர்களின் காலியிடப் பணியிடங்களை குறைத்தல்

3. தொழிற்பயிற்சி முடித்தவர்களின் பணிநிலை குறித்து தொடராய்வு செய்தல்

**கோட்பாடு 3 : கற்பித்தல் மற்றும் கற்றல் திறன்களை மேம்படுத்துதல்**

இந்த கோட்பாட்டில் தொழிற்பயிற்சி வழங்கும் தொழிற்பயிற்சி நிலையங்களை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகளை தலைமை பயிற்சி இயக்ககம், புதுடெல்லி மேற்கொள்ளவுள்ளது.

**கோட்பாடு 4: மேம்படுத்தப்பட்ட மற்றும் விரிவுபடுத்தப்பட்ட தொழிற்பழகுநர் பயிற்சித்திட்டம்**

தொழிற்சாலை தொழிற்பழகுநர் முனைப்பு என்பது சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில்

கூட்டு முறையில் தொழிற்பழகுநர் பயிற்சி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு அமைப்பு ரீதியில் உதவிடும் புதிய முனைப்பு ஆகும்.

இத்திட்டத்தின்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தொழில் தொகுப்பிற்கு ரூ.1.00 கோடிக்கான தொழிற்சாலை தொழிற்பழகுநர் முனைப்பு முன்மானிய நிதி கிடைக்கிறது. முக்கிய செயல்திறன் காட்டிகளை (KPIs) நிறைவு செய்வதை அடிப்படையாகக் கொண்டு இந்த மான்யம் வழங்கப்படுகிறது.

தேசிய தொழிற் கூட்டமைப்பு மதிப்பீட்டுக் குழுவின் (NCEC) பரிந்துரையின் அடிப்படையில், இத்திட்டத்தின் கோட்பாடு 4-ன் கீழ், அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் (AIEMA), கோவை மாவட்ட சிறு தொழில் சங்கம் (CODISSIA), மதுரை நகை உற்பத்தியாளர் தனியார் கூட்டமைப்பு, மதுரை, இண்ட்கோசெர்வ், உதகமண்டலத்தில்

மற்றும் ஈத்தாமொழி தென்னை நார் தொழிற் கூட்டமைப்பு, கன்னியாகுமரி ஆகிய ஐந்து தொழிற் கூட்டமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தை செயல்படுத்த முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதனை தொடர்ந்து 40% முன்பண தொகையான ரூ.40 லட்சத்தை தலா ஒவ்வொரு தொழிற்தொகுப்பிற்கும் ஒன்றிய அரசு விடுவித்துள்ளது. இத்திட்டத்தில் ஒன்றிய அரசு இதுவரை 3 தொழிற் கூட்டமைப்புகளுக்கு ரூ.120 இலட்சம் விடுவித்துள்ளது.

### 3.35. அரசு தொழிற்பயிற்சி நிலையத்தினை மாதிரி தொழிற்பயிற்சி நிலையமாக மேம்படுத்துதல்

இத்திட்டத்தின் கீழ், மாநிலத்தில் இருக்கும் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் மாதிரி தொழிற்பயிற்சி நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு, சிறந்த செயல் முறைகள், திறமையான மற்றும் உயர்தர திறன் பயிற்சி வழங்கல் மற்றும் நிலைக்கத்தக்க தொழில்

உறவுகளை காட்சிப்படுத்தும் முன்மாதிரி பயிற்சி நிலையமாக இருக்கும்.

கோயம்புத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையமானது மாதிரி தொழிற்பயிற்சி நிலையமாக மேம்படுத்திட தேர்வு செய்யப்பட்டுள்ளது. மொத்த திட்ட நிதியான ரூ.10 கோடி ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே 70:30 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

இத்தொழிற்பயிற்சி நிலையத்தில் நிலைய மேலாண்மைக் குழு (IMC) உருவாக்கப்பட்டுள்ளது. நிலைய மேலாண்மை குழுவின் முக்கிய நோக்கமானது தொழில் சார்ந்த தொழிற்பயிற்சி நிலையத்திற்கான ஒரு தரநிலையை உருவாக்கி மற்ற நிலையங்களுக்கு முன்மாதிரியாக விளங்குவதுடன் தொழிற்கல்வித் தகுதியின் கண்ணியத்தையும் உயர்த்துவதாகும்.

மொத்த நிதி ரூ.1,000 லட்சத்தில் ரூ.500 இலட்சம் தற்போது ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் விடுவிக்கப்பட்டுள்ளது. (ஒன்றிய அரசின் பங்கு ரூ.700 இலட்சத்தில் ரூ.350 இலட்சம், மாநில அரசின் பங்கு ரூ.300 இலட்சத்தில் ரூ.150 இலட்சம்) பொதுப்பணித் துறையால் ரூ.250 இலட்சம் செலவு செய்யப்பட்டு கட்டுமானம் / பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டு 21.02.2022ல் கட்டடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இயந்திரங்கள், கருவிகள், தளவாடங்கள் மற்றும் மரச்சாமான்கள் கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 3.36. தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம் (ATS)

### 3.36.1. தொழிற்பழகுநர் பயிற்சி

தொழிற்பழகுநர் பயிற்சித் திட்டம் தொழிற் பழகுநர் சட்டம், 1961-ன்படி செயல்படுத்தப்படுகிறது. இது தொழிற்சாலைகளில் உள்ள தொழில் நுட்ப வசதிகளை கொண்டு செய்முறை பயிற்சி

வழங்கப்படுவதன் மூலமாக தொழிற்துறையின் திறன்மிக்க மனிதவள தேவைகளை பூர்த்தி செய்வதை நோக்கமாக கொண்டுள்ளது.

14 வயது பூர்த்தி அடைந்து, 8வது / 10வது தேர்ச்சியுடன் தேசிய தொழிற்சான்றிதழ் பெற்றுள்ளவர்கள் தொழிற்பழகுநர் பயிற்சி திட்டத்திற்கு தகுதியானவர்களாவர். தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் 56 வரையறுக்கப்பட்ட தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சி காலம் ஆறு மாதங்கள் முதல் இரண்டு வருடங்கள் வரை ஆகும். ஒன்றிய அரசின் தலைமை பயிற்சி இயக்ககம், புதுடில்லி நிர்ணயித்த விகிதத்தில் உதவித்தொகை பெற தொழிற்பழகுநர்கள் தகுதியானவர்களாவர். தொழிற்பழகுநர்களுக்கு குறைந்தபட்சமாக ரூ.7,000/- உதவித்தொகை வழங்கப்படுகிறது. தற்போது 8,747 தொழிற்பழகுநர்கள் 350 தொழில் நிறுவனங்களில் தொழிற்பழகுநர்

பயிற்சி பெற்று வருகின்றனர். தொழிற்பழகுநர்கள் பயிற்சியின் முடிவில் அகில இந்திய தொழிற்தேர்வில் கலந்து கொள்ள வேண்டும்.

அகில இந்திய தொழிற்பழகுநர் தேர்வு ஏப்ரல் / மே மற்றும் அக்டோபர் / நவம்பர் என ஆண்டுக்கு இருமுறை நடத்தப்படுகிறது. ஐடிஐ பயிற்சி முடித்து தொழிற்பழகுநர் பயிற்சி பெறுபவர்கள் அகில இந்திய தொழிற்பழகுநர் தேர்வில் அனைத்து பாடங்கள் அல்லாமல் செய்முறை தேர்வில் மட்டும் கலந்து கொண்டால் போதுமானதாகும்.

### 3.36.2. தேசிய தொழிற்பழகுநர் ஊக்குவிப்புத் திட்டம் (National Apprenticeship Promotion Scheme (NAPS)

தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநர் சேர்க்கையை அதிகப்படுத்துவதன் மூலம் தொழிற்பழகுநர் பயிற்சியினை அதிகப்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் தொழிற்பழகுநர்கள் மற்றும்

தொழில்துறை நிறுவனங்கள் பின்வருமாறு ஊக்குவிக்கப்படுகின்றன :

(i) நிறுவனத்தாரால் தொழிற்பழகுநர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகையில் ஒரு பயிற்சியாளருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.1,500/-க்கு மிகாவண்ணம் 25 விழுக்காடு தொகையினை ஒன்றிய அரசு பங்களிப்பாக வழங்குகிறது.

(ii) அடிப்படை பயிற்சி வழங்கும் நிறுவனங்களுக்கு ரூ.7,500/-க்கு மிகா வண்ணம் அதிகபட்சமாக 500 மணி நேரங்கள் / 3 மாதங்களுக்கான பயிற்சிக்கட்டணத்தை ஒன்றிய அரசு வழங்குகிறது.

பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரர்களை தவிர இதர வகையிலான தொழிற்பழகுநர்கள் இத்திட்டத்தில் இடம்பெறுவர்.

### 3.36.3. பயிற்சி பெறாதவர்களை (Freshers) நிறுவனங்களில் தொழிற்பழகுநர்களாக சேர்த்தல்

எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்று முறையாக பயிற்சி பெறாதவர்களை வரையறுக்கப்பட்ட மற்றும் விருப்ப தொழிற்பிரிவுகளில் தொழிற்பழகுநர்களாக சேர்த்துக்கொள்ளலாம் என்பது தொழிற்பழகுநர் பயிற்சியில் ஒரு முக்கியமான சீர்திருத்தமாகும். தொழிற்பழகுநர்களாக பயிற்சியில் சேர 14 வயது நிரம்பியவர்களாக இருத்தல் வேண்டும் என்பது முக்கிய அளவுகோலாகும். தொழிற்பழகுநர் பயிற்சியில் ஈடுபடும் முன்னர் அடிப்படைப் பயிற்சி வழங்கும் நிறுவனங்களால் 3 மாத காலம் அவர்கள் பயிற்சி அளிக்கப்படுவர். இம்முறையில் வெற்றிகரமாக தொழிற்பழகுநர் பயிற்சியை முடிப்பவர்களுக்கு தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் (NAC) வழங்கப்படுகிறது.

பயிற்சி பெறாதவர்கள் தொழிற் பழகுநர் பயிற்சியில் சேர அதிக பட்ச வயது வரம்பு ஏதுமில்லை.

### 3.36.4. மாநில தொழிற்பழகுநர் கண்காணிப்புக் குழுமம் (State Apprenticeship Monitoring Cell)

மாநில அளவில் தொழிற்பழகுநர் சேர்க்கையை ஒருங்கிணைக்கவும் சிறப்பாக கண்காணிக்கவும் ஒரு மாநில தொழிற்பழகுநர் கண்காணிப்பு குழுமம் ஒன்றிய அரசு நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மாநில தொழிற்பழகுநர் கண்காணிப்பு குழுமத்தில் மாநில திட்ட இயக்குநர், ஒரு இணை இயக்குநர் 3 ஆலோசகர்கள் மற்றும் 6 சார்பு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர். மாநில தொழிற்பழகுநர் கண்காணிப்பு குழுமத்தின் முக்கிய குறிக்கோளானது தொழில் விரிவாக்கத்திற்கான திறன்களை வலுப்படுத்துதல் திட்டத்தின்கீழ் தொழிற்பழகுநர் முனைப்பு திட்டத்தை மாநிலத்தில் சிறப்பாக

செயல்படுத்துவதாகும். இதற்காக மாநில தொழிற்பழகுநர் கண்காணிப்பு குழுமமானது தொழிற்சாலை கூட்டமைப்பினை (Industry Cluster) தெரிவு செய்து கண்காணிப்பதன் மூலம் தொழிற்பழகுநர் முனைப்பு திட்டத்தை செயல்படுத்துகிறது.

## 3.37. தொழிற்பள்ளிகள் வாயிலாக திறன் பயிற்சி வழங்குதல்

தமிழ்நாட்டில் மாநில தொழிற் பயிற்சி குழுமத்தின் கீழ் 235 சுயநிதி மற்றும் 21 அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பள்ளிகள் இயங்கி வருகின்றன. தற்போது 4,342 மாணவர்கள் இவற்றில் பயிற்சி பெற்று வருகின்றனர். எலக்ட்ரிகல், மெக்கானிக்கல், ஆட்டோமொபைல், எலக்ட்ரானிக்ஸ், ஹாஸ்பிடாலிட்டி, அப்பேரல், இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி மற்றும் ஆபிஸ் ஆட்டோமேஷன் ஆகியவற்றை உள்ளடக்கிய 57 தொழிற்பிரிவுகளில்

ஓராண்டு முதல் மூன்றாண்டு வரை பயிற்சியளிக்கப்படுகிறது. பல்வேறு தொழிற்பிரிவுகளில் 8வது மற்றும் 10வது தேர்ச்சி பெற்றவர்கள் பயிற்சிக்கு சேர்க்கை செய்யப்படுகின்றனர். பள்ளிகளில் தொழில்நுட்ப ஆசிரியராக சேருவதற்கு தேவையான அவசியத் தகுதியான தொழில்நுட்ப ஆசிரியர் சான்றிதழ் படிப்பினை 11 தொழிற்பள்ளிகள் வழங்குகின்றன.

மாநில தொழிற்பயிற்சி தேர்வு வாரியத்தால் தேர்வு நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு மாநில தொழிற்பயிற்சி குழுமத்தின் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றது. 21 தனியார் தொழிற்பள்ளிகளும் 10 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் அரசிடமிருந்து பராமரிப்பு மானியம் பெறுகின்றன. 2021-2022-ஆம் நிதியாண்டில் அரசு உதவி பெறும் தொழிற்பள்ளிகளுக்கும் / தொழிற்பயிற்சி

நிலையங்களுக்கும் பராமரிப்பு மானியமாக ரூ.4.97 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 3.38. சிறந்த பயிற்றுநருக்கான விருது

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சிறப்பாக பணியாற்றிய முதல்வர்கள் மற்றும் பயிற்றுநர்களுக்கு "டாக்டர் இராதாகிருஷ்ணன் - சிறந்த பயிற்றுநர் விருது" தகுதிச் சான்றிதழுடன் ரூ.10,000/- க்கான தேசிய சேமிப்பு பத்திரமாக வழங்கப்படுகிறது.

### 3.39. பணியாளர்கள் பயிற்சி

இத்துறையின் பயிற்றுநர்களின் மனதில் சரியான அணுகுமுறையினை புகுத்திடவும் அவர்களின் சிறப்பான திறன்களை வெளிக் கொணரவும் மற்றும் துறையின் செயல்பாடுகளின் தரத்தை மேம்படுத்தவும் மாநில திறன் பயிற்சி நிலையம் சென்னையில் அமைக்கப்படுகிறது. இந்த நிலையம் துறையின் தொழில்நுட்ப மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு புத்தாக்க மற்றும்

பணியிடைப் பயிற்சி வழங்கிடும் வகையில் தொழில்நுட்ப மற்றும் மேலாண்மை பயிற்சி நிலையமாக சரியான பாதையில் ஆக்கபூர்வமாக செயல்படும். இந்நிலையம் ஒவ்வொரு தொழிற்பிரிவிற்கும் தொடர்புடைய தொழிற்சாலைகளுடன் உறவை ஏற்படுத்திக் கொள்வதுடன் செய்முறையுடன் கூடிய கற்பித்தல் வழிமுறைகளை கற்றுத்தருவதற்கு ஏற்பாடு செய்யும்.

இந்த பயிற்சி நிலையத்தில் பின்வரும் பயிற்சி திட்டங்களை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- கற்பித்தல் வழிமுறைகளுக்கான கருத்தியல் வகுப்புகள்
- தொழில்நுட்ப மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி
- பணியமர்த்தும் அலுவலர்களுக்கு பயிற்சி
- அலுவலர்களுக்கு மேலாண்மை பயிற்சி
- தொழிற் நுட்பங்களில் செய்முறைப் பயிற்சி

- துறையின் அலுவலர்களுக்கு நிர்வாகப் பயிற்சி

இவை தவிர அண்ணா நிர்வாக பணியாளர்கள் கல்லூரி, சென்னை மூலமாக இத்துறையின் அலுவலர்களுக்கு பொருத்தமான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், இத்துறையின் அலுவலர்களுக்கு முன்னணி பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து பயிற்சி நடத்திட ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளது.

### 3.40. டிஜிட்டல் வழிக் கற்றல் முறை

- கருத்தியலை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்வதற்காக 14 தொழிற்பிரிவுகளுக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் மின்னனு பாடத் தொகுப்பு கொள்முதல் செய்யப்பட்டு அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

- திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் போன்ற மைய தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள சிறந்த பயிற்றுநர்களின் நிபுணத்துவத்தை மலைப்பகுதியில் துவங்கப்பட்டுள்ள பழங்குடியினருக்கான ஆறு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும் உபயோகப்படுத்திக் கொள்வதற்காக மெய்நிகர் வகுப்பறைகள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- 24 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஸ்மார்ட் வகுப்பறைகள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது.
- 23 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சிமுலேட்டர் அடிப்படையிலான வெல்டிங் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

## 3.41. தொழிற்சாலை – தொழிற்பயிற்சி நிலையம் இணைப்பு

(i) முன்னணி தொழில் நிறுவனங்களின் சமுதாய பங்களிப்பில்

- பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் உதவியுடன் நாகப்பட்டினம் மாவட்டம் செம்போடையிலும்
- பவர் கிரிட் கார்ப்பரேஷன் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் உதவியுடன் செங்கல்பட்டு மாவட்டம் பெரும்பாக்கத்திலும்
- சிப்காட் மற்றும் தொடர்புடைய தொழிற்சாலைகளின் உதவியுடன் காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்திலும்

- நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் உதவியுடன் கடலூர் மாவட்டம் நெய்வேலியிலும் நான்கு புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

(ii) தமிழ்நாட்டில் உள்ள 24 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர்களுக்கு பயிற்சி அளித்திட ஹூண்டாய் மோட்டார்ஸ் நிறுவனம் பல்வேறு திறன்களைக் கொண்ட 24 BS IV டீசல் – ஏ.எம்.டி. வெட்டுத் தோற்ற இன்ஜின்களை நன்கொடையாக அளித்துள்ளது.

## 3.42 புதிய முன்முயற்சிகள்

❖ நீடித்த வளர்ச்சி இலக்கு 4.4 “2030-ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு, கௌரவமான பணிகள் மற்றும் தொழில் முனைவு ஆகியவற்றை அடைய தொழில் நுட்ப மற்றும்

பொருத்தமான தொழில் திறன்கள் கொண்டிருக்கும் இளைஞர்கள் மற்றும் பெரியவர்களின் எண்ணிக்கையை கணிசமாக அதிகரிக்கச் செய்தல்”

மாறிவரும் காலத்திற்கேற்ப தொழில்நுட்ப காட்சிகளும் மாறிக் கொண்டே இருக்கிறது. தொழில் நுட்பத்தில் புதிய பரிமாணங்கள் உருவாக்குவதன் காரணமாக தற்போது கற்பிக்கப்படும் பல தொழிற்பிரிவுகளில் தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டியுள்ளது. தொழிற்பயிற்சி நிலையங்களில் வெற்றிகரமாக பயிற்சி முடித்து செல்லும் மாணவர்கள் தொழிற்சாலைகளின் தேவைகளை பூர்த்தி செய்திட தங்கள் திறன்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என சமீபத்திய நிகழ்வுகள் பரிந்துரை செய்கிறது. இந்த திறன் இடைவெளியை நீக்க தற்போதைய மற்றும் எதிர்கால தொழில்நுட்பங்களுக்கு தொடர்புடையதாக கல்வி முறையை மாற்றியமைக்க புதிய திறன்கள் /

பயிற்சிகளை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. எனவே, முன்னனி தொழில் நிறுவனங்களுடன் இணைந்து மாறிவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப தொழில் 4.0 தரநிலையிலான தொழிற்பிரிவுகள் தமிழகத்தில் உள்ள 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 5,140 கூடுதல் இருக்கைகளுடன் ரூ.2,877 கோடி செலவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொழில்நுட்ப மையங்களாக மாற்றப்பட உள்ளன. நவீன தொழில்நுட்பங்களில் பயிற்சி பெற்ற இந்த மாணவர்கள் முன்னணி நிறுவனங்களில் பணியமர்த்தப்படுவர். இந்த உட்கட்டமைப்பு, தனியார் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள், பல்தொழில்நுட்ப கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன பணியாளர்கள் ஆகியோருக்கு பின்வரும் நீண்டகால மற்றும்

குறுகிய கால படிப்புகளில் பயிற்சியளிக்கவும் பயன்படுத்தப்படும்.

**நீண்டகாலப் படிப்புகள்**

| | |
|---|---|
| 1. | மேனுபேக்சரிங் பிராசஸ் கண்ட்ரோல் & ஆட்டோமேஷன் |
| 2. | இண்டஸ்ட்டிரியல் ரோபோட்டிக்ஸ் & டிஜிட்டல் மேனுஃபேக்சரிங் |
| 3. | மெக்கானிக் எலக்ட்ரிக் வெஹிக்கிள் |
| 4. | பேசிக் டிசைனர் & விர்சுவல் வெரிஃபையர் (மெக்கானிக்) |
| 5. | அட்வான்ஸ்டு சிஎன்சி மிஷினிங் டெக்னீசியன் |

**குறுகிய காலப் படிப்புகள்**

| | |
|---|---|
| 1. | இன்னோவேஷன் அண்டு டிசைன் திங்கிங் |
| 2. | பண்டமென்டல்ஸ் ஆஃப் பிராடெக்ட் டிசைன் |
| 3. | பிராடக்ட் டிசைன் & டெவலப்மெண்ட் |
| 4. | ஆட்டோ எலக்ட்ரிக்கல் டிசைன் & டெவலப்மெண்ட் |

| | |
|---|---|
| 5. | பிராடக்ட் வெரிஃபிகேஷன் அண்டு அனாலஸிஸ் |
| 6. | கம்ப்யூட்டர் எய்டட் மேனுஃபேக்சரிங் |
| 7. | அட்வான்ஸ்டு கம்ப்யூட்டர் எய்டட் மேனுஃபேக்சரிங் |
| 8. | பிராசஸ் கண்ட்ரோல் அண்டு ஆட்டோமேஷன் |
| 9. | பண்டமெண்டல்ஸ் ஆஃப் ஆட்டோமொபைல் என்ஜினியரிங் |
| 10. | அட்வான்ஸ்டு ஆட்டோமொபைல் இன்ஜினியரிங் |
| 11. | ஆட்டோமொபைல் மெயின்டனன்ஸ், ரிப்பேர் அண்டு ஓவர்ஹால் |
| 12. | ஆட்டோ எலக்ட்ரிகல் மெயின்டனன்ஸ் |
| 13. | எலக்ட்ரிகல் வெஹிக்கிள் |
| 14. | இண்டர்நெட் ஆஃப் திங்ஸ் |
| 15. | அட்வான்ஸ்டு மிஷினிங் (மில்) |
| 16. | அட்வான்ஸ்டு மிஷினிங் (சிஎன்சி லேத்) |
| 17. | அட்வான்ஸ்டு மிஷினிங் (ரோட்டரி 4 ஆக்ஸிஸ் மில்) |
| 18. | அட்வான்ஸ்டு அடிடிவ் மேனுஃபேக்சரிங் |

| | |
|---|---|
| 19. | அட்வான்ஸ்டு வெல்டிங் |
| 20. | அட்வான்ஸ்டு பெயிண்டிங் டெக்னாலஜி |
| 21. | இண்டஸ்ரியல் ரோபோடிக்ஸ் I |
| 22. | இண்டஸ்ரியல் ரோபோடிக்ஸ் II |
| 23. | அட்வான்ஸ்டு பிளம்பிங் |

❖ இளைஞர்களுக்கு வழங்கப்படும் திறன் பயிற்சியை மேம்படுத்தும் நோக்கிலும் தேசிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக் குழும நெறிமுறைகளை பூர்த்தி செய்திடவும், பயிற்சித்திறன் வெளிப்பாடு மற்றும் உற்பத்தித் திறனை உறுதி செய்திடவும் பயிற்சி பிரிவில் உள்ள சில பணியிடங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. மிகுந்த பயனுள்ள பயிற்சியினை மாணவர்களுக்கு வழங்கிடும் விதத்திலும் அவர்களின் தேர்ச்சி சதவீதத்தை அதிகப்படுத்திடும் விதத்திலும், வேலைவாய்ப்பு

திறனை மேம்படுத்தும் விதத்திலும் இந்த பணியிடங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

❖ தகவல் தொழில்நுட்பம் சார்ந்த செயல்பாடுகளைக் கண்காணிக்கவும் ஊக்குவிக்கவும் தலைமையகத்திலும், மண்டல அளவிலும் தகவல் தொழில்நுட்ப கண்காணிப்பு பிரிவு இத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மெய்நிகர் வகுப்பறைகள், ஸ்மார்ட் வகுப்பறைகள், மொழி மற்றும் மென்திறன் ஆய்வகங்கள் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியினை இப்பிரிவு தொடர்ந்து கண்காணித்து வருகிறது. மேலும், இப்பிரிவு இணையவழி மாணவர் சேர்க்கையில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும் கணினி அடிப்படையிலான தேர்வில் (CBT) துல்லியமான மதிப்பீட்டை உறுதி செய்வதையும் ஒருங்கிணைத்து வருகிறது.

❖ திறன் பயிற்சி நடவடிக்கைகளை மாவட்ட அளவில் கண்காணிக்க மாநிலத்தில் தென்காசி, செங்கல்பட்டு, திருவாரூர் மற்றும் இராணிப்பேட்டை ஆகிய 4 மாவட்டங்களில் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. இந்த அலுவலகங்கள் மாவட்டத்தில் உள்ள மாணவர்களுக்கு பல்வேறு திறன் பயிற்சி திட்டங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் மாணவர்களின் வேலைவாய்ப்பு அதிகரிக்கும் விதத்தில் பயிற்சி வழங்குவதைக் கண்காணிக்கும்.

திறன் மிக்க தொழிலாளர்களை தரமாகவும், அதிக அளவிலும் உருவாக்கிடும் பொருட்டு பயிற்சி நிலையங்களில் சேர்க்கையினை அதிகப்படுத்திட இத்துறையின் பயிற்சிப் பிரிவு தொடர்ந்து முனைப்புடன் செயல்படுகிறது. இது மாநிலத்தில்

உள்ள இளைஞர்கள் ஆதாயமான வேலைவாய்ப்பை பெற்று சமூகத்தில் உயர்ந்த நிலையை அடைந்திடவும், அதன் மூலம் வேலைவாய்ப்பின்மையை குறைக்க வேண்டும் என்ற குறிக்கோளை அடைந்திடவும் திறன் பயிற்சி வழங்குவதில் தமிழ்நாட்டினை இந்தியாவில் புகழ்பெற்ற மாநிலமாக உருவாக்கவும் உதவும்.

## 4. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், மாநிலத்தில் திறமையான மனித வளத்தை அதிகரித்து தொழிற்சாலைகளின் திறன் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்குடன் உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம், கம்பெனி சட்டம், 2013-இன்பிரிவு 8-இன் கீழ் ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பாக பதிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) அனைத்து வகையான திறன் பயிற்சிக்கான முதன்மை முகவான்மையாக அறிவிக்கப்பட்டு, மாநிலத்தில் திறன் மேம்பாட்டுச் சூழலை மேம்படுத்தும் நோக்கமாக கொண்டுள்ளது. மாநிலத்தில் உள்ள பல்வேறு அரசு துறைகளால் நடத்தப்படும் அனைத்து திறன் பயிற்சித் திட்டங்களை ஒருங்கிணைக்க அரசாணை (நிலை) எண்.207, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (சி)

துறை, நாள்: 30.12.2021-ன் படி, அரசு, ஆணையை வெளியிட்டுள்ளது. திறன் பயிற்சித் திட்டங்களைத் தரப்படுத்துதல், திறன் பயிற்சித் திட்டத்தை செயல்படுத்தும் துறைகளுக்காக மாவட்ட வாரியாக பொது மற்றும் தனியார் பயிற்சி நிறுவனங்களைக் கண்டறிதல் மற்றும் திறன் பயிற்சியின் தரம் மற்றும் சான்றளிப்பு ஆகியவற்றில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் கவனம் கொண்டு செயல்படும்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், வளர்ந்து வரும் பொருளாதார தேவைக்கேற்பவும் முக்கியமான தொழிற்பிரிவுகளில் மற்றும் பெரும் நிறுவனங்களிலுள்ள வேலைவாய்ப்புகளை கண்டறிவதற்கான சாத்தியக் கூறுகளை முன்னெடுப்பு செய்வதன் மூலம் முறையான மற்றும் முறைசாரா கல்வி முறைகளில் உள்ளவர்களுக்கு திறன் பயிற்சி அளித்து தொழில் துறைகளிலுள்ள திறன் இடைவெளியைக் குறைத்து வருகிறது.

இந்த முயற்சியில் தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப பயிற்சிகள் மற்றும் அந்நிறுவனங்களின் பயிற்சி மையங்களை கொண்டு திறன் பயிற்சி வழங்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4.1. தேசிய திறன் தகுதி கட்டமைப்பு (NSQF) - யை செயல்படுத்துதல்

மாநிலம் மற்றும் நாடு முழுவதும் ஒரே மாதிரி தரமான பாடத் திட்டங்களை நடைமுறைப்படுத்த தேசிய திறன் கட்டமைப்பு தரநிலை (NSQF) ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது தேசிய திறன் கட்டமைப்பு தரநிலையால் (NSQF) அங்கீகரிக்கப்பட்ட திறன் பயிற்சிகளை வழங்குவதுடன் பிற தர நிர்ணயங்களான பயிற்சியின் கால அளவு, பயிற்சியின் தரம், மதிப்பீட்டுமுறை மற்றும் பயிற்சிக் கட்டண முறை ஆகிய பொதுவான நெறிமுறைகள்

கடைபிடித்து வருகிறது. பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழ் பெறும் பயிற்சியாளர்களின் குறைந்த பட்சம் 70 சதவீத பயிற்சியாளர்களுக்கு வேலைவாய்ப்பினை பெற்றுத்தரும் நோக்கில் வழங்கப்படும் திறன் பயிற்சிகளில் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி தொகுப்புகள் (Qualification Pack) பின்பற்றப்படுகின்றன. தற்போது தொழிற்துறை தேவைகளுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட படிப்புகளை கல்லூரிகளில் நடைமுறைப்படுத்தி வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கும் நோக்கில் பெரிய தொழில் துறை நிறுவனங்களை திறன் பயிற்சி நிறுவனங்களை கொண்டு பயிற்சியளிக்கப்படுகிறது.

## 4.2. பயிற்சித் திட்டங்களின் மதிப்பீடு மற்றும் சான்றளித்தல்

பயிற்சியின் தரத்தை உறுதி செய்யும் பொருட்டு, துறைத் திறன் குழுமம் (Sector Skill Council) வாயிலாக மதிப்பீடு செய்யப்படுகிறது. இதன் மூலம் பாரபட்சமற்ற மற்றும் நடுநிலையான மதிப்பீட்டின் அடிப்படை தன்மை உறுதி செய்யப்படுகிறது.

## 4.3. பயிற்சி நிறுவனங்களுக்கான அங்கீகாரம் அளித்தல்

சிறந்த பயிற்சி நிறுவனங்களைக் கண்டறிந்து தேர்வு செய்யும் பொருட்டு விருப்பம் கோரும் விண்ணப்பங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் கோரப்பட்டுள்ளது. விருப்பமுள்ள நிறுவனங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணைய முகப்பில் விண்ணப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பம் பெறப்பட்ட நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மாவட்ட

திறன் பயிற்சி அலுவலர்களால் நேரடி ஆய்வு செய்யப்பட்ட பின்னர் மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பீடு செய்யப்படுகின்றன. மாநில அளவிலான உயர்நிலை குழுவினால் ஒப்புதல் வழங்கப்பட்டபின் தகுதியான நிறுவனங்கள் பயிற்சி கூட்டாளர்களாக (Training Partners) / பயிற்சிமையங்களாக (Training Centers) அங்கீகரிக்கப்படுகின்றன. பெருந்தொழில் நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு நிறுவனங்கள் ஆகியவைகளுக்கு பசுமை சேனல் (Green Channel) வழியாக திறன் பயிற்சி வழங்க அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

## 4.4. 2021-2022-ஆம் ஆண்டு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்கள் பற்றிய விவரங்கள் (மார்ச் 2022 வரை)

ஒவ்வொரு மாவட்டம் மற்றும் அதன் அருகாமையிலுள்ள பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்புகளின் அடிப்படையில் பல்வேறு துறைகளில், பயனாளர்களுக்கு குறுகியகால திறன் பயிற்சிகள் 2021-2022-ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன. பயிற்சி பெற்றவர்களின் விவரங்கள் பின்வருமாறு.

### அ. பயிற்சியளிக்கப்பட்டோர் விவரங்கள் (மாவட்டம் வாரியாக)

| வ. எண் | மாவட்டங்கள் | பயிற்சி பெற்றவர்கள் |
|---|---|---|
| 1 | அரியலூர் | 2,817 |
| 2 | செங்கல்பட்டு | 1,423 |

| வ. எண் | மாவட்டங்கள் | பயிற்சி பெற்றவர்கள் |
|---|---|---|
| 3 | சென்னை | 5,620 |
| 4 | கோயம்புத்தூர் | 2,006 |
| 5 | கடலூர் | 5,561 |
| 6 | தர்மபுரி | 3,758 |
| 7 | திண்டுக்கல் | 1,983 |
| 8 | ஈரோடு | 2,630 |
| 9 | கள்ளக்குறிச்சி | 1,140 |
| 10 | காஞ்சிபுரம் | 3,377 |
| 11 | கன்னியாகுமரி | 612 |
| 12 | கரூர் | 1,986 |
| 13 | கிருஷ்ணகிரி | 1,889 |
| 14 | மதுரை | 2,210 |
| 15 | மயிலாடுதுறை | 1,039 |
| 16 | நாகப்பட்டினம் | 1,903 |
| 17 | நாமக்கல் | 2,663 |
| 18 | பெரம்பலூர் | 2,285 |
| 19 | புதுக்கோட்டை | 2,213 |
| 20 | இராமநாதபுரம் | 1,735 |
| 21 | இராணிப்பேட்டை | 693 |
| 22 | சேலம் | 2,029 |

| வ. எண் | மாவட்டங்கள் | பயிற்சி பெற்றவர்கள் |
|---|---|---|
| 23 | சிவகங்கை | 1,816 |
| 24 | தென்காசி | 218 |
| 25 | தஞ்சாவூர் | 4,401 |
| 26 | நீலகிரி | 531 |
| 27 | தேனி | 611 |
| 28 | திருவள்ளூர் | 2,931 |
| 29 | திருவாரூர் | 1,973 |
| 30 | திருச்சிராப்பள்ளி | 5,044 |
| 31 | திருநெல்வேலி | 518 |
| 32 | திருப்பத்தூர் | 1,377 |
| 33 | திருப்பூர் | 890 |
| 34 | திருவண்ணாமலை | 2,284 |
| 35 | தூத்துக்குடி | 527 |
| 36 | வேலூர் | 2,304 |
| 37 | விழுப்புரம் | 1,505 |
| 38 | விருதுநகர் | 802 |
| | **மொத்தம்** | **79,304** |

## ஆ. பயிற்சி பெற்ற விண்ணப்பதாரர்களின் விவரம்

## (துறை வாரியாக)

| வ. எண் | துறையின் பெயர்கள் | மொத்தம் |
|---|---|---|
| 1 | வேளாண்மை | 1,038 |
| 2 | ஆடை | 16,213 |
| 3 | வாகனம் | 4,350 |
| 4 | அழகு மற்றும் ஆரோக்கியம் | 2,032 |
| 5 | வங்கி, நிதி சேவை மற்றும் காப்பீடு | 697 |
| 6 | மூலதன பொருட்கள் | 961 |
| 7 | கட்டுமானம் | 1,862 |
| 8 | வீட்டு வேலை செய்பவர் | 380 |
| 9 | மின்னணுவியல் மற்றும் வன்பொருள் | 10,297 |
| 10 | உணவு பதப்படுத்துதல் | 899 |
| 11 | கற்கள் மற்றும் நகைகள் | 565 |
| 12 | பசுமை வேலைகள் | 30 |
| 13 | கைவினைப் பொருட்கள் மற்றும் தரைவிரிப்பு | 107 |
| 14 | சுகாதாரம் | 6,433 |
| 15 | உட்கட்டமைப்பு உபகரணங்கள் | 627 |
| 16 | இரும்பு மற்றும் எஃகு | 100 |

| வ. எண் | துறையின் பெயர்கள் | மொத்தம் |
|---|---|---|
| 17 | தகவல் தொழில் நுட்பம் & தகவல் தொழில் நுட்ப சேவைகள் | 3,773 |
| 18 | தோல் | 1,889 |
| 19 | தளவாடங்கள் | 410 |
| 20 | மேலாண்மை | 19,779 |
| 21 | ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு | 783 |
| 22 | சுரங்கம் | 281 |
| 23 | வண்ணம் மற்றும் பூச்சு | 925 |
| 24 | குழாய் பொருத்துதல் | 451 |
| 25 | ஆற்றல் (எரிசக்தி) | 230 |
| 26 | சில்லறை விற்பனை | 926 |
| 27 | ரப்பர் | 400 |
| 28 | தொலை தொடர்பு | 263 |
| 29 | ஜவுளி மற்றும் கைத்தறி | 273 |
| 30 | சுற்றுலா & விருந்தோம்பல் | 2,330 |
| | **மொத்தம்** | **79,304** |

## 4.5. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணைய முகப்பின் அம்சங்கள்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணையமுகப்பு (www.tnskill.tn.gov.in) வெளிப்படையான மற்றும் பயன்படுத்துபவர்களுக்கு வசதியாக எளிய அம்சங்களுடன் திறன் பயிற்சிகளை முழுமையாக கண்காணிக்கவும் பிரத்தியேக நிகழ்நிலைத் தளமாக செயல்படுகிறது.

இது தரமான பயிற்சி மற்றும் பயிற்சித் திட்டத்தை சீராக செயல்படுத்துவதை உறுதி செய்யும் தகவல்களின் மையக்களஞ்சியமாக செயல்படுகிறது. வேலை தேடும் எந்தவொரு நபரும் இணைய முகப்பில் பதிவு செய்து, தேவைப்படும் பயிற்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தை தேர்வு செய்வதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது.

பயிற்சி கூட்டாளர் / பயிற்சி மைய வகைப்பாடு, தொகுதி உருவாக்கம் மற்றும் இலக்கு ஒதுக்கீடு

மற்றும் பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS) மூலம் பணபரிவர்த்தனை ஆகியவை முழுவதுமாக நிகழ்நிலை (Online) வழியாகவே நடைபெறுகிறது.

அனைத்து பயனாளர்களும் ஆதார் மூலம் சரிபார்க்கப்படுவதால், ஒரே நபர் மீள பயிற்சி பெறும் நிகழ்வு தடுக்கப்படுகிறது. மேலும், அனைத்து பயனாளர்களுக்கும் துல்லியமாக பணம் செலுத்தப்படுவதை இந்த அமைப்பு உறுதி செய்கிறது. ஆய்வு மற்றும் மதிப்பீட்டுத் தொகுதி, தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தின் தேசிய திறன் தகுதிகள் கட்டமைப்பின் அனைத்து விதிமுறைகளையும் பின்பற்றுகிறது. மேலும், இது புவிகுறியிடுதல் வழியாக இயக்கப்படும் கைபேசி செயலி அடிப்படையிலான ஆய்வாகும்.

இந்த இணைய முகப்பு பயன்படுத்த வசதியானது, வெளிப்படையானது. மேலும்,

தகவல்களை நிகழ்நிலை மூலம் எளிதாக பெற பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியது.

- மனுதாரர் பதிவு
- பயிற்சி கூட்டாளர் / பயிற்சி மைய அங்கீகாரம்
- இந்திய தனித்துவ அடையாள ஆணையத்துடன் ஒருங்கிணைப்பு (UIDAI)
- கைப்பேசி செயலி மூலம் நிகழ்நேர ஆய்வு
- பயிற்சி திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு
- நிகழ்நிலை மூலம் நிதி பங்கீடு
- பொது நிதியியல் மேலாண்மை அமைப்பு ஒருங்கிணைப்பு
- மதிப்பீடு முகமை பதிவு
- நிகழ்நிலை வழி சான்றிதழ் வழங்கல்
- திறன் தொகுப்பு
- ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வருகை பதிவு முறை (AEBAS)

- டிஜிலாக்கர் மற்றும் இணைய முகப்பு ஒருங்கிணைப்பு
- பணியமர்த்தல் தொடர் கண்காணிப்பு
- மனிதவள நிர்வாக அமைப்பு
- மத்திய மற்றும் மாநில இணையதளங்களை பயன்பாட்டு நிரல் இடைமுகம் (API) வழியாக ஒருங்கிணைத்தல்
- மேலாண்மை தகவல் அமைப்பு (MIS) தகவல் பலகை மற்றும் அறிக்கை

## 4.6. உலகத்திறன் போட்டிகள் 2022

திறன்களை காட்சிப்படுத்தவும், திறனை மேம்படுத்தவும் திறன் போட்டிகள் பெரும் பங்கு வகிக்கின்றன. இந்திய திறன்கள் எனும் தேசிய திறன் போட்டி இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. மாநில அளவிலான திறன் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் மண்டல அளவிலும் அதனைத் தொடர்ந்து தேசிய அளவில் நடைபெறும் திறன் போட்டிகளிலும் பங்கேற்பர்.

புதுடில்லியில் 06.01.2022 முதல் 10.01.2022 வரை நடைபெற்ற இந்திய திறன்கள் - 2021 இறுதிப் போட்டியில் தமிழகத்தை சார்ந்த 36 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். இவர்களில் 23 போட்டியாளர்கள் பதக்கம் வென்றுள்ளனர். அவற்றுள் 2 தங்கப்பதக்கம், 8 வெள்ளிப் பதக்கம், 8 வெண்கலப் பதக்கம் மற்றும் 5 சிறப்பு பதக்கங்களும் அடங்கும். தமிழ்நாடு 23 பதக்கங்களை வென்று, தேசிய அளவில் இந்திய திறன் போட்டிகள் 2021-இல் 5-வது இடத்தை பிடித்துள்ளது. நமது மாநிலம் 23 பதக்கங்களை வெல்வது இதுவே முதல்முறையாகும். இந்திய திறன் போட்டிகளில் வெற்றி பெற்ற போட்டியாளர்கள் அக்டோபர் 2022-இல் சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெறவுள்ள உலகத்திறன்- 2022 போட்டிகளில் கலந்து கொள்வர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14.03.2022 அன்று இந்திய திறன் போட்டிகள் - 2021-இல் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் வென்றவர்களுக்கு ரூ.1,00,000/-ம்

வெள்ளிப்பதக்கம் வென்றவர்களுக்கு ரூ.50,000/-ம் வெண்கலப் பதக்கம் மற்றும் சிறப்பு பதக்கம் வென்றவர்களுக்கு முறையே ரூ.25,000/- காசோலையாக வழங்கப்பட்டது.

## 4.7. மேம்பட்ட திறன் பயிற்சி

பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி பட்டதாரிகளுக்கு உயர்திறன் பயிற்சி வழங்கும் வகையில் ஒரு திறன்மிகு மையம் (Centre of Excellence) மற்றும் **5** தொழில் நுட்ப திறன் பயிற்சி மையங்கள் (t-SDIs) பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு முறையில் (PPP) ரூ.546.84 கோடி செலவில், ஆட்டோமேஷன் மற்றும் ரோபோடிக்ஸ் துறையில் உலகின் முன்னணி நிறுவனமான சீமென்ஸ் (SIEMENS) உடன் இணைந்து நிறுவப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ், ஒரு திறன் மிகு மையம் சென்னை குரோம்பேட்டை எம்.ஐ.டி (M.I.T)

வளாகத்திலும் மற்ற ஐந்து இணைப்பு தொழில் நுட்பதிறன் பயிற்சி மையங்கள் பின்வரும் இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன:

1. அண்ணா பல்கலைக்கழக கல்லூரி, காஞ்சிபுரம்
2. அண்ணா பல்கலைக்கழக கல்லூரி, விழுப்புரம்
3. தந்தை பெரியார் அரசு தொழில் நுட்ப கல்லூரி, வேலூர்
4. மத்திய பாலிடெக்னிக் கல்லூரி, தரமணி
5. முருகப்பா பாலிடெக்னிக் கல்லூரி (அரசு உதவி பெறும்) ஆவடி

**எம்.ஐ.டி (MIT) சென்னை** மாணவர்களின் வேலைவாய்ப்பு பெறும் திறனை அதிகரிப்பதற்காக உயர்தொழில்நுட்ப திறன் பயிற்சிகளை பெறவும் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரியை சேர்ந்த பயிற்றுநர்களுக்கு திறன்

மேம்படுத்தும் பயிற்சி வழங்கவும் முக்கிய மையமாக செயல்படுகிறது. இம்மையங்களின் மூலம் இதுவரை மொத்தம் 16,236 மாணவர்களுக்கும், 98 பயிற்றுநர்களும் பயிற்சி பெற்றுள்ளனர்.

### 4.8. அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல் (RPL)

அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல் என்பது அனுபவத்தின் மூலம் கற்ற திறனை அங்கீகரிக்கும் செயல் முறையாகும். தமிழ்நாட்டில் அனுபவத்தின் மூலம் கற்ற திறன்களை அங்கீகரிக்க ஏராளமான வாய்ப்புள்ளது. தற்போது முறைசாரா பணியாளர்களாக கட்டுமானம், சரக்கு மற்றும் நகர்வு மேலாண்மை, சிறு மற்றும் குறுநிறுவனங்கள். தோல் மற்றும் ஜவுளி போன்ற துறைகளில் பணிபுரியும் அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் அனுபவத்தின் மூலம் கற்ற திறன்களின் அடிப்படையிலான மதிப்பீடு மற்றும்

சான்றிதழ் பெற தகுதி உடையவர்களாக உள்ளனர். இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1,11,371 நபர்களுக்கு திறன் சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு இலட்சம் நபர்களுக்கான அனுபவத்தின் மூலம் பெற்றதிறனை அங்கீகரித்து சான்றளிக்கும் முறை செயல்பாட்டில் உள்ளது.

## 4.9. பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா 3.0 (PMKVY 3.0)

பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா **3.0** திட்டம் ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தின் முன்னோடித் திட்டமாகும். இத்திட்டம் தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தினால் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டம் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன், ஒன்றிய அரசினால் நிர்வகிக்கப்படும் மற்றும் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் மாநில அரசால் நிர்வகிக்கப்படும் திட்டமாகவும் இருகூறுகளாக செயல்படுத்தப்பட்டு

வருகிறது. ஒன்றிய அரசின் நிதி ஆதரவுடன் மாநில அரசால் நிர்வகிக்கப்படும் கூறுகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட திறன் பயிற்சி இலக்கு 4,634 நபர்கள். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இதுவரை 3,896 நபர்களுக்கு பயிற்சியளித்து, அவர்களில் 835 நபர்களுக்கு பணி நியமனமும் வழங்கப்பட்டுள்ளது.

அனுபவத்தின் மூலம் பெற்றதிறனை அங்கீகரிக்கும் செயல்முறை (RPL) பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா **3.0**-ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 7,400 நபர்கள் சான்றளிக்கப்பட ஒன்றிய அரசால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 2,467 நபர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

## 4.10. சங்கல்ப் - வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள திறன் பெறுதல் மற்றும் அறிவிற்கான விழிப்புணர்வுத் திட்டம் (SANKALP)

வாழ்வாதாரத்தை உயர்த்தி கொள்ள திறன் பெறுதல் மற்றும் அறிவுக்கான விழிப்புணர்வு திட்டம், தேசிய மற்றும் மாநில அளவில் நிறுவன வழிமுறைகளை வலுப்படுத்துதல், தரமான பயிற்சியாளர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களின் தொகுப்பை உருவாக்குதல், மாநில அளவில் அனைத்து திறன் பயிற்சி நடவடிக்கைகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை உருவாக்குதல், வலுவான கண்காணிப்பை ஏற்படுத்துதல் மற்றும் திறன் பயிற்சி திட்டங்களுக்கான மதிப்பீட்டுமுறை உருவாக்குதல், பின் தங்கிய பிரிவினருக்கு திறன் பயிற்சிக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல் போன்றவைகளே இதன் நோக்கமாகும்.

இத்திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் 60:40 என்ற விகிதத்தில் நிதி பங்கீட்டின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான நிதி,அமைப்பு முறையினை வலுப்படுத்துவதற்கான மானியம் மற்றும் உடனிணைப்பு மானியம் என்னும் இருகூறுகளின் கீழ்வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் திறன் சவால்களை எதிர்கொள்ளும் பொருட்டு, முன்னேற விழையும் மாவட்டங்களுக்கு (விருதுநகர் மற்றும் இராமநாதபுரம்) ரூ.33.34 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ரூ.20.30 கோடி திட்ட மதிப்பீட்டில் பல்வேறு அமைப்பு முறையினை வலுப்படுத்துதல் மற்றும் உடனிணைப்பு செயல்பாடுகள் ஆகிய நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

i) நான்கு மண்டலங்களிலுள்ள மாவட்ட திறன் பயிற்சி அலுவலர்களுக்கு மாவட்ட திறன் மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல் குறித்த திறன் வளர்ப்பு பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன.

ii) பத்தமடைப் பகுதியில் உள்ள பாய் நெசவாளர்களுக்கு டிஜிட்டல் மற்றும் நிதி சார்ந்த கல்வியறிவு வழங்கும் பயிற்சி மற்றும் மேம்படுத்தப்பட்ட வடிவமைப்பு பயிற்சி, இயந்திர படகு பழுது நீக்கம், எல்.இ.டி பல்பு தயாரித்தல், சிவசைலம் பகுதியில் இயற்கை சாயமிடுதல் பயிற்சி, பழவேற்காடு பகுதியில் பனையோலை நெசவு மற்றும் வீரவநல்லூர் பகுதியில் பாய் நெசவு போன்ற புதுமையான திறன் பயிற்சிகள் கிராப்ட் கவுன்சில் ஆப் இந்தியா

நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

iii) தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுபாட்டு நிறுவனத்துடன் இணைந்து 14 மூன்றாம் பாலினத்தவர்களுக்கும், சமூக நலத்துறையின் உதவியுடன் மேலும் 118 மூன்றாம் பாலினத்தவர்களுக்கும் பல்வேறு மாவட்டங்களில் திறன் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

iv) பேறு காலத்திற்கு பின் ஏற்பட்ட தொழில் இடைவெளியை நிறைவு செய்ய அனைத்து மாவட்டங்களிலும் 713 பெண்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

v) வேலைவாய்ப்பு வசதிகளை அதிகரிக்கும் பொருட்டு, வழக்கமாக நடத்தப்படும் வேலைவாய்ப்பு முகாம்களை தவிர, பல்வேறு மாவட்டங்களில் சங்கல்ப் திட்டத்தின் கீழ்,

நடத்தப்பட்ட 9 வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் 8,752 நபர்கள் பணிவாய்ப்பினை பெற்றுள்ளனர்.

vi) மாற்றுத் திறனாளிகள் நல இயக்ககத்திற்கு, மாற்றுத் திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார மையம் நிறுவுவதற்காக ரூ.1.59 கோடி வழங்கப்பட்டுள்ளது.

vii) தொழிலாளர் சந்தை தகவல் மையம் (LMIS) நிறுவுவதற்கான செயல்முறை தற்போது நடைபெற்று வருகிறது.

### 4.11. உயர் திறன் மேம்பாட்டு மையங்கள்

வளர்ந்து வரும் தொழில் நுட்ப முன்னேற்றங்களை எதிர்கொள்ளும் பொருட்டு, தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டுத் திட்டம் பகுதி 2-இன் (TNIPP-Phase2) ஒரு பகுதியாக ஜப்பான்

சர்வதேச கூட்டுறவு முகமையின் (JICA) உதவியுடன் பின்வரும் துறைகளில் உயர்தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்குவதற்கு 5 உயர்திறன் மேம்பாட்டு மையங்கள் அமைத்திட, அரசால் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பின்வரும் முன்னணி துறைகளில் திறன் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

1. மருத்துவமனை மற்றும் சுகாதார சேவைகள்
2. போக்குவரத்து மற்றும் சரக்கு நகர்வு மேலாண்மை
3. கட்டுமானம் மற்றும் உள்கட்டமைப்புத் துறை
4. வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீடு
5. தானியங்கி, தானியங்கி உபகரணங்கள் மற்றும் இயந்திர கருவிகள்

ஒவ்வொரு உயர்திறன் மேம்பாட்டு மையமும், துறைக்கான சிறப்பு நோக்கு அலகாக (SPV)

செயல்படும். இம்மையங்கள் கம்பெனி சட்டம், 2013, பிரிவு 8-ன் கீழ் நிறுவப்பட்டு, மையத்தின் அன்றாட அலுவல்களை நிர்வகிக்கும்.

உயர்திறன் மேம்பாட்டு மையங்களின் தற்போதைய நிலை பின்வருமாறு :

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | முன்னணி செயலாக்க பங்குதாரர் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | மருத்துவம் மற்றும் சுகாதார நலனுக்கான தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டுமையம் | காவேரி மெடிக்கல்கேர் (இந்தியா லிமிடெட்) | இதுவரை 1,038 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. |
| 2. | சரக்கு நகர்வு மேலாண்மை மற்றும் போக்குவரத்திற்கான தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் | சரக்கு நகர்வு மேலாண்மை துறைதிறன் குழுமம் | 500 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது |
| 3. | கட்டுமானம் மற்றும் உள்கட்டமைப்பு துறைக்கான தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் | ராம்கோ சிமெண்ட்ஸ் (பி) லிமிடெட் | கம்பெனிச் சட்டம், 2013, பிரிவு 8-ன்கீழ் 28.02.2022 அன்று பதிவு செய்யப்பட்டது. |

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | முன்னணி செயலாக்க பங்குதாரர் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 4. | வங்கி, நிதிச் சேவை மற்றும் காப்பீட்டிற்கான தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் | M.S.E நிதி சேவைகள் சென்னை | கம்பெனிச் சட்டம் 2013, பிரிவு 8-ன்கீழ் 25.02.2022 அன்று பதிவு செய்யப்பட்டது. |
| 5. | தானியங்கி, தானியங்கி உபகரணங்கள், இயந்திர கருவிகளுக்கான தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையம் | - | முன்னணி செயல் பங்குதாரர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கம்பெனி சட்டத்தின் கீழ் விரைவில் பதிவு செய்யப்படும். |

## 4.12. பல்நோக்கு திறன் மேம்பாட்டு மையம்

தோல் பதனிடும் துறையில் 2000 நபர்களுக்கு மூன்று ஆண்டுகளில் பயிற்சி அளிக்கும் பொருட்டு ரூ.6.25 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் மத்திய காலணி பயிற்சி நிறுவனம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் வாணியம்பாடியில் தோல் பதப்படுத்தும் துறைக்கான பல்நோக்கு திறன் மேம்பாட்டு மையம்

நிறுவப்பட்டுள்ளது. இத்தகைய மையத்தை நாட்டிலேயே முதன் முறையாக செயல்படுத்திய மாநிலம் தமிழ்நாடு.

### 4.13. நான் முதல்வன்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வைத் திட்டமான "நான் முதல்வன்" திட்டத்தின் முதன்மை நோக்கம் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு முழுவதும் குறைந்தபட்சம் 5 இலட்சம் இளைஞர்களின் கல்வி, அறிவு மற்றும் திறனை உயர்த்துவதாகும்.

இத்திட்டத்தின் கீழ் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் தனித்துவமான திறமைகளை அடையாளம் கண்டு அவற்றை மேம்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்படும். தொழில் துறையின் தேவைக்கேற்ப மாணவர்களுக்கு அளிக்கப்படும் திறன் பயிற்சி அவர்களுக்கான வேலைவாய்ப்பினை

அதிகரிக்கும். பல்வேறு பிரிவுகளில் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்க தகுந்த திட்டங்கள் உருவாக்கப்படும்.

இதுதவிர, வளர்ந்து வரும் தொழில் நுட்பத்தின் பாடத்திட்டங்களை கற்பதற்கு மாணவர்கள் ஊக்குவிக்கப்படுவர். மேலும் பாடத்திட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான வழிவகைகள் ஆராயப்படும்.

**4.13.1. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் பின்வரும் செயல்பாடுகளின் மூலம் “நான் முதல்வன்” திட்டத்தை செயல்படுத்தவுள்ளது**

**தொழில் சார்ந்த திறன் பயிற்சி**

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், அரசுக் கல்லூரிகளில் (ரோபோடிக்ஸ், விர்ச்சுவல் ரியாலிட்டி / ஆக்மென்டட்

ரியாலிட்டி, கைப்பேசி செயலி உருவாக்கம், இணைய பாதுகாப்பு தொழில்நுட்பம், எத்திகல் ஹேக்கிங், கிளவுட் கம்ப்யூட்டிங், முப்பரிமாண அச்சிடுதல், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மற்றும் பிற துறைகளில் வளர்ந்து வரும் தொழில் நுட்பம்) போன்ற (தேசிய திறன் தகுதி கட்டமைப்பினால் அங்கீகரிக்கப்படாத படிப்புகள்) தேவைக்கேற்ற பயிற்சிகளுக்கு, பெருநிறுவனங்களின் ஆதரவுடன் நடத்தப்படும் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சிக்கு நிதி அளிக்கும்.

- எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு திறன்மிகு பணியாளர் குழுவை உருவாக்க தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தினால் பகுதி அல்லது முழுமையான

நிதி அளிக்கக்கூடிய தொழில் சார்ந்த படிப்புகளை உருவாக்குதல்.

- தொழில் துறையின் தேவைக்கேற்ப புதிய திறன் பயிற்சி தொகுதிகளை உருவாக்குதல். மேலும் கல்வி மற்றும் தொழில்துறையுடன் இணைந்து புதிய திறன் தொகுதிகளை உருவாக்குதல்.
- மாறிவரும் தேவைக்கேற்ப பாடத்திட்டங்களை மேம்படுத்த சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்துறை சங்கங்களுடன் இணைந்து செயல்படுதல்.
- தமிழ்நாட்டில் அதிக நிறுவனங்கள் கொண்ட துறைகளில் திறன்மிகு மையங்களை உருவாக்குதல்.
- 21-ஆம் நூற்றாண்டிற்கான திறன்கள் மற்றும் தகவல் தொடர்பு திறன்களை

முழுமைப்படுத்தும் பயிற்சி அமைப்புகளை அனைத்து கல்வி நிறுவனங்களிலும் நிறுவுவதன் மூலம் திறன் பயிற்சி வழங்கி நமது இளைஞர்களை நாட்டிலேயே திறன் மிகுந்த தொழிலாளர்களாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

## 4.14. சிறப்புத் திட்டங்கள்

- பட்டதாரிகள், டிப்ளமோ மற்றும் தொழிற்பயிற்சி முடித்தவர்களை தொழிற்சாலைகளின் தேவைகளுக்கேற்ப உடனடியாக வேலைவாய்ப்பு அதிகமுள்ள வளர்ந்து வரும் அனைத்து துறைகளிலும் வேலைவாய்ப்புகளை பெறும் வகையிலும் பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களில்,

கூடுதல் பாடமாக திறன் பயிற்சி வழங்கப்படும்.

- கைபேசி பழுது நீக்கும் தொழில்நுட்ப வல்லுநர், கணினி மற்றும் உபகரணங்கள் நிறுவும் வல்லுநர், கட்டடம் மற்றும் தொழில் துறைசார்ந்த பிரிவுகளில் தானியங்கி மயமாக்கல் போன்ற சிறப்புதிறன் பயிற்சிகள் எதிர்கால வேலைவாய்ப்பினை கருத்தில் கொண்டு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு அளிக்கப்படும்.

- 1 இலட்சம் இளைஞர்களுக்கு விவசாய உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களின் இயக்கம், பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் ஆகியவற்றில் திறன் பயிற்சி அளித்தல்.

- பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ விடுதிகள்/கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் பயிலும்

மாணவர்களுக்கு ஆங்கிலம் பேசும் திறன் மற்றும் ஆளுமை மேம்பாட்டுப் பயிற்சியளித்தல்.

- பொறியியல் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை அதிகரிக்க அயல்மொழி பயிற்சி அளித்தல்.

- சட்டக்கல்லூரி மாணவர்களுக்கு தொழில் முறையிலான ஆங்கிலதிறன் பயிற்சிஅளித்தல்.

## 4.15. பயிற்சியை முடித்தவர்களுக்கு பயனுள்ள வேலைவாய்ப்பு வழங்குதல்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி அளிப்பவர்கள் வேலைவாய்ப்பு துறையின் தனியார் வேலைவாய்ப்பு இணைய தளத்துடன் இணைந்து திறன் பயிற்சி

பெற்றவர்களுக்கு பயனுள்ள வேலைவாய்ப்பு பெறும் பொருட்டு ஒருங்கிணைக்கப்படுவார்கள். திறன் பயிற்சி பெற்றவர்களின் தகவல்கள் தனியார் வேலைவாய்ப்பு இணைய முகப்பில் பதிவு செய்துள்ள தொழில் நிறுவனங்களுடன் பகிரப்பட்டு விண்ணப்பதாரர்கள் பணி நியமனத்திற்கு தேர்வுசெய்யப்படுவர்.

### 4.16. நீடித்த வளர்ச்சி இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகள் 4-ன் படி பெண்கள் மற்றும் ஆண்களுக்கு எளிதில் கிடைக்கக்கூடிய மற்றும் தரமான தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி, சமமான நிலையில் கிடைத்திட உறுதி செய்வதாகும். தேசிய திறன் கட்டமைப்பு தரத்தின்படி பாலினம் சார்ந்த பல்வேறு வகைதிறன் மேம்பாட்டுத் திட்டங்கள் தரமான முறையில் கட்டணமில்லாமல் தமிழ்நாடு திறன்

மேம்பாட்டுக் கழகத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நீடித்த வளர்ச்சி இலக்கு 4.4 தொடர்பாக, முன்னணி துறைகளில் மாநில நிதியுதவி பெறும் திறன் பயிற்சி திட்டங்கள் தவிர பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா, சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் திறன் பயிற்சி, ஐந்து துறைகளின் உயர்திறன் மேம்பாட்டு மையம், பல்நோக்கு திறன் மேம்பாட்டு மையம், சீமென்ஸ் உயர்திறன் பயிற்சி மையம் போன்ற பல்வேறு உயர்திறன் திட்டங்களின் மூலம் அதிக அளவிலான திறன் பெற்ற மனிதவளத்தை அதிகரிக்க தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் பயிற்சியளித்து வருகிறது.

நீடித்த வளர்ச்சி இலக்குகள் 4.4.1-ன் படி குறுகியகால பயிற்சிகளில் இளைஞர்களின் விகிதாச்சாரத்தை உறுதி செய்ய தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் அனுபவத்தின் மூலம்

பெற்றத்திறனை அங்கீகரித்தல் எனும் முயற்சியினை முன்னெடுத்துள்ளது. அதன் வாயிலாக எற்கெனவே திறன் பெற்ற நபரின் திறமைகளை மதிப்பீடு செய்து சான்றளிப்பதன் மூலம் வேலைவாய்ப்புச் சந்தையில் மிகச் சிறந்த வாய்ப்புகளை அவருக்கு ஏற்படுத்தித் தரும்.

## 5. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்)

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம், பாராளுமன்றத்தில் 1948-ம் ஆண்டு இயற்றப்பட்ட தொ.அ.ஈ. சட்டப்படி, "தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம்" என அழைக்கப்படும் முறையாக அமைக்கப்பட்ட நிறுவன அமைப்பு மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

தொ.அ.ஈ திட்டமானது ஒரு விரிவான சமூக பாதுகாப்பு திட்டமாகும். இதன் முக்கிய நோக்கம் அமைப்புசார்ந்த துறையின் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை, உடல் நலக்குறைபாடு, மகப்பேறு, உடல் ஊனம் மற்றும் பணியிட மரணம் அல்லது தொழில்சார் நோய்கள் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பதாகும். தமிழகத்தில் தொ.அ.ஈ. திட்டம் 1955 ஜனவரி 23-ம் தேதி முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது தமிழ்நாடு முழுவதும் 38.27 லட்சம் தொழிலாளர்கள் மற்றும் 1.10 கோடி தொழிலாளர்களைச் சார்ந்தோர்கள் (அதாவது அவர்களது மனைவி, குழந்தைகள் மற்றும் தொழிலாளர்களின் பெற்றோர்) இத்திட்டத்தின் கீழ் உள்ளனர்.

**5.1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்வதற்கான தகுதிகள்**

தொ.அ.ஈ. திட்டம் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களை கொண்ட தொழிற்சாலைகள் மற்றும் இதர நிறுவனங்களுக்கு பொருந்தும். மாத ஊதியம் ரூ.21,000/- வரை பெறும் தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் இணைக்கப்படுவதற்கு தகுதியுடையவர்கள். மேலும் ஆட்டிசம், செரிபரல் பால்சி, மூளை வளர்ச்சி குறைபாடுகள் மற்றும் பல்வகைக் குறைபாடுகளுடைய தொழிலாளர்களும்

இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். ரூ.25,000/- வரை மாத ஊதியம் பெறும் மாற்றுதிறனாளிகளுக்கு தொ.அ.ஈ. திட்டம் பொருந்தும். நாள் ஒன்றுக்கு ரூ.176/- வரை வருமானம் ஈட்டும் பணியாளர்கள் தங்கள் பங்களிப்பு பங்குத் தொகையிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்கள்.

## 5.2. திட்டத்தின் நிதி ஆதாரம்

01.07.2019 முதல் ஒவ்வொரு மாதமும் தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து வசூலிக்கப்படும் நிர்ணயிக்கப்பட்ட 0.75 சதவீதமும் பங்களிப்பு மற்றும் வேலையளிப்போரின் பங்களிப்பான 3.25 சதவீதமும் சேர்த்து பெறப்படும் பங்கு தொகையே இத்திட்டத்திற்கான நிதியாதாரமாகும். தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமும் மாநில அரசும் முறையே 7:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் செலவுகளைப் பகிர்ந்துக்

கொள்கின்றனர். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக மாநில அரசு செலவழிக்கும் மொத்த செலவினத்தில் 7/8 பங்கினை தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகம் திரும்ப செலுத்துகிறது.

**5.3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்**

தமிழ்நாட்டில், 225 தொ.அ.ஈ மருந்தகங்கள் மற்றும் 10 தொ.அ.ஈ மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது.

- மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொ.அ.ஈ) இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அயனாவரம் (சென்னை), மதுரை, சேலம், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஓசூர் மற்றும் சிவகாசி ஆகிய 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள்.

- மருத்துவ கல்வி இயக்குநரின் கட்டுபாட்டின் கீழ் செயல்படும் கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

- புதுதில்லி, தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்தின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் சென்னை (கே.கே.நகர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை) மற்றும் திருநெல்வேலி ஆகிய 2 தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழக மருத்துவமனைகள்.

மேலும், காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு, ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள் மூலம் உயர்சிறப்பு மருத்துவ வசதிகள் வழங்கப்படுகின்றன.

## 5.4. தமிழ்நாடு தொ.அ.ஈ. திட்ட நிர்வாக அமைப்பு

தமிழ்நாடு முழுவதிலும் தொ.அ.ஈ. திட்ட நிர்வாகம், நிதி, வளர்ச்சி மற்றும் செயல்படுத்துதல் போன்றவற்றிற்கு சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொ.அ.ஈ.) இயக்குநரே முழு பொறுப்பாவார். இவருக்கு கீழ் செயல்படும் மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்கள், அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தொ.அ.ஈ. மருந்தகங்களில் நிதி, நிர்வாகம், தொ.அ.ஈ திட்டத்தை நடைமுறைபடுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறார்கள். மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொ.அ.ஈ.) இயக்குநரின் கீழ் செயல்படும் மருத்துவக் கண்காணிப்பாளர்கள் தொ.அ.ஈ. மருத்துவமனைகளில் நிர்வாகம் மற்றும் கண்காணித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்கிறார்கள்.

## 5.5. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் இயங்கும் ஆயுஷ் (AYUSH) பிரிவுகள்

காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் ஆங்கில முறை சிகிச்சை வசதிகளுடன், கூடுதலாக ஆயுர்வேதா, யோகா, யுனானி, சித்தா, ஹோமியோபதி ஆகிய சிகிச்சை முறைகள் உள்ளடங்கிய ஒருங்கிணைந்த "ஆயுஷ்" (AYUSH) சிகிச்சை வசதியும் வழங்கப்படுகின்றன.

- ஆயுர்வேதப் பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஓசூர், சிவகாசி ஆகிய 8 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. கூடுதலாக ஆயுர்வேத பிரிவுகள் தமிழகத்தில் உள்ள 13 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

- யோகாசன பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஓசூர், சிவகாசி ஆகிய 8 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன.

- யுனானி பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை ஆகிய 3 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. கூடுதலாக யுனானி பிரிவுகள் தூத்துக்குடி, ஆம்பூர், இராணிப்பேட்டை ஆகிய 3 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

- சித்த மருத்துவப் பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஓசூர், சிவகாசி ஆகிய

8 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. கூடுதலாக சித்த மருத்துவப் பிரிவுகள் தமிழகத்தில் உள்ள 43 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

- ஹோமியோபதி பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை ஆகிய 3 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. கூடுதலாக ஹோமியோபதி பிரிவுகள் தூத்துக்குடி, கோவில்பட்டி மற்றும் ஆவடி ஆகிய 3 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

## 5.6. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் பயன்கள்

தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் தொழிலாளர் மற்றும் வேலையளிப்போரின் பங்களிப்பாக செலுத்தப்படும் பங்களிப்பானது, அவசர மருத்துவ தேவை மற்றும் பிற இடர்களின்போது காப்பீட்டாளரின் வருவாய் மற்றும் சேமிப்புகளில் கூடுதல் நிதிச்சுமை ஏற்படாவண்ணம் அவர்களுக்கு உதவுகின்றது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம் கீழ்காணும் பல்வேறு சமூகப் பாதுகாப்பு பயன்களை காப்பீட்டாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் வழங்குகிறது.

1. **மருத்துவ உதவி**

காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் காப்பீட்டாளர் பணியில் சேர்ந்த நாள் முதல் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அவர் அந்நிறுவனத்தில் பணியிலிருக்கும்

வரை வழங்கப்படும் (அ) முதன்மை சிகிச்சை (புறநோயாளி) மற்றும் இரண்டாம் நிலை பராமரிப்பு (உள்நோயாளி) (ஆ) உயர்சிறப்பு சிகிச்சை போன்றவை தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்தின் விரிவுப்படுத்தப்பட்ட மிகப்பெரிய வசதிகளில் ஒன்றாகும். தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் மூலம் ஆரம்ப சிகிச்சையும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள் மூலம் இரண்டாம் நிலை சிகிச்சை மற்றும் உயர்சிறப்பு சிகிச்சை வழங்கப்படுகின்றன.

## 2. பேறுகால உதவி

பெண் காப்பீட்டு நபர்களுக்கு பேறுகாலத்தில் 26 வாரங்களுக்கும்

முந்தைய இரண்டு பங்களிப்பு காலங்களில் 70 நாட்களுக்கு பங்களிப்பு இருப்பின் மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மேலும் ஒரு மாதத்திற்கு நீட்டிப்பு செய்து பேறுகால உதவி வழங்கப்படும்.

**3. சார்ந்துள்ளோருக்கான உதவி**

காப்பீட்டாளர் வேலை செய்யும் போது ஏற்படும் விபத்து அல்லது அவர் செய்யும் தொழில் மூலம் ஏற்படும் நோயினால் இறக்க நேர்ந்தால், அவரின் சம்பளத்தில் 90 சதவீதம் அவரைச் சார்ந்தவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

**4. உடல் நலமின்மைக்கான உதவி**

ஒரு வருடத்தில் அதிகபட்சமாக 91 நாட்களுக்கு சான்றளிக்கப்பட்ட

நோயால் பாதிக்கப்பட்ட காப்பீட்டளர்களுக்கு ஊதியத்தில் 70 சதவீதம் ரொக்க இழப்பீடாக உடல்நலமின்மை பலன் வழங்கப்படும். உடல் நலமின்மை உதவித்தொகைக்குத் தகுதி பெற, காப்பீட்டாளர்கள் 6 மாத காலத்தில் 78 நாட்களுக்கு பங்களிப்பு செய்திருக்க வேண்டும்.

**5. நீடித்த உடல் நலமின்மைக்கான உதவி**

34 வீரியமிக்க மற்றும் நீண்ட கால நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள காப்பீட்டாளர்களுக்கு ஊதியத்தில் 80 சதவீதம் அதிகரிக்கப்பட்ட விகிதத்தில் நீடித்த உடல் நலமின்மைக்கான உதவி இரண்டு ஆண்டுகள் வரை நீட்டிப்பு செய்யப்படும்.

## 6. அதிகரிக்கப்பட்ட உடல் நலமின்மைக்கான உதவி

உற்பத்தி வயதில் உள்ள காப்பீட்டாளர்களுக்கு வாசக்டமி / ட்யூபக்டமி போன்ற கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்து கொள்ளும் போது, அதிகரிக்கப்பட்ட உடல் நலமின்மைக்கான உதவி வழங்கப்படும்.

கருத்தடை மேற்கொள்ளும் ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு முறையே 7 நாட்கள் மற்றும் 14 நாட்களுக்கு முழு ஊதியத்திற்குச் சமமான அதிகரிக்கப்பட்ட உடல் நலமின்மைக்கான உதவி வழங்கப்படும்.

## 7. இயலாமைக்கான உதவி

### (அ) தற்காலிக இயலாமைக்கான உதவி

காப்பீட்டாளர் பணியில் சேர்ந்த நாள் முதல், பணியில் இருக்கும்போது காயம் ஏற்பட்டால், எவ்வித பங்களிப்பு செய்வதை பொருட்படுத்தாமல் காப்பீட்டாளர்களுக்கான தற்காலிக இயலாமை உதவி வழங்கப்படும். இயலாமை தொடரும் வரை, ஊதியத்தில் 90 சதவீதம் மாதாந்திர தொகையாக தற்காலிக இயலாமை உதவி வழங்கப்படும்.

### (ஆ) நிரந்தர இயலாமைக்கான உதவி

காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் காப்பீட்டாளர் பணியில் சேர்ந்த நாள் முதல், பணியில்

இருக்கும்போது நிரந்தர இயலாமை ஏற்படின் நிரந்தர இயலாமைக்கான உதவி வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும்.

மருத்துவக் குழுவின் பரிந்துரையின்படி சம்பாதிக்கும் திறன் இழப்பிற்கு ஏற்ப மாத ஊதியத்தில் 90 சதவீதம் மாதாந்திரத் தொகையாக வழங்கப்படும்.

**8. வேலையின்மைக்கான உதவி**

**(அ) ராஜீவ் காந்தி சிரமிக் கல்யாண் யோஜனா**

காப்பீட்டாளர், தொழிற்சாலை மூடப்படுவதாலோ, ஆட்குறைப்பு செய்யப்படுவதாலோ, பணியில் இல்லாத நேரத்தில் நிரந்தரமாக இயலாமை

ஏற்படுவதாலோ அல்லது இதர எதிர்பாராத காரணங்களால் சுயவிருப்பின்றி வேலை இழக்க நேரிட்டால், குறைந்தபட்சம் 2 வருடம் அந்த தொழிற்சாலையில் தொடர்ந்து வேலை பார்த்திருப்பின், அவர்களுக்கு 24 மாதங்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதுடன் அவரது சராசரி தினசரி ஊதியத்தில் 50 சதவீதத்தை முதல் 12 மாதங்களுக்கும் அடுத்த 12 மாதங்களுக்கு 25 சதவீதமும் வழங்கப்படும்.

**(ஆ) அடல் பீமித் வ்யக்தி கல்யாண் யோஜனா**

தொழிலாளர் அரசு காப்புறுதிக் கழகமானது 01.07.2018 முதல், காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில்

பணியமர்த்தப்பட்ட காப்பீட்டாளர் இரண்டு ஆண்டுகள் பணி நிறைவு மற்றும் தொடர்ச்சியாக 4 பங்களிப்பு காலங்களில் 78 நாட்களுக்கு குறைவில்லாமல் பணிபுரிந்திருந்தால் வருவாயில் 25 சதவீதத்திற்கு மிகாமல் 90 நாட்கள் வரை இழப்பீட்டு தொகையினை பணப்பயனாக வாழ்நாளில் ஒருமுறை வழங்கப்படும்.

## 5.7. தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் இதர உதவிகள்

❖ **இறுதிச் சடங்கு உதவி**

காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் பணியமர்த்தப்பட்ட காப்பீட்டாளரை சார்ந்தவர்கள் அல்லது இறுதி சடங்கு புரியும் நபருக்கு ரூ.15,000/- இறுதிச் சடங்கு உதவித்தொகையாக வழங்கப்படும்.

❖ **பேறுகாலச் செலவுகள்**

காப்பீட்டாளரின் மனைவி அல்லது பெண் காப்பீட்டாளருக்கு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நிலையங்களில் பிரசவ வசதிகள் இல்லாதிருந்தால் ரூ.7,500/- பேறுகால படியாக வழங்கப்படும்.

❖ **முதியோர் மருத்துவப் பராமரிப்பு**

குறைந்தபட்ச பங்களிப்பாக வருடத்திற்கு ரூ.120/- செலுத்தியிருந்தால் வயது முதிர்வு ஓய்வு அல்லது விருப்ப ஓய்வு / பணியாளர் ஓய்வுத் திட்டம் மற்றும் நிரந்தர இயலாமை ஓய்வு பெறும் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது மனைவிக்கு முதியோர் மருத்துவ வசதி வழங்கப்படுகிறது.

❖ **ஊன்றுகோல்கள், சக்கர நாற்காலிகள், பல்செட்கள், மூக்கு கண்ணாடிகள் மற்றும்**

காது கேளாதோருக்கான கருவி போன்ற உதவி சாதனங்கள் இத்திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்படுகின்றன.

- ❖ தடுப்பூசிகள், எச்ஐவி / எயிட்ஸ் நோய் கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சை அளித்தல் போன்ற நோய் தடுப்பு வசதிகளாக வழங்கப்படுகின்றன.
- ❖ தேசிய திட்டங்களான குடும்பநலம் மற்றும் காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் செயல்முறைப்படுத்தப்படுகின்றன.

## 5.8. மருத்துவமனை மேம்பாட்டுக் குழு

மருத்துவமனை மேம்பாட்டுக் குழு மூலம் தொ.அ.ஈ. மருத்துவமனை மற்றும் மருந்தகக் கட்டடங்களின் சிறிய மற்றும் பெரிய பழுது பார்க்கும் பணிகள், மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் மற்றும் பராமரிப்பு போன்றவற்றிக்கு, மருத்துவமனை

வளர்ச்சி நிதி, இரு மாதங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் குழுக் கூட்டத்தில் சென்னை தொ.அ.ஈ. கழக மாநில மருத்துவ அலுவலரால் நேரடியாக வழங்கப்படுகிறது.

### 5.9. காப்பீட்டு பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளில் மேற்கொண்ட மருத்துவ செலவினை மீளப்பெறுதல்.

### 5.9.1. தொகுப்பு ஒப்பந்தம் (ஒப்பந்தம் செய்து கொண்ட மருத்துவமனைகள்)

தொகுப்பு ஒப்பந்த அடிப்படையின் (CGHS Rate) கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்ட 77 சிறப்பு மற்றும் 103 உயர்சிறப்பு சிகிச்சை வசதி கொண்ட தனியார் மருத்துவமனைகளில் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்குப் பணமில்லாத மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் மருத்துவரின் பரிந்துரைகளின் பேரில் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். தொகுப்பு ஒப்பந்தத்தின் கீழ் தனியார் மருத்துவமனைகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மூலம் காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா மருத்துவ சிகிச்சைக்கான பட்டிகள் நேரடியாகத் தீர்வு செய்யப்படுகின்றன.

## 5.10. கோவிட்-19 நோய் தொற்றின்போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

கோவிட்-19 பரவல் காரணமாக தொ.அ.ஈ மருத்துவமனைகள் அயனாவரம், சிவகாசி, சேலம், வேலூர் மற்றும் ஓசூர் ஆகியவை கோவிட் சுகாதாரப் பராமரிப்பு மையங்களாக (சி.எச்.சி.சி) மாற்றப்பட்டு 8,769 கோவிட் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

## 5.11. தொ.அ.ஈ. கழகத்தின் கோவிட்-19 நிவாரணத் திட்டம்

தொ.அ.ஈ. சட்டம், 1948 இன் கீழ் வரும் காப்பீட்டு நபர்கள் கோவிட்-19 காரணமாக இறந்துவிட்டால் அவர்களின் குடும்பத்தினருக்கு, காப்பீட்டாளரின் சராசரி ஊதியத்தில் 90 சதவீதம் ஒவ்வொரு மாதமும் நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். இறந்த காப்பீட்டாளரின் வாழ்க்கைத் துணைவரும் ஆண்டுக்கு ரூ.120 பங்களிப்புடன்

மருத்துவச் சேவைக்குத் தகுதியுடையவர். காப்பீட்டாளர் கோவிட்-19 லிருந்து மீண்ட 30 நாட்களுக்குள் ஏற்படும் கோவிட்-19 சார்ந்த நோய்களினால் ஏற்படும் இறப்புகளும் இந்தத் திட்டத்தில் உள்ளடங்கும்.

**சி.வி. கணேசன்**
**தொழிலாளர் நலன் மற்றும்**
**திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்**

## தொழிலாளர் துறை



18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவுப் பெற்ற 50,721 தொழிலாளர்களுக்கு ரூ.12.35 கோடிக்கான நலத்திட்ட உதவிகள் வழங்குவது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 01.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில் துவக்கி வைக்கப்பட்டது.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை
## (வேலைவாய்ப்புப் பிரிவு)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 20.03.2022 அன்று கல்வித் தொலைக்காட்சியில் அரசுப்பணி போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் ஒளிபரப்பைத் தொடங்கி வைத்தார்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை
## (வேலைவாய்ப்புப் பிரிவு)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 20.03.2022 அன்று செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையால் நடத்தப்பட்ட மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட வேலைநாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கினார்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை
## (பயிற்சிப் பிரிவு)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் ரூ.21.63 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட வகுப்பறைகள், பணிமனைக் கட்டடங்கள் மற்றும் விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றை 11.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில் திறந்து வைத்தார்.

## தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 08.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமும் பிரிட்டிஷ் கவுன்சிலும் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டன.



12.03.2022 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் சிறந்த மாவட்ட திறன் திட்டத்திற்கான முதல் பரிசினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கினார்கள்.

## தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் "இந்தியா ஸ்கில்ஸ்" திறன் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாடு இளைஞர்களுக்கு ஊக்கத்தொகை அளித்து பெருமை படுத்தினார்கள்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை
## (வேலைவாய்ப்புப் பிரிவு)



சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இராணிப்பேட்டை மாவட்டத்தில் 12.03.2022 அன்று நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட வேலைநாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்களும் இந்நிகழ்ச்சியில் உடன் பங்கேற்றனர்.

# தொழிலாளர் துறை



கருணை அடிப்படையில் நியமிக்கப்பட்ட 9 இளநிலை உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சி.வி. கணேசன் அவர்கள் வழங்கினார்.

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை
# (வேலைவாய்ப்புப் பிரிவு)



திருவள்ளூரில் 18.12.2021 அன்று நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில், தேர்வு செய்யப்பட்ட வேலைநாடுநர்களுக்கு மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள் மற்றும் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை
## (வேலைவாய்ப்புப் பிரிவு)




கடலூர் மாவட்டம், திட்டக்குடியில் 04.12.2021 அன்று நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில், தேர்வு செய்யப்பட்ட வேலைநாடுநர்களுக்கு, மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.சி.வி.கணேசன் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை
## (பயிற்சிப் பிரிவு)



அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், மதுரையில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் வயர்மேன் தொழிற்பிரிவு செய்முறைப் பயிற்சியினை ஆய்வு மேற்கொண்டார். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் ஆகியோர் உடன் உள்ளனர்.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை
## (பயிற்சிப் பிரிவு)



அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், இராதாபுரத்தில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மோட்டார் மெக்கானிக் தொழிற்பிரிவில் ஆய்வு மேற்கொண்டார். மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் உடன் உள்ளார்.



அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், அம்பத்தூரில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆகியோர் உடன் உள்ளனர்.

## தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்



மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் முன்னிலையில் 09.03.2022 அன்று தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமும் 11 துறைத் திறன் குழுமத்தினரும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டனர்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.